DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1388
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 11, 2022


## இனிமையான புதிய பக்திப் பாடல்கள் இல்லாத குறையை "வாணிதாசன்" எழுதி இசைத்தட்டில் வெளியிட்டுள்ள "முத்துத் தேடல் " பாடல்கள் நீக்கியுள்ளன

### "முத்துத் தேடல்" பக்திப் பாடல்கள் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் புகழாரம்



தற்காலத்தில் நாம் பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த பக்திப் பாடல்களைத் தவிர தற்காலத்தில் இனிமையான புதிய பக்திப் பாடல்கள் வெளிவருவது அரிதாக உள்ளது. அவ்வாறு இல்லாத குறையை "வாணிதாசன்" ஏழுதி இசைத்தட்டில் வெளியிட்டுள்ள "முத்துத் தேடல் "பாடல்கள் நீக்கியுள்ளன. சிறந்த கவித்துவம் கொண்ட ஆறு பாடல்களைத் தந்த அவரை நாம் அனைவரும் எதிர்காலத்தில் ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று கனடா ஸ்காபுறோ நகரில் வெளியிடப்பெற்ற "முத்துத் தேடல்" பக்திப் பாடல்கள் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் புகழாரம் சூட்டினார்.

(தொடர்ச்சி 23ம் பக்கத்தில்)

## Strikes deny Ontario students, their right to learn and affect their education too. - Ontario's Education Minister

## வேலைநிறுத்தங்கள் ஒன்றாறியோ மாணவர்களின் கற்கும் உரிமையை மறுத்து அவர்களின் கல்வியையும் பாதிக்கின்றன — ஒன்றாரியோ கல்வி அமைச்சர் தெரிவிப்பு



வேலைநிறுத்தங்கள் ஒன்றாறியோ மாணவர்களின் கற்கும் உரிமையை மறுத்து அவர்களின் கல்வியையும் பாதிக்கின்றன. இதுமட்டுமன்றி பெற்றோர்களுக்கும் தேவையற்ற அசவுகரியங்களை ஏற்படுத்துகிறன. எனவே தான் நாம் பாடசாலை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் எமது சபையில் தாக்கல் செய்த சட்டமூலத்தையும் திரும்பப் பெற்றோம் . அத்துடன் தொழிற்சங்கத்தின் கோரிக்கையை ஏற்று மீண்டும் சம்பள உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டிபன் லெச்சே அவர்கள்.

(தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)


HELP WANTED
Part-time (evenings and Saturdays)
General helper needed for a furniture finishing shop.
Call: 416-636-3655

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் தேவை

சமையல் உதவி, வீட்டு வேலைக்கு பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. பகிரும் அறையொன்றில் தங்கியிருக்கலாம்.
வேலை செய்ய வேண்டிய இடம்: **Maple.** நகரத்தில் **Weston road and Major Mackenzie** சந்திப்புக்கு அருகில்..
அழைக்க வேண்டிய இலக்கம் - *416 428 2141*

## காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.

**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net

1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, கனடாவில் பிறந்த எனது 29 வயது மகளுக்கு நன்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை.

**தொடர்புகளுக்கு:** RAJ
(647) 293-2784
(phone or text)

## KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham


## Help Wanted

**Part-time (evenings and Saturdays) General helper needed for a furniture finishing shop.**

**Call: 416-636-3655**

## தையல் வேலைக்கு பெண்கள் தேவை

**Scarborough** நகரத்தில் **Markham & Steels** சந்திப்புக்கு அருகில் உள்ள தொழிலகம் ஒன்றுக்கு தையல் வேலைக்கு பெண்கள் தேவை. சாறி பிளவுள் மற்றும் சிறுவர்களின் ஆடைகள் ஆகியவற்றை தைக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.
**416 419 3078**
**Call after 6.00 P.M only**






## உதயன் கதிரோட்டம்

# அன்றைய அங்கீகரிக்கப்பெற்ற புலம் பெயர்வும் இன்றைய ஆபத்துக்கள் நிறைந்த புலம்பெயர்வும்

இலங்கையிலிருந்து மக்கள் புலம் பெயர்ந்து மேற்குலக நாடுகளுக்கு செல்வது கடந்த அரை நூற்றாண்டாக இடம்பெற்றுவரும் பயணங்களுக்குள் அடங்கும் ஒன்றாகும். அன்றைய நாட்களில் அங்கீகரிக்கப்பெற்ற புலம் பெயர்வாகவும் இன்றைய நாட்களில் இவ்வாறான பயணங்கள் ஆபத்துக்கள் நிறைந்த புலம்பெயர்வாகவும் அறிவிக்கப்பட்ட நிலையில் இலங்கையில் முன்னரைவிட பொருளாதாரப் பிரச்சனைகளும் இனவாதப் பிரச்சனைகளும் அதிகரித்துக் காணப்படுவதால் அங்குள்ள மக்கள் நாட்டை விட்டு மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்வதற்கான ஆர்வத்துடனேயே உள்ளார்கள் என்பது நிதர்சனமாகும்.

தற்காலத்தில் இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக படகுகளிலும் கப்பல்களிலும் மேற்குலக நாடுகளுக்கு பயணிப்பவர்களை எச்சரிக்கும் வகையில் சில நாடுகளின் அரசாங்கங்கள் இலங்கையிலிருந்து வெளிவரும் தேசியப் பத்திரிகைகளிலும் விளம்பரங்களை பிரசுரிக்கின்றன. தங்கள் நாட்டு அரசாங்கங்கள் இவ்வாறு சட்டவிரோதமாக ஆபத்துக்கள் நிறைந்த பயணங்களை மேற்கொண்டு வரும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் நிச்சயமாக நாடு கடத்தப்படுவார்கள் என்ற கடுமையான முடிவுகளைக் கூட அந்த விளம்பரங்களில் குறிப்பிடத் தவறுவதில்லை.

இவ்வாறான கடும்போக்கான நிலைப்பாடுகள் உலக நாடுகளால் கடைப்பிடிக்கப்படும் போத அபிவிருத்தி அடைந்துள்ள மேற்குலக நாடுகளுக்கு கடல்மார்க்கமான சட்டவிரோதப் புலம்பெயர்வு முயற்சிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இவ்வாறான முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும், மீன்பிடிப் படகுகளில் கடல்மார்க்கமாக மேற்கொள்ளும் முயற்சிகள் பாதுகாப்பற்றவையும் உயிராபத்து மிக்கதுமாகும் என்றும் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றது.

அப்படியிருந்தும் சட்டவிரோதமான முறையில் பாதுகாப்பற்ற மீன்பிடிப்படகுகளில் கடல்மார்க்கமாகப் புலம்பெயர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் சிலாபம், மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தறை போன்ற பல பிரதேசங்களில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணிக்க ஏற்பாடு செய்ய செய்யப்பட்டிருந்த படகுகளும் கைப்பற்றுள்ளன. அதேநேரம் ஒருசிலர் இந்நாட்டின் கடற்பரப்புக்குள் வைத்தும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத புலம்பெயர்வு நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான முயற்சிகளும் அடிக்கடி இடம்பெறவே செய்கின்றன. சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் ஏமாற்று வார்த்தைகளை நம்பியே இவ்வாறான முயற்சிகளில் பலர் ஈடுபடுகின்றனர். ஆனால் கடல்மார்க்கமான சட்டவிரோதப் புலம்பெயர்வு மிகவும் ஆபத்தானதும் பயங்கரமானதுமாகும். ஆழ்கடலில் இடம்பெறும் அனர்த்தங்களும் அதன் விளைவான மரணங்களும் இதற்கு நல்ல சான்றுகளாகும்.

இவ்வாறான ஆட்கடத்தல் வியாபாரம் உலகின் எல்லா எல்லாப் பிராந்தியங்களிலும் இடம்பெறவே செய்கின்றது. இன்றைய காலகட்டத்தில் அதிக இலாபம் ஈட்டக் கூடிய ஒரு செயற்பாடாகவே இவ்வியாபாரம் விளங்குகிறது. எனவேதான் மக்களின் விருப்பம் கருதி அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கோடிக்கணக்கான தொகையை வசூலித்த பின்னரும் அப்பாவி மக்களை ஏமாற்றும் கடத்தல்காரர்கள் தான் உசாராக செயற்படுகின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது.

சட்டவிரோத புலம்பெயர்வுக்கு எதிரான கடும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழலிலும் கூட 300 க்கும் மேற்பட்ட இலங்கையர் பயணித்துக் கொண்டிருந்த மீன்பிடிக் கப்பலொன்று வியட்நாம் நாட்டின் தெற்குக் கடற்கரையில் அமைந்துள்ள வொங் தௌ துறைமுகத்தில் இருந்து 258 கடல்மைல் தொலைவில் பிலிப்பைன்ஸுக்கும் வியட்நாமுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இரண்டொரு தினங்களுக்கு முன் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது. அச்சமயம் கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்பட்டுள்ளதோடு, குறித்த கப்பல் கடுங்காற்றில் சிக்குண்டதால் கப்பலின் என்ஜின் பகுதிக்குள் கடல்நீர் உட்புகுந்திருக்கின்றது.

இது தொடர்பில் விரைந்து செயற்பட்ட இலங்கை கடற்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம், இவர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்கு சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியைக் கோரியது. அக்கோரிக்கைக்கு சிங்கப்பூர் உடனடியாக பதிலளித்தது. வியட்நாம் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தினர் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள கப்பலுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும் முயற்சியை மேற்கொண்டதோடு, இக்கப்பல் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள கடற்பிராந்தியத்தில் அவ்வேளையில் காணப்பட்ட கப்பல்களுக்கு அவசர உதவிக்கான சமிக்ஞையையும் விடுத்தனர்.

அந்த சமிக்ஞையின் அடிப்படையில் அச்சமயம் ஜப்பானிய கொ-டியுடன் அப்பிராந்தியத்தில் காணப்பட்ட ஹீலியோஸ் லீடர் என்ற கப்பல் விரைந்து செயற்பட்டதோடு மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் இருந்த 264 ஆண்களையும் 19 பெண்களையும் 20 குழந்தைகளையும் நேற்றுமுன்தினம் பாதுகாப்பாக மீட்டு, வியட்நாம் வொங் தௌ துறைமுகத்திற்கு அழைத்து சென்றது. உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் தற்போது வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அனர்த்தத்திற்கு உள்ளான லேடி 3 என்ற இக்கப்பல், 300 க்கும் மேற்பட்ட இலங்கையருடன் தாய்லாந்தில் இருந்து மியன்மார் நாட்டு கொடியுடன் கனடா நோக்கி பயணித்துக் கொண்டிருந்ததாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. ஆனால் கடல்மார்க்கமான சட்டவிரோத புலம்பெயர்வு மிகப் பயங்கரமானதும் ஆபத்துக்கள் நிறைந்ததும் ஆகும் என்பதற்கு இந்த சம்பவமும் நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆகவே கடல்மார்க்கமான சட்டவிரோத புலம்பெயர்வை எந்த நாட்டை நோக்கிச் சென்றாலும், அவை நிச்சயமற்றவை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். குறித்த ஆட்கடத்தல்காரர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமா-றுவதையும் உயிராபத்து மிக்க அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்வதோடு வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் இவ்வாறான செயல்களுக்குள் தங்கள் உறவினர்களையோ அன்றி நண்பர்களையோ தள்ளிவிடுவதும் தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

பின் பக்கத் தொடர்ச்சி.........

# வியட்னாமில் உள்ள இலங்கையர்கள் அனைவரையும்...

தற்போது வியட்னாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் அனைவரும் மலேசியாவிற்கு விமானம் மூலம் சென்று, படகு மூலம் வேறொரு நாட்டுக்கு செல்வதற்காக பயணித்துள்ளதாக வியட்னாமிய கடற்படை அதி-காரிகள் இலங்கை கடற்படையினருக்கு அறிவித்துள்ளதாகவும் கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது இவ்வாறிருக்க ஆபத்தான பயணத்தின் போது கடலில் சிக்கிய 303 இலங்கையர்கள் மற்றும் பதறும் உறவினர்களின் குரல்கள் பதியப்பெற்ற ஒளி நாடாக்கள் சமூக ஊடகங்களில் பரவலாக பதிவு செய்யப்பட்டுள்ளதும் உலகத் தமிழர்கள் அறிந்த ஒன்றே.

மேலும் படகில் ஏறுவதற்கு முன் சட்டவிரோத பயணத்திற்காக ஆட்கடத்தல்காரர்களுக்கு பல இலட்சம் ரூபாய் பணத்தினை இந்த இலங்கையர்கள்கொடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

வியட்னாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் அனைவரும் அங்குள்ள அதிகாரிகளுக்கு தெரிவித்த கருத்துக்களின்படி, இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையும் அரசியல் நெருக்கடிகளையும் சமாளிக்க முடியாத சூழ்நிலையிலேயே, தாம் அனைவரும் கனடா நோக்கி அகதிகளாக செல்ல முயற்சித்ததாக தெரவித்துள்ளனர் எனஅறியப்படுகின்றது அத்துடன் அவர்கள் அனைவரும் மீண்டும் இலங்கைக்கு செல்ல மறுப்பு தெரிவித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறானதொரு ஆபத்தான கடற் பயணத்தின் போது மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு உள்ளூர் அதிகாரிகளால் உணவு, தங்குமிடம் ஆகியவை மிகவும் நேர்த்தியாக வழங்கப்படுகிறதாக வியாட்நாமிலுள்ள இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

கனடியத் தேசிய வீரர் நினைவு நாள் நவம்பர்-11.11.2022.

நவம்பர்11.2022 வெள்ளிக்கிழமை அன்று, கனடியத் தேசிய வீரர் நினைவு நாள் ஆகும். கனடா வாழ் மக்கள் அனைவரும் கனடியத் தேசிய வீரர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செய்யும் இந்த வணக்க நாள், ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரப்படுவதை நாம் அனைவரும் அறிவோம். 11.11.2022 அன்று, கனடா வாழ் அனைத்து மக்களோடும், தமிழ் மக்கள் அனைவரோடும் இணைந்து நின்று கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சொந்த மண்ணை விட்டுப், புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் ஈழத் தமிழ் மக்களாகிய எமக்குக் கனடிய மண் ஆதரவு தந்து வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. கனடா வாழ் ஈழத் தமிழர்களாகிய நாம், இங்கு வாழும் பல்லினப் பண்பாட்டு மக்களோடு வாழும் எமது நல் வாழ்வுக்காகக் கனடிய மண்ணை மதித்துப் போற்றுகின்றோம். நன்றியுணர்வோடும் வாழ்கின்றோம். கனடிய மண்ணுக்காகத் தாயக உணர்வோடு, தமது தேசியக் கடமையைச் செய்த கனடியத் தேசிய வீரர்கள் அனைவரையும் நாம் பொப்பி மலர் அணிந்து, வணங்கி நிற்கின்றோம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், 11.11. 2022 வெள்ளிக்கிழமை அன்று, கனடா வாழ் ஈழத் தமிழ் மக்கள் அனைவரோடும் இணைந்து நின்று கனடியத் தேசிய வீரர் நினைவு நாளை நினைவு கூர்கின்றது. நன்றி வணக்கம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம் 647 619 3619
ctro@tamilremembrance.com.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் பகுதிகள் பெரும்பான்மையினருடைய பிரதேசங்களுடன் இணைக்கப்படுகிறதா?? அடைக்கலநாதன் MP கேள்வி



எல்லை நிர்ணயம் மூலம் தமிழ் பிரதேசங்களை பெரும்பான்மையினருடைய பிரதேசங்களுடன் இணைக்கும் செயற்பாடு இடம் பெறுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எல்லை நிர்ணயம் தொடர்பாக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியாவில் பல கிராமங்களை அனுராதபுரத்துடன் இணைக்கும் செயற்பாடாகவும், திருகோணமலையின் சில பிரதேசங்களை பொலனறுவையுடன் இணைக்கும் செயற்பாடாகவும், தமிழ் பிரதேசங்கள் பெரும்பான்மையினர் உடைய பிரதேசங்களுக்குள் உள்வாங்குவதற்கான செயற்பாடாகவும், எங்களது பிரதேசங்களை காவு கொள்ளக்கூடிய நிகழ்ச்சி நிரலிலே எல்லை நிர்ணயம் இடம் பெறலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்த எல்லை நிர்ணயம் தொடர்பாக வெளிப்படைத்தன்மை இருப்பதோடு இது தொடர்பாக மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அத்துடன் ஐந்து பேரை உள்ளடக்கிய எல்லை நிர்ணய குழு தனித்து, தன்னிச்சையாக தங்களது முடிவினை எடுத்து செயற்படுவதற்கு ஒரு காலமும் அனுமதிக்க மாட்டோம்.

மேலும் இதன் ஊடாக நகரசபை மற்றும் பிரதேச சபை தேர்தல்களினை பிற்போடுவதற்கான நிலையும் காணப்படுகின்றது. அத்துடன் தற்போது நகரசபை மாநகரசபையாகவும், பிரதேச சபைகள் நகரசபை களாகவும் மாற்றப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணம் செய்யாமல் எவ்வாறு சபைகளை தரமுயர்தினார்கள் என்பது கேள்வி எழுந்துள்ளது. ஆனால் எல்லை நிர்ணயத்தை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடத்தி முடித்து தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை முன்னெடுக்க வேண்டும்.

காலத்தை பின்னடிக்காது உடனடியாக ஒரு கால எல்லைக்குள் எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டு அதனை மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடம் காணப்பித்து தேர்தலை நடத்த வேண்டும். மக்களது பொதுவான அபிப்பிராயத்தை பெறுவதற்காக தேர்தல்களை பின் போடாது நடத்துவதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் மக்களால் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது மீள தமது செல்வாக்கை நிலைநிறுத்த முற்படுகிறார்கள். ஜனாதிபதி அவர்கள் சனநாயகத்தை பேசிக் கொண்டு அவர்கள் சொல்லும் செயற்பாட்டை செய்யக்கூடாது.

அவர்களின் நிகழ்ச்சி நிரலில் ஜனாதிபதி செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு பலரிடம் இருக்கின்றது. இதனை ஜனாதிபதி மாற்ற வேண்டும்.

இது தவிர, மஹிந்த அமரவீர அமைச்சர் கடந்த 23 ஆம் திகதி வவுனியாவிற்கு விஜயம் செய்தார். விவசாய அமைப்புக்களை அழைத்து வனவளத் திணைக்களங்களின் காணிகளில் உளுந்து சாகுபடி செய்யலாம் என ஆசை வார்த்தை கூறினார்.

தற்போது காணிகளை துப்பரவு செய்து விவசாயிகள் உழும் மட்டும் பொறுமையாக இருந்த வன இலாகா அவர்கள் உழுத பின் அதில் காட்டு மரங்களை நடும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

இதனை ஏற்க முடியாது. இது பற்றி பாராளுமன்றத்திலும் பேசுவோம். பணத்தை செலவு செய்து உழுத பின் வன இலாகா செய்யும் செயற்பாடு ஏற்க முடியாது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வன இலாகா வழக்கு தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சர் மௌனம் காட்டாது உடனடியாக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகையும் விடுவிக்க மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



அத்து மீறி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ச்சியாக கைது செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த மாதம் 27 மற்றும் இந்த மாதம் 5ம் தேதி மீன்பிடிக்க சென்ற மீனவர்களையும் படகையும் இலங்கை கடற்படை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட மீனவர்கள் கூட்டத்தில் முடிவு செய்தனர்.



இந்த நிலையில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கை வசம் இருக்கும் 22 மீனவர்களையும் விடுவிக்க வேண்டும். அதே போல 2017ம் ஆண்டு முதல் தற்போது வரை இலங்கை வசம் உள்ள படகுகளை விடுவிக்க வேண்டும். பாரம்பரிய இடத்தில் மீனவர்கள் மீன் பிடிக்க வழிவகை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், தங்களது கோரிக்கைகளை மத்திய மாநில அரசுகளுக்கு தெரிவிக்கும் விதமாகவும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டமும், கண்டன ஆர்ப்பாட்டத்திலும் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

செவ்வாய்க்கிழமை (8) தங்கச்சிமடம் வலசை தெருவில் 200க்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் மீனவ பெண்கள் ஒன்று சேர்ந்து மத்திய மாநில அரசுகளுக்கு தங்களது கோரிக்கையை வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பி தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த மீனவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்த போராட்டம் காரணமாக சுமார் 15,000 மேற்பட்ட மீனவர்கள் வேலை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர் 14 பேரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

## 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க உத்தரவு

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களில் 14 பேரை எதிர் வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதோடு, 14வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க மன்னார் நீதவான் திங்கட்கிழமை (7) மதியம் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் சனிக்கிழமை இரவு 2 படகையும் அதில் இருந்த 15 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர். இவர்கள் ஞாயிற்றுக்கிழமை (6) காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன் போது மீனவர்களில் இருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் தலை மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக ஞாயிற்றுக்கிழமை (6) மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.







ஏனைய 13 இந்திய மீனவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின் ஞாயிற்றுக்கிழமை (6) மாலை மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 2 மீனவர்களும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நிலையில் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த 15 இந்திய மீனவர்களையும் திங்கட்கிழமை (7) மதியம் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் 14 பேரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, 14வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

# புதுக்குடியிருப்பில் மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கிவைப்பு!

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணையினை வழங்கிவைத்துள்ளார்கள்.

கடற்தொழிலாளர்களுக்கு என வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற மண்ணெண்ணையினை மக்களுக்கு வழங்கிவைத்துள்ளார்கள்.

நீண்டகாலமாக மண்ணெண்ணைய் இல்லாத நிலையில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள கடலடி காரணமாக கடற்தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லமுடியாத நிலையில் அவர்களுக்கு என வந்த மண்ணெண்ணையினையிலே மக்களுக்கு தலா 500 ரூபாவிற்கு வழங்கிவைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



1ம் வட்டாரம், கைவேலி, தேவிபுரம், வள்ளிபுனம் ஆகிய பிரதேசமக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் பிரதான பால நுழைவாயில் பகுதியில் இடிந்து விழும் நிலையில் காணப்படும் மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சமாச கட்டிடம்

மன்னார் பிரதான பால நுழைவாயில் பகுதியில் மன்னார் நீதிமன்றத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சமாச கட்டிடம் மிகவும் பாழடைந்து, இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்ற நிலையில் மன்னாரிற்கு ஞாயிற்றுக்கிழமை (6) விஜயம் மேற்கொண்டு வருகைதந்த வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் குறித்த கட்டிடத்தை நேரடியாக சென்று பார்வையிட்டனர்.



மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேலின் கோரிக்கைக்கு அமைவாக ஞாயிற்றுக்கிழமை (6) மதியம் குறித்த பகுதிக்குச் சென்ற வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் குறித்த கட்டிடத்தை நேரடியாக பார்வையிட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட அமைச்சர் குறித்த கட்டிடத்தை முழுமையாக அகற்றி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



இதன் போது குறித்த பகுதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டீமெல், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் உற்பட திணைக்கள தலைவர்கள் சென்றிருந்தனர்.

குறித்த கட்டிடம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களில் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தினத்தை ஒட்டி சிரமதானம்



## மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அடம்பன் பொலிஸார் அச்சுறுத்தல்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரால் ஞாயிற்றுக்கிழமை (6) காலை சிரமதான பணிகள் இடம் பெற்றது.

எனினும் அங்கு சென்ற அடம்பன் பொலிஸார் சிரமதானம் மேற்கொண்டமை குறித்து விசாரணைகளை மேற்கொண்ட தோடு, மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அச்சுறுத்தியுள்ளனர்.



குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினர் ஞாயிற்றுக்கிழமை(6) காலை சிரமதான பணிகள் இடம் பெற்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி (27-11-2022) மாவீரர் தின நினைவேந்தல் இடம் பெறவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் செய்யப்பட்டு, மாவீரர்களின் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு, இறுதி நாளான எதிர்வரும் 27ஆம் திகதி மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினர் ஞாயிற்றுக்கிழமை (6) காலை சிரமதான பணிகள் இடம் பெற்றது. குறித்த சிரமதான நிகழ்வில் மாவீரர்களின் உறவினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சிரமதானம் முடியும் நிலையில் துயிலும் இல்ல பகுதிக்கு வந்த அடம்பன் பொலிஸார் சிரமதானம் மேற்கொண்டமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டதோடு, எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என தெரிவித்து அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அங்கிருந்து சென்றனர்.

**- மன்னார் நிருபர்**


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் ராஜபக்ச குடும்பம் போல ஆட்சி செய்து வரும் அதிபர் உட்பட சில ஆசிரியர்களை இடமாற்ற கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டம்

அம்பாறை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் ராஜபஷ குடும்பம் போல ஆட்சி செய்துவரும் பாடசாலை அதிபர் மற்றும் மாணவிகள் மீது பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியர் உடனடியாக இடமாற்றக் கோரி பாடசாலைக்கு முன் புதன்கிழமை (09) காலை பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பாடசாலையில் இடம்பெற்று வரும் நிர்வாக சீர்கேட்டினால் புதன்கிழமை (9) இரு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவன் உயிரிழந்துதள்ளார்.



இவ்வாறு தொடர்ந்து மாணவர்கள் பாதிக்கப்படுவதையிட்டு பெற்றோர்கள் பாடசாலைக்கு முன் இன்று காலை 8 மணிக்கு ஒன்றினைந்தனர்.

இதன் போது பாடசாலையின் நிர்வாக சீர்கேடே மாணவனின் உயிரை பறிக்க காரணம், கல்வி அமைச்சே பொருத்தமான அதிபரை நியமி, வெளியில் மதுபானம் விற்பவர் பாடசாலை சிற்றுண்டி விற்பதா?, தேசிய பாடசாலையை நாசம் செய்ய வந்த கூட்டமே வெளியேறு, அன்று ஏழைகளின் கஞ்சிப்பானையில் அடித்தவன் இன்று கல்வியை அழிக்க வந்ததா?. பாலியல் சீண்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்குமா?.




பாடசாலைக்கு வந்து கல்வி புகட்டாத பாதகர்களே வெளியேறு, அண்ணன் தம்பி உறவு சாகவாசம் அன்னை கல்வியை அழிப்பதா? போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு சுமார் ஒருமணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மன்னார் மறைசாட்சிகள் வரலாற்றை வெளிக்கொணர்ந்த "வித்துக்கள்" திரைப்படம்

மன்னார் மறைசாட்சிகள் வரலாற்றை வெளிக்கொணர்ந்த “வித்துக்கள்” திரைப்படம் மன்னார் (SUN) சன் திரையரங்கில் உத்தியோகபூர்வமாக செவ்வாய்க்கிழமை (8) மாலை வெளியீடு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்கள், அருட்பணி பிரசாத், அருட்பணி அன்ரனி, திரைப்பட இயக்குநர், மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ், அருட்பணியாளர்கள், திரைப்படத்தில் நடித்த மன்னார் மறைமாவட்டத்தை சேர்ந்த கலையருவி கலைஞர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இவ்வாறு 200 மேற்பட்டவர்கள் இணைந்து கொண்டனர்.





தொடக்க நிகழ்வில் விருந்தினர் மாலையிட்டு வரவேற்க்கப்பட்டனர்.

காலம்சென்ற சங்கிலி அரச வேடத்தில் நடித்த தர்ஷன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. சிறப்பு உரைகள் இடம்பெற்றது.

திரைப்பட குழுவினர்கள் பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தி கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் திரைப்படம் காண்பிக்கப்பட்டது.



- மன்னார் நிருபர்



# தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான "சமஷ்டி அரசியல் தீர்வு" வேண்டிய மக்கள் பிரகடனம்

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகார பகிர்வு கோரிய நூறு (100) நாட்கள் செயல் முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம். 8 கார்த்திகை 2022 அன்று காலை 10.30 மணிக்கு வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் நடைபெற உள்ளது என்பதை வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் அறியத்தருகின்றோம், என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இவ்விடையம் தொடர்பாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், “வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல் முனைவுடைய மக்கள் குரலானது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் இவ்வருடம் ஆவணி முதலாம் திகதி முதல் இன்று வரை நடைபெற்று வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

குறிப்பாக, 1948 இற்கு பின் இலங்கையின் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வந்த இனவாத அடிப்படையிலான அரசியல், பொருளாதார, சமூக, இன ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன் முறைகளின் காரணமாகவே வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், திட்டமிட்ட வகையில் சிங்கள பேரினவாத சக்திகளால் 2006ல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987 இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலமான 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

இந்தக் கால இடைவெளியில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பல வருட கால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர்.

போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையில் நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்று வரையில் தமிழ் சமூகம் எதிர்கொண்டு வருகிறது.

எனவே, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டு வரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டுவந்து, சுயகௌரவம் உள்ள உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்று அவசியத்தை வலியுறுத்துகிறோம்.

அந்த அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் 100 செயல்முனைவானது “வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் மக்கள் குரலின் ஊடாக முன்வைக்கப்படும் மக்கள் பிரகடனமாகவே “ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையின் அரசியல் தீர்வு” என்பது அமைந்துள்ளது.

எனவே வடக்கு கிழக்குத் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இம் மக்கள் பிரகடனத்திற்கான ஒன்று கூடலில் அனைவரும் பங்கேற்று தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையை ஒரே குரலில் ஓங்கி ஒலிக்குமாறு கோருகிறோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 08 மாவட்டங்களிலும் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மக்கள் பிரகடனக் கூடல்கள் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்கா, நல்லூர். யாழ்ப்பாணம், அம்பாறை காரைதீவு பிரதேச பூங்கா, காரைதீவு. அம்பாறை, கிளிநொச்சி இளைஞர் மட்டம் விளையாட்டு மைதானம்,பரந்தன் சந்தி, கிளிநொச்சி, மட்டக்களப்பு மட், புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு மைதானம், தன்னாமுனை, மட்டக்களப்பு, வவுனியா நகரசபை மைதானம், திருகோணமலை திருகோணமலை முத்தவெளி வெளியரங்கு, திருகோணமலை, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை விளையாட்டு மைதானம், முல்லைத்தீவு. மன்னார் பொது விளையாட்டரங்கு போன்ற இடங்களில் நூறு (100) நாட்கள் செயல் முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம் இடம் பெற உள்ளது.

- மன்னார் நிருபர்

# யாழ் .இந்திய துணை தூதரக அலுவலகத்தின் மீது தாக்குதல்

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**




யாழ். மருதடி வீதியில் உள்ள யாழ். இந்திய துணை தூதரக அலுவலகத்தின் மீது நேற்றிரவு இனம் தெரியாத நபர்களினால் கண்ணாடி போத்தலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இரவு யாழ். இந்திய துணை தூதரக அலுவலகத்திற்கு முன்னால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் இன்று யாழ் இந்திய துணை தூதுவரினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் தற்பொழுது யாழ். பொலிசார் மற்றும் தடவியல் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலையின் திறன் வகுப்பறை மாணவர்களின் செயற்பாடுகள் ஆரம்பித்து வைப்பு



தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம் (IFTF), கணபதிநிதியம் ஐக்கிய இராட்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன், IMHO, USA ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் யா/மந்துவில் றோ.க.த.க பாட-சாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நவம்பர் 7ம் திகதி குதூகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் வித்தியாலய அதிபர் திரு. ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக கணபதி நிதிய இணைப்பாளர் திரு. க.ராஜேந்திர அவர்களும் தென்மராட்சிக்கல்வி வலய விஞ்ஞான பாட வளவாளர் திரு. சி.சக்திதரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஏற்கெனவே பயிற்சி வழங்கப்பட ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவ மாணவிகள் திறன் பலகையில் தமது பாடங்களை நிகழ்த்திய பாங்கு நிகழ்வில் பங்கேற்றவர்களை ஈர்த்ததை காணமுடிந்தது. ஆசிரியர் ஒருவரும் திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இந்நிகழ்வில் செய்து காட்டியமை குறிப்பிடத்தக்கது.



உதவியளித்திருந்த அமைப்புக்களுக்கு அதிபர் உட்பட விருந்தினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் திறன் பலகையை தம் கற்றல் கற்பித்தல் செயற்படுத்தும் ஆசிரியர்களுக்கான உபாயங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்கள் தமது ஆராய்வூக்கம் மற்றும் ஆக்குதிறன் முயற்சிகளுக்காக எவ்வாறு திறன் பலகையை பயன் படுத்தி சிறப்பாக துலங்கலாம் என்பது பற்றிய அறிவுரைகளும் விருந்தினர்களால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு மாணவி ஒருவரது நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

# பசுமை இயக்கத்தின் பழமுதிர்ச்சோலை

## மரநடுகைமாத செயற்றிட்டம் ஆரம்பம்








தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாகப் பழமுதிர்ச்சோலை என்ற திட்டத்தை இந்த ஆண்டு முன்னெடுத்துள்ளது. ஆலயங்கள் தோறும் பழமரங்கள் நாட்டுவோம் என்ற கருப்பொருளில் முனெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி திங்கட்கிழமை (07.11.2022) சம்பிரதாயபூர்வமாகப் பூநகரியில் இடம்பெற்றுள்ளது. பூநகரி ஸ்ரீ சர்வவிக்கின விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய அறங்காவலர் குழுவினர்களிடம் பழமரக்கன்றுகளை வழங்கியதோடு, மரக்கன்றுகளை நாட்டியும் வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பூநகரி பிரதேசமருத்துவமனை மருத்துவ அதிகாரி ஸ்ரீ. அனந்தஸ்ரீயும் கலந்துகொண்டிருந்தார். தொடர்ந்து, பூநகரி ஞானிமடம் கொட்டிலுப் பிள்ளையார் ஆலயம் மற்றும் பூநகரி பிரதேசமருத்துவமனைக்கும் பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணசபை 2014ஆம் ஆண்டு கார்த்திகையை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. கார்த்திகை மழைவீழ்ச்சிகூடிய மாதம் என்பதோடு தமிழ்த்தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாதமாகும். தமிழ்மக்கள் இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்யும் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளனர். மாவீரர்களை நினைவேந்தும் நாட்களும் இம்மாதத்திலேயே அடங்குவதால் இம்மரநடுகை மாதத்தைப் பொதுஅமைப்புகளும் பொதுமக்களும் ஆண்டுதோறும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கார்த்திகை மாத மர நடுகை முருங்கன் மத்திய கல்லூரியில் நடைபெற்றது

## மன்னார் முருங்கன் மத்திய கல்லூரியில் கார்த்திகை மாத மர நடுகை





"மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் முருங்கன் மத்திய கல்லூரியில் மர நடுகை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வு முருங்கன் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், வன்னிமண் அறக்கட்டளை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், கலந்து கொண்டனர்.

இதன் போது பாடசாலை வளாகத்தில் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டது.

- மன்னார் நிருபர்





# மக்கள் விரும்பிய மாற்றம் இன்னும் ஏற்படவில்லை

## ரணிலுக்கு சஜித் சாட்டையடி !!!

இலங்கையில் மக்கள் விரும்பிய மாற்றம் இன்னும் ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

"நாட்டில் மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் எதற்கு? ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்பதை எதிரணியினர் புரிந்துகொள்ள வேண்டும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "ரணில் - ராஜபக்சே அரசுக்கு எதிராக எமது போராட்டம் - பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

குறுக்கு வழியில் ஆட்சியை பிடிப்பது எமது நோக்கம் அல்ல. அடக்கு முறைகளை உடனடியாக நிறுத்தவே கோருகின்றோம்.

அடக்குமுறைகள் தொடர்ந்தால் கோட்டாபய ராஜபக்ஷ போல் ரணில் விக்கிரமசிங்கவும் வீட்டுக்கு ஓட வேண்டி வரும்.

நாட்டு மக்கள் விரும்பிய மாற்றம் இன்னும் ஏற்படவில்லை. முன்னர் ராஜபக்ச அரசு ஆட்சியில் இருந்தது. தற்போது ரணில் - ராஜபக்சே அரசு ஆட்சியில் இருக்கின்றது.

இதுவா மாற்றம்? இந்த மாற்றத்தையா மக்கள் விரும்பினார்கள்?

மக்கள் இன்னமும் கொதி நிலையில் தான் இருக்கிறார்கள். மக்கள் பக்கம் நாமும், எமது பக்கம் மக்களுமாக இருக்கின்றோம்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தால் தான் "ஜனாதிபதி கதிரையில் தான் அமர்ந்தார் என்பதை ரணில் விக்கிரமசிங்க மறக்கக்கூடாது" என்றார்.



# யாழ் சித்த மருத்துவபீடம் மாணவியே விபத்தில் பலி

வவுனியாவில் சன்றிரவு (நவ.05) இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த யுவதி நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் கல்வி பயின்ற, 23 வயதான ராமகிருஷ்ணன் சயாகரி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.


## எமது தாய் மண்ணாம் வன்னிப்பிராந்தியத்தில் நீர் முகாமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடல்

--------------------------------

**கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் கலந்துரையாடவும் அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.**

**இங்ஙனம்,**

**வன்னியியல் ஆய்வுமன்றம்**





# இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் ரிஷாட் பதியுதீன் எம்.பி க்கும் இடையில் விசேட சந்திப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு செவ்வாய்கிழமை (08) கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் இடம் பெற்றது.

இதன்போது இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை குறித்தும், விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் இக்கட்டான பொருளாதார நெருக்கடி காலங்களில் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கியமைக்காக உயர்ஸ்தானிகருக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

- மன்னார் நிருபர்

கனடிய செய்திகள் Canadian News

# Strikes Deny Ontario Students, Their Right to Learn and Affect Their Education Too. - Ontario's Education Minister

# வேலைநிறுத்தங்கள் ஒன்றாறியோ மாணவர்களின் கற்கும் உரிமையை மறுத்து அவர்களின் கல்வியையும் பாதிக்கின்றன

## ஒன்றாரியோ கல்வி அமைச்சர் தெரிவிப்பு



வேலைநிறுத்தங்கள் ஒன்ராறியோ மாணவர்களின் கற்கும் உரிமையை மறுத்து அவர்களின் கல்வியையும் பாதிக்கின்றன. இதுமட்டுமன்றி பெற்றோர்களுக்கும் தேவையற்ற அசவுகரியங்களை ஏற்படுத்துகிறன. எனவே தான் நாம் பாடசாலை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் எமது சபையில் தாக்கல் செய்த சட்டமூலத்தையும் திரும்பப் பெற்றோம். அத்துடன் தொழிற்சங்கத்தின் கோரிக்கையை ஏற்று மீண்டும் சம்பள உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டிபன் லெச்சே அவர்கள். கடந்த திங்கட்கிழமை முதல் முடிவுக்கு கொண்டு வரப்பெற்ற கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் தொடர்ந்து ஒன்றாரியோ மாணவர்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

"ஒன்றாரியோ வாழ் மாணவர்களுக்கான ஸ்திரத்தன்மையையும் உறுதியையும் வழங்கி, அவர்களை வகுப்புகளில் கல்விபயில வைத்திருப்பதே எமது அரசின் நோக்கமாகும்.

எனவே CUPE வேலைநிறுத்தங்களை முடித்துக்கொண்டு மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவது என்பது வரவேற்கத்தக்க விடயமாக நாம் எடுத்துக் கொண்டோம்.

ஒன்றாரியோ அரசாங்கம் தொடர்ந்து பேச்சுவார்த்தை மேசையில் உள்ளது, மேலும் ஒரு சிறந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அரசு எப்போதும் நம்பிக்கையுடன் இருக்கிறது. CUPE வேலைநிறுத்தம் செய்வார்கள் என்று தெளிவுபடுத்திய பிறகு, மசோதா 28ஐ நிறைவேற்றுவதைத் தவிர அரசுக்கு வேறு வழி அப்பொழுது இருக்கவில்லை.

வேலைநிறுத்தம் தொடரும் என்பது தெளிவாகத் தெரிந்தவுடன், நாங்கள் சட்டத்தை அறிமுகப்படுத்தினோம் பாடசாலைகள் திறந்திருக்க வேண்டும், நம் குழந்தைகள் வகுப்பில் இருக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது.

பாடசாலைகள் திறந்திருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் நாங்கள் நிற்கவேண்டியதாயிற்று, ஏனென்றால் குழந்தைகளின் மன, உடல் மற்றும் சமூக உணர்ச்சி ஆரோக்கியத்தின் உண்மையான விளைவுகளை நாம் அனைவரும் புரிந்துகொண்டிருக்கிறோம்.

ஒன்ராறியோவின் வரலாற்றில் மற்ற எந்த அரசாங்கத்தையும் விட நமது அரசாங்கம் கல்விக்காக அதிக செலவு செய்கிறது. ஒன்றாரியோவில் கல்விக்கான செலவு 9 சதவீதம் அல்லது கிட்டத்தட்ட $3 பில்லியன் டொலர்கள் அதிகரிக் கப்பட்டுள்ளது.

2017-18ல் $29.49 பில்லியனில் இருந்த கல்விக்கான செலவு தற்பொழுது 2021-22ல் $32.23 பில்லியனாக அதிகரிக் கப்பட்டுள்ளது, ஒன்ராறியோவில் பொதுக் கல்விக்காக 80 சதவிகிதம் மற்றும் சம்பளம் இழப்பீடாகச் செல்கிறது.

2020-21 கல்வியாண்டில், 130,923 ஆசிரியர்கள் இருந்தனர், இது 2017-18 கல்வியாண்டில் இருந்ததை விட கிட்டத்தட்ட 5,000 ஆசிரியர்களின் தொகை அதிகமாகும்.

2020-21 கல்வியாண்டில், 10,072 ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியாளர்கள் இருந்தனர், 2017-2018 கல்வியாண்டில் இருந்து 1,000க்கும் மேற்பட்ட ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியாளர்கள் அதிகரித்துள்ளனர். இதனால், மாணவர் - ஆசிரியர் விகிதம் 16.0ல் இருந்து 15.5 ஆக குறைந்துள்ளது.

CUPE கல்வித் தொழிலாளர்களின் சராசரி சம்பளம் $39,000 எனக் குறிப்பிட்டுள்ளது. ஆண்டுக்கு 194 நாட்களுளளக்கு மேல் பகுதி நேரமாகப் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியமும் இதில் உள்ளதால் இந்த எண்ணிக்கை துல்லியமாக இல்லை. உண்மையில், ஒன்ராறியோவில் உள்ள கல்விப் பணியாளர்கள் கனடாவில் சராசரியாக $27.00 மணிநேர ஊதியத்துடன் மிக உயர்ந்த ஊதியம் பெறுகிறார்கள், இது வேலைப் பாதுகாப்பு மற்றும் பெரும்பாலான கனடியர்களுக்கு அணுகல் இல்லாத வரையறுக்கப்பட்ட நன்மைகள் ஓய்வூதியத் திடடத்துடன் வருகிறது.

CUPE 11.7 சதவீத மணிநேர வருடாந்திர உயர்வைக் கோரியது. மற்ற அனைத்து நன்மைகளுடன் இணைந்தால், அவர்களது கோரிக்கைகள் இழப்பீட்டில் ஏறக்குறைய 50 சதவிகிதம் அதிகரிப்பை கோரியது.

ஒரு தசாப்தத்தில் கல்விப் பணியாளர்களுக்கு மிகப்பெரிய ஊதிய உயர்வை வழங்கும் ஒரு சலுகையை நாங்கள் முன்வைக்கிறோம் மற்றும் நாட்டில் மிகவும் தாராளமான பலன்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தைப் பாதுகாக்கிறோம், இதில் ஆண்டுக்கு 131 ஊதியம் பெறும் நோய்வாய்ப்பட்ட நாட்கள் (11 நாட்கள் 100 சதவீதம் மற்றும் 120 குறுகிய காலத்தில் இயலாமை 90 சதவீதம்). கனடாவின் புள்ளிவிவரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, குறைந்த ஊதியம் பெறுபவர்களுக்கு 2.5 சதவீதம் மற்றும் அதிக ஊதியம் பெறுபவர்களுக்கு 1.5 சதவீதம் என்ற எங்கள் சலுகை இந்த ஆண்டு எட்டப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களுக்கு இணையாக உள்ளது.

இந்த ஆண்டு இதுவரை, தேசிய சராசரி ஊதிய தீர்வு 1.8 சதவீதமாக உள்ளது. ஒரு தசாப்தத்தில் எந்தவொரு அரசாங்கமும் வழங்காத மிகத் தாராளமான சலுகையை நாங்கள் கல்வி ஊழியர்களுக்கு வழங்கியுள்ளோம். ஒப்பிடுகையில், 2012 மற்றும் 2015க்கு இடையில், முந்தைய லிபரல் அரசாங்கம் கல்வித் தொழிலாளர்களுக்கு எந்த உயர்வையும் வழங்கவில்லை என்பதே உண்மையாகும்".

இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் அவர்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 75 வீடுகள் வைபவ ரீதியாக பயனாளிகளிடம் கையளிப்பு

மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 75 வீடுகள் ஞாயிற்றுக்கிழமை (6) காலை 10 மணியளவில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் வைபவ ரீதியாக திறந்து வைத்து பயனாளிகளிடம் கையளித்துள்ளனர்.

யுத்தத்திற்கு பிற்பாடு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டமானது பூரணத்துவம் அடையாத நிலையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அவர்களின் கோரிக்கைக்கு அமைய குவைத் நாட்டின் ஸகாத் ஹவுஸின் (Zakath House) நிதியுதவியுடன் ISRC நிறுவனத்தின் அனுசரணையில் எருக்கலம்பிட்டி ஸகாத் பவுண்டேசனின் (Zakath Foundation)







பூரண ஒத்துழைப்புடன் மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 200 வீடுகளை கொண்ட வீட்டுத்திட்ட செயற்றிட்டத்திற்கு அமைய முதற்கட்டமாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 75 வீடுகளை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் இணைந்து உத்தியோகப்பூர்வமாக பயனாளிகளுக்கு கையளித்தனர்.

தலா 13 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்து வைக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டீமெல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் ஆர். சூரிய ஆராய்ச்சி, மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், ISRC நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஏ.மிஹ்லார், குவைட் நாட்டின் இலங்கைக்கான தூதுவரின் இணைப்பாளர், மன்னார் பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# மஸ்கெலியா லக்கம் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக காணப்படுகின்ற மஸ்கெலியா லக்கம் தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை அங்குரார்பண நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி. வியானிரோஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை (05.11.2022) இடம்பெற்றது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO) மற்றும் இரட்ணம் அறகட்டளை நிறுவனங்களின் பூரண நிதியொதிக்கீட்டில் இந்த திறன் வகுப்பறையானது மாணவர்களின் பயன்பாடிட்காக வழங்கிவைகப்பட்டது.

இந்நிகழ்வில், அதிதியாக ஹட்டன் கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி. எ.சத்தியேந்ரா, மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் திருமதி. ஜி.செண்பகவள்ளி, கோட்ட கல்வி பணிப்பாளர் திரு. சிவகுமார், மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர்கள், IMHO நிறுவன திட்ட பணிப்பாளர் திரு. கந்தையா விக்னேஸ்வரன் மற்றும் IMHO நிறுவன உத்தியோகஸ்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



இந்த திறன் வகுப்பறையூடாக லக்கம் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்விப் பயில்கின்ற 550 மாணவர்கள் மற்றுமன்றி அயல் பாடசாலை மாணவர்களும் பயன்பெற முடியும் என வலய கல்வி பணிப்பாளர் தனது உரையில் தெரிவித்தார். மேலும் தனது உரையில் மாணவர்களின் தேவைகளை அறிந்து இவ்வாறான திறன் பலகையினை வழங்கிவருகின்ற IMHO மற்றும் இரட்ணம் அறகட்டளை அமைப்புகளுக்கு தனது வாழ்த்துகளையும் நன்றியினையும் தெரிவித்தார்.



மேலும் இந் நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் தனது பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தினமாக இன்றைய தினத்தினை தாம் கருதுவதாககவும் மாணவர்களின் நவீன கற்றல் தேவைக்காக வழங்கியது மிகவும் போற்றத்தக்கது என்று தெரிவித்தார்.

சில மாணவர்கள் இவ்வாறான திறன் வகுப்பறை இன்றைய நவீன கணினி மயமான கற்கைக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதாகவும் இவ்வாறான திறன் வகுப்பறையினை தமது பாடசாலைக்கு வழங்கியமைக்கு IMHO மற்றும் இரட்ணம் அறக்கட்டளை அமைப்புகளுக்கு பாடசாலை சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் நன்றியினை தெரிவிப்பதாகவும் இந் திறன் பலகையினை பயன்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை பாடசாலைக்கு பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தனர்.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை?

(கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம்-03)

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




உலகெங்கும் வளமான விளைநிலங்கள் இராணுவப் பயன்பாடு உட்பட இதர பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், உணவு நெருக்கடி பல நாடுகளில் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

அண்மையில் ஐ.நாவின் அங்கமான உலக உணவுத்திட்டம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையை வாசித்தால் கவலை மட்டுமல்ல கலக்கமும் ஏற்படும். இலங்கையில் உணவு நெருக்கடி மற்றும் பாதுகாப்பின்மை ஏன் ஏற்பட்டுள்ளது, அது ஏன் மேலும் தீவிரமடையும், அதற்கான தீர்வுகளை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் போன்றவை புள்ளிவிவரங்களுடன் அந்த அமைப்புகள் வெளியிட்டுள்ளன.

அதில் முக்கியமான பரிந்துரைகளில் ஒன்று, நாட்டில் ஒவ்வொரு துண்டு நிலத்தையும் அறிவியல் ரீதியான விவசாய முறைகள் மூலம் பயன்படுத்தி, உணவு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் துறைசார் வல்லுநர்கள் கூறுவதைக் கேட்டு ஆட்சியாளர்கள் அதை நாட்டு நலனிற்காக செயல்படுத்துவதில்லை என்பது இலங்கையின் சாபக்கேடு.

ஆட்சியில் இருக்கும் "ஆல் இன் ஆல் அழகு ராஜாக்களின்" அனைத்தும் யாமறிவோம் என்ற எண்ணப்பாடே காரணம் என்கிற குற்றச்சாட்டும் உள்ளது. இலங்கையில் நிர்வாகக் குளறுபடிகள், மறைமுகச் செயல்பாடுகள் மற்றும் திட்டமிடலின் தோல்வி ஆகியவை எப்படி விவசாய உற்பத்தியைப் பாதித்துள்ளன என்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தை ஒரு உதாரணமாகக் கருத முடியும்.

இந்த மாவட்ட நிலப் பரப்பின் அளவு, அதில் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள நிலம், எஞ்சிவை என அனைத்தும் புள்ளி விபரங்களுடன் பட்டியலிட்டோம். இதேநேரம் தொழில் வாய்ப்பாகவும், வாழ்வாதார மையங்களாகவும், அழிவடைந்த இடங்களும் இன்றும் பயிர்ச் செய்கைக்குக்கூட தடை விதிக்கப்பட்டே காணப்படுகின்றன. அதனையும் அரச திணைக்களங்கள் ஆக்கிரமித்துள்ளமை கடந்த பகுதிகளில் புள்ளிவிவரங்களுடன் பட்டியலிடப்பட்டது.

இந்த பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வாழ்வாதார இடங்களை சான்று ஆவணங்களுடன் அளிக்க விழைந்துள்ளோம். கடின முயற்சிகளுக்குப் பிறகு சில ஆவணங்கள், பிரதிகள், குறிப்புகள், வரைபடங்கள் போன்றவற்றைக் கண்டறிய முடிந்தது.

உதாரணமாக 1968 ஆம் ஆண்டு நெல் அல்லாத பயிர்ச் செய்கைக்கு 2,534 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு உருவாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மன்னகண்டல் ஏற்று நீர்ப்பாசண நிலம் மட்டுமன்றி இயந்திரத் தொகுதி, நீர்வாய்க்கால் அமைவிடத்தைக்கூட இன்று வனவளத் திணைக்களமே ஆக்கிரமித்து நிற்பதாக அங்கே பயிர்ச் செய்கை மேற்கொண்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு அப்பால் முல்லைத்தீவு மாவட்டத்தின் 278 சதுரக் கிலோ மீற்றர் நிலப் பரப்பளவு பிரதேசம் எவருக்குமே தெரியாது அந்த மாவட்டத்தில் இருந்து காணாமல் போயுள்ளது



என்கிற அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது.

எல்லை மீள் நிர்ணயத்தின் பின்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 278 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் காணவில்லை என்ற அதிர்ச்சி தகவல் தற்போது வெளி வந்துள்ளது. இது பிரபல நகைச்சுவை நடிகர் வடிவேலு ஒரு திரைப்படத்தில் "கிணற்றைக் காணவில்லை" என்று கூறுவது போலுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டமானது 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையில் மாவட்டத்தின் சகல தரவுகளின் அடிப்படையில் 2,693 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்த ஓர் மாவட்டமாகும். ஆனால் 2021 ஆம் ஆண்டு புதிய எல்லை மீள் நிர்ணயத்தின் பின்பு நில அளவைத் திணைக்களம் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கியுள்ள தகவலின் அடிப்படையில் 2,415 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவே காட்டப்படுகின்றது. இதை மாவட்ட நிர்வாகமும் உறுதி செய்கின்றது.

அவ்வாறானால் 278 சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்பு அதாவது 27,800 கெக்டேயர் நிலப்பரப்பு எங்கே என்ற பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதனால் அயல் மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களை ஆராய்ந்தபோது வவுனியா மாவட்டத்தில் 76 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு அதிகரித்துள்ளது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த அளவு கடந்த ஆண்டு வரையில் ஆயிரத்து 237 சதுரக் கிலோ மீற்றராக காணப்பட்டபோதும் தற்போது 1,340 ச.கிலோ மீற்றர் என்கின்றது நில அளவைத் திணைக்களம்.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல்போன 278 சதுரக் கிலோ மீற்றரில் பொபஸ்வேவ திசையின் ஊடாக வவுனியா வடக்கில் அதிகரித்துள்ள 73 சதுரக் கிலோமீற்றருமாக மொத்தம் 176 ச.கி.மீற்றர் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் முல்லையில் காணாமல்போன 278 சதுரக் கிலோ மீற்றரில் மிகுதி 102 சதுரக் கிலோ மீற்றரும் வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து பதவியாவுடன் அல்லது மதவாச்சியுடனும் சில பகுதி செல்கின்றதா என்ற பெரும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது. இதற்கு மாவட்ட அதிகாரிகளிடம் இருந்தும் உரிய பதில் சரியான முறையில் வெளிவரவில்லை.

இது ஒருபுறமிருக்க முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 1968ஆம் ஆண்டு ஏற்று நீர்ப்பாசனம், கால்வாய் நீர்ப்பாசனம் என இரு திட்டங்களின் கீழ் தலா 3 ஏக்கர் வீதம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஊடாக பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது.



இதில் 2,534 ஏக்கர் 1968 இல் முத்தையன்கட்டு குளத்தின் கீழ் நெல் அல்லாத பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டு 1990ஆம் ஆண்டு வரையில் பயிர்ச் செய்கையும் இடம்பெற்றன. ஆனால் இப்பகுதியில் 9,000 ஏக்கர் நிலம் 1921 ஆம் ஆண்டே காடாக அரச இதழ் வெளியிட்டதாகவும் அதில் இந்த மன்னகண்டல் காணி உள்ளிட்ட பகுதியும் அடங்குவதனால் அங்கே பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்க முடியாது என்கின்றது வனவளத் திணைக்களம்.

அதாவது இந்தப் பகுதியை தனது பிடியில் வைத்துக்கொண்டு பயிர்ச் செய்கைக்கு அனுமதி மறுக்கின்றனர். அவ்வாறானால் 1968 முதல் 1983 ஆம் ஆண்டு வரை என்ன செய்தீர்கள் என்ற வினாவிற்குப் பதில் கிடையாது. இதற்கான ஆதாரமாக 1968 ஆம் ஆண்டு 3 ஏக்கர் வீதம் வழங்கியபோது நீர்ப்பாசனத் திணைக்களம் வரைந்த வரைபடம் எமக்குக் கிட்டியது.

இதேநேரம் ஏற்று நீர்ப்பாசனம் நடந்த இடத்தில் வாய்க்கால்கள் இன்றும் சாட்சியாகவுள்ளன. இதற்கு புகைப்பட ஆதாரமும் உள்ளது.


முல்லைத்தீவின் குருந்தூர்மலையிலே அமைக்கப்படும் விகாரையுடன் 259 ஏக்கருக்கு குறைவான நிலம் காணப்பட்டமைக்கு சில ஆதாரங்கள் முன்வைக்கப்படுவதனால் அந்த 259 ஏக்கர் நிலத்தையும் விகாரைக்கு வழங்க மாவட்ட அரச நிர்வாகம் முன் வருகின்றபோதும் விகாரையை நிர்வகிக்கும் பௌத்த துறவியோ 430 ஏக்கர் நிலத்தை அபகரிக்க முயல்வதனாலேயே அங்கும் சர்ச்சை நிகழ்கின்றது என மாவட்டச் செயலகம் அறிக்கையிட்டுள்ளது.

மாவட்டத்தின் மற்றுமோர் மிகப்பெரிய சொத்தாகவும் 150 முதல் 200 பேருக்கான வேலை வாய்ப்பாகவும் திகழ்ந்த கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை இன்றும் பாழடைந்து காணப்படுகின்றது. இலங்கையில் போர் உச்சம் பெற்ற 1990ஆம் ஆண்டுடன் அரச நிர்வாகம் இத்தொழிற்சாலையை முழுமையாக கைவிட்டது. அதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம் இத் தொழிற்சாலையை 6 ஆண்டுகள் இயக்கினர். இதன்போது ஓட்டுசுட்டான் தொழிற்சாலை எனவும் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை எனவும் இயங்கிய காலத்தில் 1997 ஆம் ஆண்டு சண்டியன் ஜெயசிக்குறு என்னும் இராணுவ நடவடிக்கையில் இராணுவம் முன்னேறிய சமயம் தொழிற்சாலை முழுமையாகக் கைவிடப்பட்டு அழிவடைந்து செல்கின்றது.



பல நூறு கோடி ரூபா சொத்துப் பெறுமதியிலிருந்த தொழிற்சாலை இன்று இரும்பாகவே காட்சி தருவது அங்கே பணியாற்றிய பலரின் கண்களில் இரத்த கண்ணீரையே வரவழைக்கிறது. 1991 முதல் 1997 வரையான காலப் பகுதியில் அயல் கிராமங்களிற்கு ஒளியூட்டிய இடமாகவும் இதே தொழிற்சாலை விளங்கியது. இங்கிருந்த மின் பிறப்பாக்கி மூலம் மின்சார விநியோகம் இடம்பெற்றது.

இவற்றைப்போன்றே கொக்குத்தொடுவாய் - தென்னமரவடி இணைப்பு பாலம் அமைத்துத் தருமாறு 50 ஆண்டுகளாக அப்பகுதி மக்களால் கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது. இந்தப் பாலத்தை அமைக்க 1,500 மில்லியன் ரூபா வேண்டும் என 2017 ஆம் ஆண்டு கணக்கிடப்பட்ட நிலையில் தற்போது 3,500 மில்லியன் ரூபா வேண்டும் என்ற நிலையில் இனி அமைக்கப்படுமா என்கின்ற கேள்வியும் உள்ளது. இப்பாலம் அமைக்கப்பட்டால் கரையோரமாக திருகோணமலை யாழ்ப்பாணம் வரையான போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படும். மறுபுறத்தே வட்டுவாகல் பாலம் அமைக்க ஆயிரம் மில்லியன் ரூபா 2016 ஆம் ஆண்டில் கோரப்பட்டது அவ்வாறானால் இனி 2,250 மில்லியன் ரூபாவும் போதாது என்கின்ற நிலைமையே காணப்படுகின்றது. இப்பாலம் உள்ளிட்ட சுமார் 2 கிலோ மீற்றர் புனரமைப்பு செய்யப்பட்டால் தினமும் பல ஆயிரம் பேர் வருகை தரும் சுற்றுலாப் பிரதேசமாக இப்பகுதி மாறும் அதன் மூலம் பல நூறுபேருக்கு வேலை வாய்ப்பும் பெருந்தொகை அந்நியச் செலாவணி ஈட்டும் இடமாகவும் வளர்ச்சி அடையும் ஆனால் இப் பாலம் இன்றுவரை கேள்விக்குறியாகவே உள்ளது. வடக்கையும் கிழக்கையும் இணைக்க கோருபவர்கள் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இணைப்பாக உள்ள கொக்குத்தொடுவாய்ப் பாலம் அமைக்க (இணைக்க) முன் வரவேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர்.



வீதிகள் மற்றும் இடங்களின் அவலத்தைப் பட்டியலிடும்போது இலங்கையிலேயே முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற கேலிக்குரிய வீதிப் புனரமைப்பையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். அதாவது இலங்கையிலேயே வீதிக்கு படிகட்டிய கேலிக்கூத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவிப் பகுதியில் மகிந்தவின் ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றது. அது என்ன என்பது உட்பட அடுத்த வாரம் பார்ப்போம்.

**(அவலப் பட்டியல் நீளும்)**




# ஒரு ஆளுமையும் ஒரு அவமானமும்

**- சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல எல்லா நாடுகளிலும் "இப்படியும்-அப்படியும்" ஆட்கள் இருக்கவே செய்கிறார்கள். இந்தியர்கள் ஒன்றிற்கும் உதவாதவர்கள், அவர்கள் பண்டாரங்கள் - பரதேசிகள், அவர்களுக்கு சுதந்திரம் அளித்தால் சரியாக நிர்வகிக்க முடியாமல் பிரிட்டனிடமே மீண்டும் நாட்டை கையளித்துவிடுவார்கள் என்று கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகவும் பிரிட்டிஷ் பிரதமராகவும் இருந்த கொக்கரித்த வின்ஸ்டன் சர்ச்சில் இருந்த அதே கட்சியைச் சேர்ந்தவரும் இந்திய வம்சாவளியினருமான ரிஷி சுனாக் அதே பிரிட்டனின் பிரதமராக இன்று வந்துள்ளார்.

தென் ஆப்ரிக்காவில் நல்லிணக்கம், நேர்மையான ஆட்சி, ஊழலற்ற நிர்வாகம் போன்றவற்றை முன்னிறுத்தி அதை ஒப்பீட்டளவில் சிறப்பாகச் செய்து மக்களின் நன்மதிப்பையும், பேராதரவையும் பெற்ற நெல்சன் மண்டேலாவின் மறைவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அவரது கட்சியான ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் ஜேக்கப் ஜூமா ஊழல் புகார்களில் சிக்கி, நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டு ஆட்சியை இழக்கும் நிலை ஏற்பட்டது. மண்டேலா பிறந்த மண்ணில் ஜூமாவா என்று இன்றளவும் மக்கள் பேசுகின்றனர். அந்தளவுக்கு அவர் மோசமான நிர்வாகத்தை நடத்தி, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குப்தா சகோதரர்களுடன் ஊழல்களைச் செய்து மக்களிடையே அவப்பெயரைப் பெற்றுள்ளார்.

இப்போது இலங்கையைச் சேர்ந்த இருவரின் செயல்பாடு நாட்டிற்கு நல்லதோர் பெயரையும், மோசமான அவப்பெயரையும் ஏற்படுத்தியுள்ளது. தீய விஷயங்கள் அல்லது எதிர்மறையான செய்திகளே மக்களை விரைவாகச் சென்றடையும், அதுவே ஊடகவியலாளர்களுக்குச் சுவையான செய்திகளை சேகரிக்க உதவும் என்கிற பொதுவான நிலையிலிருந்து சற்று மாறுபட்டு ஆக்கபூர்வமான செய்தியை முதலில் அளிக்கலாம் என்று கருதுகிறேன்.

அவ்வகையில் இந்த வாரம் ஆஸ்திரேலியாவில் இரண்டு இலங்கையர்களின் செயல்பாடே பாராட்டையும் கண்டனத்தையும் பெற்றுள்ளது. ஒன்று சிட்னியிலும் மற்றொன்று மெல்பர்ணிலும் நடைபெற்ற சம்பவங்கள். இரண்டும் தனிநபர் சார்ந்த விஷயங்கள்.




முதலாமவர் விராஜ் திசநாயக்க. அடிப்படையில் சோஷலிஸ தொழிற்சங்கவாதி மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர். மெல்பர்ண் நகரில் ஆஸ்திரேலிய அலுவலகத் தலைமையைக் கொண்டு இயங்கும் நா.ஃப் நிறுவனத்தில் ஊழியர்கள் தமது நியாயமான உரிமைகளைக் கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிர்வாகமோ தங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலைக்கு வந்தால் ஊதியம் இல்லையேல் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தது. ஊழியர்களும் நெருக்கடியான சூழலில் இருந்தாலும், போராட்டமே வெற்றிக்கு வழி எனும் குறிக்கோளுக்கு இணங்க போராட்டத்தை தொடர்ந்தனர். ஒரு மாத காலம் கழிந்தது. எனினும் இருதரப்பும் தமது நிலைப்பாட்டிலேயே இருந்தனர். தொழிலாளர்கள் தரப்பில் அவர்களுக்கு தலைமையேற்றிருந்தார் விராஜ் திஸநாயக்க. முதலில் அவரை மட்டும் தனிமைப்படுத்தி ஆசை வார்த்தைகள் பேசி தொழிலாளர்களிடமிருந்து பிரித்து வேண்டிய சலுகைகளை அளிப்பதாகக் கூறி எப்படியாவது போராட்டத்தை முறித்துவிட நிர்வாகம் முற்பட்டது. ஆனால் விராஜோ சோஷலிஸ சிந்தனைகளில் ஊறியவர் என்பதால், எக்காரணத்தைக் கொண்டும் தொழிலாளர்களை தவிக்கவிடமாட்டேன் என்பதில் உறுதியாக இருந்தார். ஒரு மாதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் செலுத்த வேண்டிய வீட்டுக்கடன், இதர கடன்கள், வீட்டுச் செலவுகள் ஆகியவற்றின் நெருக்கடிகளை எதிர்கொள்ள தொடங்கினர். ஆனால் நிர்வாகமோ நெருக்கடிகளை மேலும் அதிகரித்தது.




அதேவேளை விராஜ் திஸநாயக்கவோ ஊழியர்களிடம் ஊக்கமூட்டும் வகையில் பேசி போராட்டத்திலிருந்து பின்வாங்க வேண்டாம் என்றும் நியாயம் வெற்றி பெறும் என்று நம்பிக்கையூட்டினார். அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. போராட்டம் நாற்பது நாட்களைக் கடந்தது. இறுதியில் நிர்வாகம் இறங்கி வந்தது. வன்முறைகள் ஏதுமின்றி சாத்வீக முறையில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் 40ஆவது நாளை எட்டிய நிலையில் நிர்வாகம் பின்வாங்கியது. கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை ஏற்பதாக அறிவித்தது.

ஆனால், விராஜ் தலைமையிலான குழுவோ தங்களது முக்கிய கோரிக்கையான பணி நிரந்தரம் என்கிற உத்தரவாதம் எழுத்துபூர்வமாக அளிக்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்று அறிவித்தனர். நிர்வாகத்திற்கு வேறு வழியில்லாமல் கோரிக்கையை ஏற்றது. அந்த போராட்டத்தில் நியாயம் இருந்ததை உணர்ந்த நா.ஃப் நிர்வாகம் தொழிலாளர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்பதாக அறிவித்தது.

தொழிலாளர்களின் போராட்டத்தில் இருக்கும் நியாயத்தை உணர்ந்த இதர தொழிற்சங்கங்கங்கள் ஆதரவளிக்க முன்வந்தன. ஆங்காங்கே தொழிற்சங்க கிளைகள் பண உதவி அளிக்க முன்வந்தன. ஒரு கிளை மட்டுமே 13,000 ஆஸ்திரேலிய டாலர்களை அளித்தது. மேலும் பல தொழிற்சாலைகளில் ஊழியர்கள் தாமாக முன்வந்து நன்கொடையளித்தனர். இந்த போராட்டத்தின் தாக்கம் நாடு முழுவதும் எதிரொலிக்கும் என்பதை அறிந்துகொண்ட நிர்வாகம் ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்பதாக அறிவித்ததை அடுத்து வேலைநிறுத்தப் போராட்டம் முடிவிற்கு வந்தது.

நா.ஃப் நிறுவனம் ஒன்றும் சிறிய நிறுவனம் அல்ல. அவர்களுக்கு உலகெங்கும் 90 நாடுகளில் கிளைகள் உள்ளன. 40,000க்கும் அதிகமான பணியாளர்கள் உள்ளனர். ஒரு நாட்டில் நடைபெறும் போராட்டம் பல நாடுகளில் எதிரொலிக்கும் என்பதை நிர்வாகம் நன்று அறிந்திருந்தது. ஆனால் அனைத்திலும் பார்க்க நிர்வாகமே விராஜ் திஸநாயக்கவின் வன்முறையற்ற அறப்போராட்டத்தை கண்டு வியந்து "மூக்கின் மேல் விரலை வைத்தது".

தொழிலாளர்கள் அனைவருக்கும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வும் முடிவு செய்யப்பட்டது. அது பின் தேதியிட்டு அளிக்கப்படும் என்பதும் முடிவானது.

இதில் முக்கியமாக ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். அந்த போராட்டத்தில் பன்னாட்டைச் சேர்ந்த ஊழியர்கள் பங்குபெற்றனர். தலைமையேற்ற விராஜ் திஸநாயக்க மட்டுமே சிங்களவர். அவர் மீது நம்பிக்கை வைத்து தொழிலாளர்கள் உறுதியுடன் போராடினர். வெற்றியும் கிடைத்தது. அவரது தலைமைத்துவத்தை பன்னாட்டு சோஷசில அமைப்புகளும் ஆதரவு சஞ்சிகைகளும் பாராட்டின. அவரது தலைமைத்துவம் காரணமாக அடுத்த தலைமுறையினரின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தொழிற்சங்கவாதிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் பாராட்டியுள்ளனர்.

அடுத்து நாட்டிற்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியவரின் கதையைப் பார்ப்போம். இது உலகறிந்த செய்தி தான். ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் சார்பில் இடம்பெற்றிருந்தவர் தனுஷ்க குணதிலக. அவர் எதற்காகச் சென்றாரோ அதைவிடுத்து "இதர ஆட்டங்களில்" ஈடுபட்டு அகப்பட்டு அவமானப்பட்டு சிறையில் உள்ளார்.

நடைபெற்றுவரும் உலகக் கோப்பை டி-20 கிரிக்கெட் போட்டியில் அவர் ஆடுகளத்தில் ஆடியதைவிட அறைக்குள் ஆடிய ஆட்டமே இப்போது சந்தி சிரிக்கிறது. ஒரு போட்டியில் மட்டுமே விளையாடிய அவர் அதிலும் சரியாக சோபிக்கவில்லை. மேலும் காயம் காரணமாக இதர போட்டிகளுக்கு பரிசீலிக்கப்படவில்லை. எனினும் ஜோடியைத் தேடும் இணையதளம் ஒன்றின் மூலம் அவருக்கு ஆஸ்திரேலியப் பெண் ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டது. அது தனிப்பட்ட தொடர்பு என்பதால், அதற்குரிய வரைமுறைகளுடன் அவர் அதை பேணி பாதுகாத்திருக்க வேண்டும்.

இணையதளத்தின் மூலம் ஏற்பட்ட தொடர்பு படுக்கையறை வரை சென்றது. ஆனால் அவர் தீவிரமாக விளையாட அது விவகாரமாகி பொலிஸ் நிலையம் வரை சென்றது. விசாரணையில் இறங்கிய பொலிசார், அவர் மீது குற்றமிருப்பதாகக் கருதி அவரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியது. சிட்னியில் நடைபெற்ற இந்தச் சம்பவம் நீதிமன்றம் செல்லும்வரை கமுக்கமாகவே இருந்தது. ஆனால் "கத்தரிக்காய் முற்றினால் கடைக்கு வந்தே ஆக வேண்டும்" என்கிற கதையாக பூனைக்குட்டி மூடையிலிருந்து வெளிவந்துவிட்டது.



வழக்கை விசாரித்த பொலிஸ் அதிகாரி தனுஷ்க குணதிலக "டிண்டர்" இணையத்தின் மூலம் சந்தித்த பெண்மணியுடன் தொடர்பில் இருந்தார் என்றும் அவர்கள் உறவு படுக்கையறை வரை சென்றது என்றாலும், உடலுறவின் முக்கியமான தருணத்தில் அவர் ஆணுறை அணிய மறுத்து, தன்னை அந்த பெண்மணி மீது வலிந்து திணித்தார், அவரது கழுத்தை நெரித்தார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தது.

நீதிமன்றம் அவரது பிணை மனுவை நிராகரித்து அவரை சிறையில் அடைக்க உத்தரவிட்டது. அவரில்லாமல் இலங்கை அணி நாடு திரும்பியது. அவரது நடத்தையும் கைதும் நாட்டிற்கே பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது பாலியல் புகார்களில் சிக்குவது இது முதல்முறையல்ல. ஐ நாவின் அமைதி காக்கும் படைக்கு கணிசமான பங்களிப்பை இலங்கை செய்து வருகிறது. கரிபியன் தீவு நாடான ஹையிட்டியில் அமைதி காக்கும் பணிக்குச் சென்ற ஐ நா வின் அமைதி காக்கும் படையில் இருந்த இலங்கை வீரர்கள், சிட்னியில் தனுஷ்க குணதிலக செய்த அப்படியான வேலையில் ஈடுபட்டனர்.

ஐ நா அமைதி காக்கும் படைக்கு, உலகளவில் மிகவும் அவமானத்தை இலங்கையின் இராணுவ வீரர்கள் ஏற்படுத்திவிட்டனர் என்ற கெட்ட பெயர் ஏற்பட்டது. விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன. அதில் இலங்கை இராணுவத்தினர் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதியானாலும், மேலதிக நடவடிக்கையை ஐ நாவால் எடுக்க முடியவில்லை. அவர்கள் நாட்டிற்கு திருப்பியனுப்பப்பட்டனர். இனி அவர்களை ஐ நா அமைதி காக்கும் படையில் இணைப்பதில்லை என்கிற அளவிற்கு விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் எவ்விதமான நடவடிக்கையும் இல்லை. தொடர்ந்து இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்கள் மூடி மறைக்கப்படுகின்றன.

போர்க்காலத்தில் இலங்கை இராணுவம் எப்படி நடந்து கொண்டது என்பதை உலகறியும். மக்கள் செறிந்து வாழும் இடங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என்று அனைத்து இடங்கள் மீதும் வகைதொகையின்றி குண்டுவீச்சுகள் இடம்பெற்றன. இசைப்பிரியாவிற்கு என்ன நடந்தது என்பதை பார்த்தவர்களுக்கு நெஞ்சம் படபடத்தது. அந்த காட்சிகளைப் பார்த்தவர்கள் அப்படியான கொடுமை யாருக்கும் நேரக் கூடாது என்றனர். ஆனால் தவறிழைத்தவர்கள் யாரென்று கண்டுபிடித்து முறையான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. அப்படியான கலாசாரம் இயல்பானது என்ற நிலையை தோற்றுவித்தது.



தற்போது ஆஸ்திரேலிய பொலிசார் தனுஷ்க குணதிலக மீதான குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. அவருக்கு பிணை அளிக்கக் கூடாது என்று நீதிமன்றத்தில் வாதாடி அதில் வெற்றியும் பெற்றுள்ளனர். அவர் மீதான பாலியல் புகார்கள் ஒன்றும் புதிதல்ல. அப்படியான புகார்களில் அவர் ஏற்கெனவே சிக்கி, அணியிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்ட சம்பமும் இடம்பெற்றது. இது ஒருமுறையல்ல சில முறைகள் நடைபெற்றுள்ளன. தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்கத்தை கடைப்பிடிக்காதவர்கள் எப்படி ஒரு தேசிய அணியில் இடம்பிடித்தார் அல்லது அவருக்கு அப்படியான இடமளிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. இலங்கை கிரிக்கெட் சபை அவரை கிரிக்கெட் தொடர்பான அனைத்து விஷயங்களிலிருந்தும் இடைநீக்கம் செய்துள்ளது. அவர் மீதான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை ஆட்சியாளர்கள் யாரும் அவரைக் கண்டிக்கவில்லை. அப்படியான நிலைப்பாடே இலங்கை தனிப்பட்ட நபர்கள் காரணமாக சர்வதேசளவில் அபகீர்த்திக்கு ஆளாகிறது என்பது கசப்பான உண்மை.



# கனடாவுக்கு வரமுற்படும் படகுப் பயணிகள்: நிலமும் சிறுத்து சனமும் சிறுத்து?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கனடாவை நோக்கிக் கப்பல் ஒன்றில் புறப்பட்ட 303 தமிழர்கள் சிங்கப்பூருக்கு அருகே சர்வதேசக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபொழுது, காப்பாற்றப்பட்டு, வியட்நாமில் இறக்கி விடப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குள் குழந்தைகளும் பெண்களும் அடங்குவர்.

இதுபோலவே ஒஸ்ரேலியாவை நோக்கியும் ஆபத்தான கடல் வழிகளின் ஊடாக தமிழர்கள் புலம்பெயர முயற்சிக்கிறார்கள். இவ்வாறு கடல் வழியாக வருபவர்களை தாம் ஏற்கப் போவதில்லை என்றும் திருப்பி அனுப்புவோம் என்றும் ஒஸ்ரேலியா அரசாங்கம் தொடர்ச்சியாக விளம்பரம் செய்துவருகிறது. கடந்த வாரம் கடல் வழியாக மட்டுமல்ல வான் வழியாக விமானங்களின் மூலம் வந்திறங்கி சட்டவிரோதமாக குடியேற முயன்றால் அவர்களையும் திருப்பி அனுப்புவோம் என்று ஒஸ்ரேரேலிய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கொழும்பில் உள்ள ஒஸ்ரேரேலிய தூதரகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் ஓர் ஆங்கில ஊடகவியலாளரோடு உரையாடும்பொழுது ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார். இலங்கையிலிருந்து பெருந்தொகையான மூளை உழைப்பாளிகளின் விசாவுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அண்மை காலங்களில் அந்த விண்ணப்பங்களின் தொகை அதிகரித்து வருவதாகவும் அதனால் விசா விண்ணப்பங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை வரலாம் என்ற பொருள்பட அவர் கதைத்திருக்கிறார்.

கனடா, ஒஸ்ரேலியா போன்ற நாடுகளை நோக்கி மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் பெருந்தொகையான தமிழர்களும் சிங்களவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மேற்படிப்பு அல்லது தொழில் வாய்ப்பு என்ற அடிப்படையில் படித்தவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் இதுவரையிலும் 500க்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் வெளியேறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னணியில் கொழும்பில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டைப் பெறுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது.

போர்க்காலங்களில் தமிழ் இளையோர் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் பொருளாதார காரணங்களுக்காகவும் நாட்டை விட்டு வெளியேறினார்கள். ஆனால் அண்மைக் காலங்களில் சிங்கள இளையோரும் அவ்வாறு வெளியேறத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களின் கணிசமானவர்கள் மூளை உழைப்பாளிகள்.

ராஜபக்சக்கள் இந்த நாட்டை எந்த மக்களுக்கு மீட்டுக் கொடுத்ததாக பெருமைப்பட்டுக் கொண்டார்களோ, அந்த மக்களே நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதில் குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை 2009க்கு பின்னரும் புலப்பெயர்வு நிகழ்கிறது என்பதுதான் இக்கட்டுரையின் குவிமையம் ஆகும்.

அண்மையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் பயிலும் ஒரு மாணவரிடம் கேட்டேன்... நல்ல பெறுபேறு கிடைத்தால் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று அவர் சொன்னார் "வெளிநாட்டுக்குப் போவேன்" என்று. அவருடைய இரண்டு சகோதரர்களும் அவ்வாறு வெளியேறத் தயாராகி வருவதாகவும் அவர் சொன்னார். தமிழ் இளையோரில் வகைமாதிரிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினரை எடுத்து "எத்தனை பேர் நாட்டில் இருந்து வெளியேற விரும்புகிறீர்கள்?" என்று கேட்டால்... அதற்கு நாட்டை விட்டு வெளியேற விரும்புவோரின் தொகையே அதிகமாயிருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஏற்கனவே நிதிரீதியாக செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாக எழுச்சி பெற்றுவிட்டது. அந்நாடுகளில் கல்வி ஒரு சுமையாகவோ சித்திரவதையாகவோ இல்லை. அதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு நாட்டில் உள்ள இளைய தலைமுறையில் ஒரு பகுதி வெளியேற முயற்சிக்கின்றது. இவ்வாறு வெளியேற முற்படும் பலருக்கும் புலம்பெயர்ந்த பரப்பில் யாரோ ஒரு உறவினர் அல்லது ஏதோ ஒரு தொடர்பு உண்டு. அவ்வாறு புலம்பெயர்ந்து செல்வதன்மூலம் தமது குடும்பத்தின் நிதிநிலையை உயர்த்தலாம், தாமும் ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் நம்புவதாகத் தெரிகிறது.

ஒருபுறம் போதைப்பொருள் பாவனை வாள் வெட்டுக் கலாச்சாரம் தொடர்பாக செய்திகள் வெளிவருகின்றன. இன்னொரு புறம் 2009க்கு பின்னரும் நாட்டை விட்டு வெளியேறும் இளையோரின் தொகை குறையாமல் இருக்கிறது.

தமிழ் அரசியல்வாதிகளும் கட்சிகளும் தாயகம், தேசியம் சுயநிர்ணயம் என்ற கோஷங்களை விடாது உச்சரிக்கின்றன. ஆனால் தாயகத்தில் தமிழ் மக்களின் ஜனத்தொகை குறைந்து வருகிறது. ஒருபுறம் தாயகத்திலும் டயஸ்பெறாவிலும் பிள்ளைப்பேறு விகிதம் பெருமளவிற்கு குறைந்து வருகிறது. இன்னொரு புறம் தாயகத்திலிருந்து தொடர்ச்சியாக மணப்பெண்களாக ஒரு தொகுதி பெண்கள் அதுவும் வம்சவிருத்தி செய்ய வேண்டிய பெண்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு சமாந்தரமாக மூளை உழைப்பாளிகளும் கள்ளமாக குடியேறுபவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பில் தமிழ் கட்சிகளிடம் அல்லது செயற்பாட்டாளர்களிடம் தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் ஏதாவது உண்டா?

ஒரு மக்கள் கூட்டத்தை தேசிய இனமாக வனையும் பிரதான அம்சங்கள் ஐந்து இனம், நிலம், (அதாவது தாயகம்), மொழி, பொதுப் பண்பாடு, பொதுப் பொருளாதாரம் என்பவையே அவையாகும். இதில் இனம் என்று குறிப்பிடப்படுவது பிரயோகத்தில் தமிழ் சனத் தொகையைத்தான். ஏற்கனவே போரில் தமிழ் சனத்தொகையில் குறைந்தது மூன்று லட்சம் பேர் கொல்லப்பட்டு விட்டார்கள். அல்லது காணாமல் போய்விட்டார்கள். தப்பிப் பிழைத்தவர்களில் இளையவர்கள் இப்பொழுது புலம்பெயர முயற்சிக்கிறார்கள். இனப்படுகொலை புலப்பெயர்ச்சி என்பவற்றால் ஏற்கனவே சனத்தொகை மெலிந்து வருகிறது. இந்நிலையில் பிள்ளைப் பேறு விகிதமும் குறைந்து வருவதனால் சனத்தொகை மேலும் குறையக் கூடிய ஆபத்து அதிகரிக்கிறது.

தமிழ் இளையோர் தாயகத்தை விட்டு வெளியேறுவதனால் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்துக்கும் நிதி ரீதியாக பாதுகாப்பான ஒரு எதிர்காலம் கிடைக்கலாம். ஆனால் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் பார்த்தால் அது தாயகத்தில் சனத்தொகையைக் குறைக்கிறது. தேர்தல்மைய நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் வாக்காளர்களின் தொகை குறைக்கிறது. எல்லா விதத்திலும் அது தமிழ் மக்களை பலவீனப்படுத்துகிறது. காசிருந்து என்ன பலன்? தாயகத்தில் சனத்தொகை மெலிந்து கொண்டே போகிறது. ஒரு தேசமாக தமிழ் மக்கள் பெருக்கவில்லை சிறுத்துக் கொண்டே போகிறார்களா?


தமிழ் இளையோர் மத்தியில் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற தவிப்பு ஏன் அதிகரிக்கின்றது? இதைக் குறித்து தமிழ் கட்சிகளோ அல்லது செயற்பாட்டாளர்களோ அல்லது புத்திஜீவிகளோ அல்லது குடிமக்கள் சமூகங்களோ சிந்திக்கின்றனவா?

சில மாதங்களுக்கு முன்பு வலிகாமம் பகுதியிலுள்ள ஒரு பங்குத்தந்தை என்னை தனது பங்கில் உள்ள இளையோர் சந்திப்பில் பொருளாதார நெருக்கடிகள் பற்றி பேசுமாறு அழைத்திருந்தார். நான் பேசிக் கொண்டிருந்தேன் ஆனால் அங்கு கூடியிருந்த இளையோர் அந்தப் பேச்சை ரசிக்கவில்லை. அக்கறையோடு கேட்கவில்லை. ஒரு கட்டத்தில் பேசுவதை நிறுத்தி விட்டுக் கேட்டேன் "உங்களுக்கு தேவையில்லாத ஒன்றை நான் கதைக்கின்றேனா?". ஆம் என்று சொன்னார்கள். உங்களுக்கு என்ன தேவை என்று கேட்டேன். பெரும்பாலானவர்கள் பொழுதுபோக்கு என்று சொன்னார்கள். சரி உங்களுடைய வாழ்வின் இலட்சியம் என்னவென்று கேட்டேன். சுமார் 40 பேர் வந்திருந்த அந்தச் சந்திப்பில் நான்கு பேர்களிடம்தான் எதிர்கால இலட்சியம் இருந்தது. ஏனையவர்கள் கேட்டார்கள் "ஏன் அப்படி ஒரு இலட்சியம் இருக்க வேண்டும்? வாழ்க்கையை இப்பொழுது இருப்பதை போலவே அனுபவித்து விட்டு போகலாமே?" என்று. உங்களை நீங்கள் புதிய சவால்களுக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள விரும்பவில்லையா என்று கேட்டேன். "ஏன் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டார்கள்.

அவர்களில் அநேகரிடம் ஆகப்பிந்திய தயாரிப்புகளான கைபேசிகள் இருந்தன. பெரும்பாலானவர்கள் ஆகப்பிந்திய தயாரிப்புகளான மோட்டார் சைக்கிள்களை வைத்திருந்தார்கள். அவற்றைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் கேட்டேன். "உங்களுடைய வாகனங்கள் அப்டேட் செய்யப்பட்டவை உங்களுடைய கைபேசிகள் அப்டேட் செய்யப்பட்டவை உங்களுடைய வீட்டில் இருக்கும் தொலைக்காட்சிகள், கணினிகள் அப்டேட் செய்யப்பட்டவை் ஆனால் நீங்கள் மட்டும் உங்களை அப்டேட் செய்ய விரும்பவில்லையா?" என்று. அப்பொழுதுதான் அவர்கள் ஈடுபாட்டோடு உரையாடத் தொடங்கினார்கள்.

நான் பேச வந்த விடயத்தை இடையிலேயே நிறுத்திவிட்டு அவர்களோடு அவர்களுடைய அலை வரிசையிலேயே நின்று கதைப்பது என்று முடிவெடுத்து, கேள்விகளை கேட்கத் தொடங்கினேன். அது வெற்றியளித்தது. என்னை அங்கே பேச அழைத்த பங்குத் தந்தையிடம் சொன்னேன் "ஒரு புதிய தலைமுறையின் நம்பிக்கைகளை நாங்கள் எங்களுடைய நம்பிக்கைகளுக்கூடாக அணுகப் பார்க்கிறோம்.இது தவறு. அவர்கள் கைபேசி செயலிகளின் கைதிகள். எல்லாவற்றையும் "ஸ்க்ரோல்" பண்ணி கடந்துவிட முற்படும் ஒரு தலைமுறை. பெரும்பாலான விடயங்களில் ஆழமான வாசிப்போ, யோசிப்போ, தரிசிப்போ கிடையாது. எனவே அவர்களை அவர்களுடைய அலைவரிசைக்குள் சென்று சந்திக்க வேண்டும். எங்களுடைய நம்பிக்கைகளே அவர்களுடைய நம்பிக்கைகளாகவும் இருக்க வேண்டும் என்று இல்லை. எனவே அவர்களை அவர்களாக முதலில் நாங்கள் விளங்கிக்கொள்ள எத்தனிப்போம்" என்று.

கொழும்பில் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகப் போராடத் தொடங்கிய நடுத்தர வர்க்கம் குறிப்பாக இளையோர் காலிமுகத்திடலில் முதலில் வைத்த கோஷம் "You are messing up with a wrong generation" - நீங்கள் பிழையான ஒரு தலைமுறையோடு சொதப்பிக் கொண்டிருக்கிறீர்கள்" என்பதாகும். இது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் பொருந்தும் ஒரு காலம் வருகிறதா?



# இனச் சிக்கலுக்கு இணைப்பாட்சி (சமஷ்டி) அரசியல் முறைதான் தீர்வு என்பதில் தமிழ்த் தேசியத் தலைவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்!

**- கனடா நக்கீரன்**

நித்திரை கொள்பவனை எழுப்பலாம் ஆனால் நித்திரை கொள்வதுபோல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் நிமால் சிறிபால டி சில்வா பிளவு பட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் இணைந்தால்தான் அரசுடன் தீர்வுக்காகத் திறந்த மனதுடன் பேச முடியும் எனக் கூறியிருக்கிறார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் மாறி மாறி ஆட்சிக் கதிரையைப் பிடித்த சிங்கள - பவுத்த பேரினவாதக் கட்சித் தலைவர்கள் இனச் சிக்கலுக்கு தீர்வு காண மறுத்து வருகிறார்கள். தமிழர்களுக்கு அரசியல் சிக்கல் இருப்பதைக் கூட அவ்வப்போது மறுத்து வருகிறார்கள். இணைப்பாட்சி அரசியல் முறைமை பிரிவினைக்கு வழிகோலும் அது நாட்டைத் துண்டாக்கி விடும் என்று சிங்கள மக்களின் மனதை குழப்பி வருகிறார்கள்.



இப்போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ”பிளவு பட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் இணைந்தால்தான் அரசுடன் தீர்வுக்காகத் திறந்த மனதுடன் பேச முடியும்” எனப் பேசியிருப்பது இனச் சிக்கலுக்கான அரசியல் தீர்வை தள்ளிப்போடும் உத்தியாகும்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அவர்களின் பேச்சுக்குப் பதிலளித்துப் பேசிய ததேகூ இன் பேச்சாளர் ம.ஆ. சுமந்திரன் “வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தலைவர்கள் தங்களுக்குள் கட்சிகள், அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தேசிய இனப் பிரச்சினைக்கு சம்‘டி முறையிலான தீர்வே ஒரே வழி என்பதில் மிக உறுதியாகவும், ஒருமித்த நிலைப்பாட்டிலும் உள்ளனர். எனவே, தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டிருக்கின்றார்கள் என்று சாக்குப் போக்குக் கூறி, சமாளிப்பதை விடுத்து, சம்‘டித் தீர்வுக்கு வழி பாருங்கள். ஒன்றுபட்ட நிலைப்பாட்டை கவனத்தில் எடுத்து, அதில் பொதிந்துள்ள நீதி, நியாயத்தைப் புரிந்து கொண்டு, விரைந்த தீர்வுக்கு முன்வாருங்கள்! காலத்தை இழுத்தடித்துச் சாக்குப் போக்குக் கூறிச் சமாளிப்பதை நிறுத்துங்கள்” எனப் பதில் அளித்துள்ளார்.

சுமந்திரன் அவர்கள் பேசுகிற எல்லா மேடைகளிலும் “தமிழ்மக்களுக்கு அர்த்தமுள்ளதும் பூரணமாதுமான சம்‘டி அதிகார முறையே வேண்டும். ஒட்டுமொத்தமாக நாம் அரசியல் விடிவு என்று சொல்வது அர்த்தமுள்ள ஒரு அரசியல் விடிவாக இருக்க வேண்டும். சம்‘டி அடிப்படையிலான அரசியலமைப்பு வெறுமனே பெயர்ப்பலகை மாற்றமாக இருக்க முடியாது. அந்த அதிகாரப் பகிர்வு தமிழ்மக்களுக்குச் சுயாட்சியைக் கொடுப்பதாகவும் சம்‘டியின் அடிப்படை குணாதிசயங்களைப் பூரணமாகக் கொடுக்கப்படுவதாகவும் அமைய வேண்டும். அவை மீளக்பெறக்கூடியதாக இருக்கக் கூடாது. அப்படியான நிறைவான ஒரு சம்‘டி பெறவேண்டும் என்பதே ஒட்டு மொத்த தமிழ்மக்களது அபிலாஷ‘ யாக இருக்கிறது” எனக் கூறிவருகிறார். உண்மையும் அதுதான்.

திரு சுமந்திரன் மட்டுமல்ல ஏனைய தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் இனச் சிக்கலுக்கு சம்‘டி அரசியலமைப்பே தீர்வாக அமைய முடியும் எனக் கூறிவருகிறார்கள். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அரசியல் தீர்வு தொடர்பாக பேசும் போது “இனச் சிக்கலுக்கான அரசியல் தீர்வு சம்‘டி அரசியலமைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுக்கு செயல்வடிவம் கொடுப்பது சம்‘டி அரச முறையே” எனக் கூறிவருகிறார். இந்த நிலைப்பாட்டில் விக்னேஸ்வரன் அவர்கள் உறுதியாக உள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில், தமிழ் மக்கள் ஆளக்கூடிய சம்‘டி முறையான தீர்வுதான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும், அதுவே தமிழ் மக்களின் அபிலாஷ‘களாகும். அதனை ஓரங்கட்டிவிட முடியாது என ததேகூ நா. உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார். .

நாடா ளுமன்றத்தில் கடந்த சனவரி 22, 2022 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் . “ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையில் தமிழ்த் தேசிய பிரச்சினை தொடர்பாக எதனையும் கூறாது விடுபட்டுள்ளது. எமது கொள்கைகள் என்பது எமது மக்களின் அபிலாஷ‘களைப் பிரதிபலிப்பாதாகும். சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் எமது மக்கள் தமிழ் கட்சிகளுக்கு ஓர் ஆணையை வழங்கி வந்துள்ளனர். தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு, அதுவும் சமஷ்டி முறைமையில் அந்த தீர்வு அமைய வேண்டும் எனவும் மிகத் தெளிவாக கூறிவந்துள்ளனர். அதனை ஓரங்கட்ட முடியாது.”

சமஷ்டி அல்லது இணைப்பாட்சி என்ற சொல் ஒரு கெட்ட வார்த்தை என சிங்கள - பவுத்த மக்களிடையே கட்சி வேடுபாடின்றி தென்னிலங்கை அரசியல்வாதிகள் பரப்புரை செய்து வருகிறார்கள். சிங்களக் கடும்போக்காளர்கள் கருத்து கூட்டாட்சியை பிரிவினைவாதத்திற்கான ஒரு சொல்லாகவோ அல்லது ‘தனிநாடு’க்கான படிக்கல்லாகவோ பார்க்கிறார்கள்.

ஆனால் தமிழ் அரசியல் தலைவர்கள் சம்‘டி அல்லது இணைப்பாட்சியை ஆதரிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, இளம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 1920களின் நடுப்பகுதியிலும் 1920 களின் பிற்பகுதியில் டொனமோர் ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்த கண்டிய சிங்களப் பிரதிநிதிகளும் (இலங்கையில்) கூட்டாட்சிக்கான ஆதரவாளர்களாக இருந்தனர்.

கரையோரச் சிங்களம், கண்டிய சிங்களம் மற்றும் தமிழ்ப் பகுதிகள் என இனம் மற்றும் கலாச்சார அடிப்படையில் நாட்டின் நிர்வாகப் பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை முடிவுக்குக் கொண்டுவர கோல்புரூக் ஆணையம் செயல்பட்டது.

1933 ஆண்டு கோல்புரூக் ஆணையம் கரையோரச் சிங்களம், கண்டிய சிங்களம் மற்றும் தமிழ்ப் பகுதிகள் என இன மற்றும் கலாச்சார அடிப்படையில் இருந்த நாட்டின் தனித்தனி நிர்வாகப் பிரிவினையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தது. தனித்தனி நிர்வாக அமைப்புகள் சமூக மற்றும் கலாச்சார பிளவுகளை ஊக்குவித்ததாகவும், நவீன தேசத்தை உருவாக்குவதற்கான முதல்படி நாட்டின் நிர்வாக ஒருங்கிணைப்பு என கோல்புரூக் தவறாக நம்பினார். இதனால் தமிழர்கள் 1933 இல் தங்களது தனித்தன்மையை இழந்தார்கள்.

கண்டிய சிங்களவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட மூன்று மாகாணங்களைக் கொண்ட

**(15ம் பக்கத் தொடர்ச்சி)**



# மன்னாரில் கௌரவமான அரசியல் தீர்வு கோரிய 100 வது நாள் செயல் முனைவின் இறுதி நாள் மக்கள் பிரகடன ஒன்று கூடலில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு கோரிய வது 100 நாள் செயல் முனைவின் மக்கள் குரல் பிரகடனத்தின் 100ம் நாள் பிரகடன ஒன்று கூடலானது செவ்வாய்க்கிழமை (08) காலை 11 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் கடந்த 99 நாட்கள் சுழற்சி முறையில் மக்கள் போராட்டங்கள் இடம் பெற்று வந்தது.

“குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தின் போது வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், நாங்கள் நாட்டை துண்டாட வோ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்”.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் “13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கதுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்” எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு அபகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

குறித்த நூறு நாள் மக்கள் செயவ்முனைவின் இறுதி நாள் மக்கள் பிரகடனம் மன்னார் மாவட்டத்தில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் வடமாகாண இணைப்பாளரும் மன்னார் மாவட்ட மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜே.யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மத தலைவர்கள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள், மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணைய பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது “புரையோடிக் கிடக்கும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான சமஷ்டி அரசியல் தீர்வு” வேண்டிய மக்கள் பிரகடனம் இடம் பெற்றது.

மேலும் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களில் குறித்த பிரகடனம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**







# மல்லாவி இளைஞர்களுடன்தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் சந்திப்பு !



**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு மல்லாவி இளைஞர்களுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் (புளொட்) பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்குமான சந்திப்பொன்று இன்றைய தினம் காலை இடம்பெற்றது.



மல்லாவி சிவன் ஆலய மண்டபத்தில் யுட்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், மற்றும் முல்லைத்தீவை பிரதிநிதித்துவ படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற மாகாண விளையாட்டு போட்டி நிகழ்வில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களை கொளரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?




0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# தேசிய சிக்கலைத் தீர்ப்பதில் துணை நிற்கும் பரந்த மனப்பான்மை

(13ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பாட்சி இலங்கையை முன்மொழிந்தனர். உண்மையில் ஒரு சமஷ்டி இலங்கைக்கு மட்டுமன்றி வடக்கு, கிழக்கின் இணைப்பிலும் வெற்றி பெற்றவர்கள் இலங்கைத் தமிழர்கள் அல்ல கண்டியச் சிங்களவர்களே ஆகும். கண்டிய சிங்களவர்கள் உண்மையில் தங்களை ஒரு தேசமாகவும், தேசிய இனமாகவும் கருதினர். கரையோரச் சிங்களவர்கள், கண்டிப் பிரதேசத்திற்குள் நுழைவதை கண்டிய சிங்களவர் விரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்களிடையே சமஷ்டி பற்றிய கோட்பாட்டை முதன்முதல் முன்வைத்தவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள். 1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கோரி, கொலனிகளின் அரச செயலாளருக்குத் தந்தி ஒன்றை அனுப்பியது. இணைப்பாட்சி அரசியலமைப்பின் கீழ் மட்டுமே தமிழ் சமூகத்தின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்த முடியும் என்று அதில் கூறப்பட்டது.

1948 இல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா சட்டத்தின் மூலம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதை அடுத்து தந்தை செல்வநாயகம், தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை 18, டிசெம்பர் 1949 இல் தோற்றுவித்தார். 1951 ஏப்ரல் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடந்த அதன் முதலாவது
தேசிய மாநாட்டில், இலங்கை சுதந்திரம் பெற்று மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே, வெளிப்படையாக சம'டி அரசியல் முறைமை வேண்டும் எனக் கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தில் சம'டி அரசியல் முறைமை நிலவும் கனடா, இந்தியா, சுவிட்சர்லாந்து மற்றும் சோவியத் ஒன்றியம் எடுத்துக்காட்டாகச் சொல்லப்பட்டது.

பல்லின மக்கள், பலமொழிகள் பேசும் நாட்டை ஒற்றுமையாக வைத்திருப்பதற்கு சம'டி அரசயிலமைப்பு சிறந்த வழியாகும். சிங்கப்பூரின் மக்கள் தொகை 5.5 மில்லியன் மட்டுமே. அதில் சீனர்கள் (74.3 விழுக்காடு) மலேசியர் (13.5 விழுக்காடு) தமிழர்கள் (5.0 விழுக்காடு) மற்றவர்கள் (7.2 விழுக்காடு). இருந்தும் பெரும்பான்மை சீன மொழியோடு மேலும் மூன்று மொழிகள் உத்தியோக மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் ஆங்கிலேயர் இல்லாவிட்டாலும் ஆங்கிலம் அந்த நாட்டின் நிருவாக மொழியாகவும் கற்கை மொழியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று சிங்கப்பூர் ஆசியாவின் பொருளாதாகப் புலி என வர்ணிக்கப்படுகிறது.



சுவிட்சர்லாந்து (**Switzerland**) நாட்டை எடுத்துக் கொண்டால் அது 41,285 சதுர கிமீ பரப்பளவில் 7.7 மில்லியன் மக்கள் தொகை (2009) கொண்ட நாடு. இது மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது பரப்பளவில் 136 ஆம் இடத்தில் உள்ளது. சுவிட்சர்லாந்து மண்டலங்கள் என அழைக்கப்படும் 26 மாநிலங்களைக் கொண்ட இணைப்பாட்சி குடியரசு ஆகும். கூட்டமைப்பின் அதிகாரத் தலைமை-யிடமாக பெர்ன் நகரமும் நாட்டின் பொருளாதார மையங்களாக ஜெனீவாவும் சூரிச்சும் திகழ்கின்றன. பேர்ண் சம'டி அமைப்புகளின் தலைநகராகவுள்ள போதிலும் சூரிச் வர்த்தக உலகில் அறியப்பட்ட நகரங்களாகவும் உள்ளன. சுவிட்சர்லாந்து
உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக உள்ளது, இதன் சராசரி தனிநபர் வருமானம் **$**67,384 (2021) ஆகும். உலகின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள நகரங்களில் சூரிச் மற்றும் ஜெனீவா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

இன்று இலங்கை எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார நெருக்கடிக்குப் பல காரணங்கள் இருந்தாலும் சிங்கள - பவுத் பேரினவாதமே முக்கிய காரணமாகும். தமிழ்மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறையே இலங்கையின் பொருளாதாரத்தை அதல பாதாளத்துக்குத் தள்ளியுள்ளது. நாட்டில் பஞ்சம் இருக்கிறது.

இனச் சிக்கலுக்கு ஒரு அரசியல் தீர்வுகாணாமல் நாட்டின் ஏனைய சமூக மற்றும் பொருளாதாரப் சிக்கல்களுக்கு தீர்வு காண முடியாது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த உள்நாட்டுப் போர் நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்துவிட்டது. இருந்தும் இனச் சிக்கலுக்கு நியாயமான, நீதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் அசமந்தமாகவே இருக்கிறது.



அடுத்த ஓராண்டுக்குள் இனச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படும் என சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். 2016 ஆம் ஆண்டிலும் இதே வாக்குறுதியை அவர் வழங்கியிருந்தார்.. 2019 இல் ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை அவரது வாக்குறுதி நிறைவேறவில்லை.

இதே நேரம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இராசபக்ச செப்தெம்பர் 2020 இல் நியமிக்கப்பட்ட 9 பேர் கொண்டு நிபுணர் குழு வரைந்த புதிய அரசியலமைப்பு வரைவு ஒன்றை சனாதிபதி இரணில் விக்கிரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் யாப்பை வரைந்த 9 பேர் கொண்ட குழுவுக்கு சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். தலைவர் உட்பட இதில் இடம்பெற்ற காமினி மாரப்பன பி.சி., மனோகர டி சில்வா பி.சி., சஞ்சீவ ஜயவர்தன பி.சி. போன்றவர்கள் தீவிர சிங்கள - பவுத்த மனப்பான்மை கொண்டவர்கள். இந்த அரசியல் யாப்பு வரைவில் மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற சரத்து இடம்பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.
இந்த அரசியல் யாப்பின் படியை பெற்றுக் கொண்ட கர்தினால் ரஞ்சித் மல்கொம் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை மவுனப்படுத்தும் முயற்சி என வருணித்துள்ளார். இந்த மாதம் 3 ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெற்ற உலக வாழ்விட நாளை நினைவு கூறும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது "அரசு அல்லது அரசு நிறுவனத்திற்கு எதிராக யாரேனும் குறைகளை ஒளிபரப்பினால் குறைந்தது 20 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுவார்கள்" என்று விமர்ச்சித்துள்ளார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய அரசியல் யாப்பை வரைய சந்திரிகா குமாரதுங்க, மகிந்த இராசபக்ச, சிறிசேனா - விக்கிரமசிங்க எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த பிரதேசங்களின் ஒன்றியம் எனப் பெயரிட்ட யாப்பு வரைவு நாடாளுமன்றத்தில் இரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐதேக யால் தோற்கடிக்கப்பட்டது.
சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க ஒரு புதிய அரசியல் யாப்பை உருவாக்க எண்ணினால் நல்லாட்சி காலத்தில் கிட்டத்தட்ட எழுதி முடித்து பின்னர் கைவிடப்பட்ட யாப்பு வரைவை விட்ட இடத்தில் இருந்து தொடங்கி பூரணப்படுத்தலாம். 2018 இல் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கும் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க இருவருக்கும் இடையில் எழுந்த முரண்பாடே அந்த யாப்பு வரைவு பூரணப்படுத்தப் படாததற்கு முக்கிய காரணமாகும்.
2016 இல் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு அவையின் வழிகாட்டுக் குழு தனது இடைக்கால அறிக்கையை 21 செப்தெம்பர், 2017 இல் வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல் குழுவின் விவாதங்களை ஏப்ரல் 2016 முதல் செப்டம்பர் 2017 வரை 73 முறை இடம்பெற்றன. எனவே நேரம் மற்றும் முயற்சியை வீணாக்குவதற்குப் பதில் ஏற்கனவே இருக்கும் யாப்பு வரைவை விரைந்து பூரணப்படுத்துவதே புத்திசாலித்தனமாகும்.

## Autobiography of Dr. Velupillai Elagupillai, a Scientist in Canada

# கனடாவில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அணு விஞ்ஞானி கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளையின் சுயசரித நூல்

**வ**ட இலங்கையில் ஆவரங்கால் கிராமத்தில் பிறந்தவரும் அங்கு கல்வி கற்று பின்னர் கனடாவில் புலமைப் பரிசு திட்டத்தில் உயர் கல்வியைப் பெற வந்து தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அணு விஞ்ஞானியுமான கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை அவர்களின் சுயசரித நூல் கனடாவில் வெளியிடப்பெறவுள்ளது என்ற நற்செய்தியை இந்த முகநூல்ப் பக்கத்தில் பதிவிடுவதில் அனைவருக்கும் பெருமையே!


பேராசிரியர் இலகுப்பிள்ளை என்னும் ஆளுமையின் வாழ்க்கை வரலாற்றை படித்து அவர் எவ்வாறு அவர் கல்வியிலும் கண்டு பிடிப்புக்களிலும் சாதனை புரியும் அளவிற்கு வளர்ந்தார் என்பதை அறிந்து கொள்ள விரும்புவர்கள் சில நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த நூல் பிரதிகள் கனடா வந்தடைவதற்கு இன்னும் சில வாரங்கள் உள்ளதால் நூலின் வெளியீட்டு விழாக்குழுவினர் அதன் திகதியை தீர்மானிக்க இயலாமல் உள்ளது.

எனினும் இந்த நூலின் பிரதியொன்று எமது கைகளுக்கு கிட்டியுள்ளதால் அதனை மேலோட்ட வாசிக்கும் அற்புதமான வாய்ப்பு எமக்குக் கிட்டியது தான் பிறந்த விவசாயக் கிராமத்தில் அப்போதிருந்த வாழ்க்கை முறை மற்றும் சவால்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் வாசிக்கும் வகையில் பதிவு செய்துள்ள பேராசிரியர் விவசாய மண்ணில் தான் தந்தைக்கு உதவியாகச் சென்று பணி செய்வது. எருது மாடுகளை குளிப்பாட்டுவது வெங்காயம் நடுவது. ஆலயங்களுக்கு மாட்டு வண்டிகளில் பயணிப்பது போன்ற அனுபவங்கள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கும்.

நூலின் 8ம் பக்கத்தில் பேராசிரியர் எழுதியுள்ள ஒரு அத்தியாயத்தின் தலைப்பைப் பார்த்ததும் அவர் மீதுள்ள மரியாதை இன்னும் அதிகரித்தது.

"எனது தாயின் உலகம்" என்ற அந்த




அத்தியாயத்தை நாம் ஆர்வத்துடன் வாசிக்க ஆரம்பித்தோம்.

வறுமையின் காரணமாக தாம் அனுபவித்த துன்பங்களிலிருந்து தற்காலிகமாக விடுதலை பெற தனது தாயார் என்னென்ன "காரியங்களை" செய்தார் என்பதை அவர் விபரிக்கும் போது எம் இதயம் கனத்தது.

தனது சிறுவயதில் இவ்வாறான துன்பங்களை அனுபவித்தவர் பின்னாளில் கனடாவிலும் வேறு உலக நாடுகளிலும் உயர்ந்த பதவிகளை வகித்து அந்த கிராமத்து மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை வியப்புடன் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருந்தது.

280 க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட இந்த அற்புதமான அனுபவப் பதிவின் அட்டைப் படத்தை இங்கே காண்கின்றவர்கள் பலர் இந்த நூலின் வெளியீட்டு விழாவிற்காக காத்திருப்பார்கள் என்பதை எம்மால் உறுதி செய்ய முடிகிறது.

தனது திறமையின் காரணமாகவும் முயற்சிகளின் முத்தாய்ப்பாகவும் முன்னேறிய பேராசிரியர் இலகுப்பிள்ளை அவர்களின் உயர்வு எல்லைகளைக் கடந்த ஒன்றாகும். கனடாவின் பிரதமராக இருந்த போல் மார்ட்டின் அவர்கள் பேராசிரியரை அழைத்து "கனடிய அணுசக்தி ஆணையயத்தின்" தலைவராக நியமித்த நாளை நாம் சற்று நின்று நிதானித்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

நூலின் அத்தனைப் பக்கங்களும் அற்புதங்களும் அடக்கமும் கொண்டவையாக நகர்ந்து சென்று நாம் அதன் இறுதிப் பக்கத்தை அடைகின்றோம்..

எனினும் வெளியீட்டு விழாவிற்காக இன்னும் சில நாட்கள் நாம் காத்திருப்போம்... அவரை வாழ்த்த விரும்புவோர் (416) 999-2282 என்னும் இலக்கத்தை அழைக்கலாம்.

**- நன்றி**

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கணகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்: 12 - 05 - 1971

ஆண்டவன் அடியில்: 16 - 10 - 2022

## திரு பிறேமச்சந்திரன் கந்தையா

**Mountain Financial Group Owner**

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரம் வீராமலையைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிறேமச்சந்திரன் கந்தையா அவர்களின் நன்றி நவிலல்.

குடும்பத்தின் குல விளக்கே - எங்கள்
விழி நிகர்த்த பேருறவே
அன்பின் திருவுருவே - எம்மை
அணைத்துக் காத்த பெருமகனே
வழியேதும் தெரியாமல் - நாம்
விழி மூடி அழுகின்றோம்
உம் நினைவோடு நாம் வாழ்வோம்
நீடு துயில் செய்திடுக நிர்மலன் அடியில்

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!***

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், எமது இல்லத்திற்கு நேரடியாக வந்து தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து சென்ற சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

***அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலி 19-11-2022 சனிக்கிழமை அன்று மு.ப 11:00 மணிமுதல் பி.ப 12:00 மணிவரை Canada Kanthaswamy Temple (733 Birchmount Rd., Scarborough, ON M1K 1R5, Canada) நடைபெற்று அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.***

**இங்ஙனம், குடும்பத்தினர்**

இந்தியா செய்திகள்
India News

# சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளரான 106 வயது முதியவர் மரணம்

## இமாசலபிரதேசத்தில் தபால் வாக்கு செலுத்திய 3வது நாளில் உயிர் பிரிந்தது

இமாசலபிரதேச சட்டசபை தேர்தல் வருகிற 12-ந்தேதி தொடங்குகிறது. இந்த தேர்தலில் 100 வயது கடந்த 1,190 வாக்காளர்கள் வாக்களிக்கத்தகுதி பெற்றிருந்தனர் உள்ளனர். அவர்கள் கடந்த 2ந் தேதியில் இருந்து தபால் வாக்கு செலுத்தி வருகின்றனர்.

அதன்படி, சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளரான கின்னௌர் மாவட்டத்தைச்சேர்ந்த 106 வயது ஷியாம் சரண் நேகி என்ற முதியவர் கடந்த 2-ந்தேதி தனது தபால் வாக்கை செலுத்தினார். அவருக்கு தேர்தல் ஆணைய குழுவினர் சிவப்பு கம்பள வரவேற்புடன் முழு மரியாதை அளித்தனர்.



அவர் முதலில், வாக்கு மையத்திற்குச் சென்று வாக்கு செலுத்துவது என்பதிலேயே ஆர்வத்துடன் இருந்து வந்தார். ஏனெனில் சுதந்திர இந்தியாவில் 1951ரூல் தொடங்கிய தேர்தலில் முதல் வாக்கு செலுத்தியவர் இவர் தான். ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிப்பதை வழக்கமாகக் கொண்டு இருந்தார். எனினும், திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்ட நிலையில், அவரது வீட்டில் வைத்தே சிறப்பு ஏற்பாடுகளின்படி வாக்கு செலுத்தினார். அடுத்த நாளில் ஷியாம் சரண் நேகியின் உடல்நலம் மோசமடைந்தது.

இந்த நிலையில், அவர் தனது சொந்த ஊரில் 4ரூந் தேதி காலமானார். அவரது மறைவுக்கு இமாசல பிரதேச முதல்-மந்திரி ஜெய்ராம் தாக்குர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நேகியின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.



உலக செய்திகள்
World News

# கடலில் மூழ்க தொடங்கிய கப்பல்: நடுக்கடலில் தத்தளித்த 306 இலங்கைத் தமிழர்களை மீட்ட சிங்கப்பூர் கடற்படை

கப்பல் பழுதாகி நடுக்கடலில் தத்தளித்த இலங்கைத் தமிழர்களை சிங்கப்பூர் கடற்படை மீட்டுள்ளதாக இலங்கை கடற்படை தகவல் தெரிவித்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள், அகதிகளாக வேறு நாடுகளுக்கு செல்லும் நிலை நீடிக்கிறது. புகலிடம் தேடி கனடா நோக்கி சரக்கு கப்பலில் இலங்கை தமிழர்கள் 300க்கும் அதிகமானோர் சென்ற போது கப்பல் மூழ்கத்தொடங்கியது. பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் இடையே விபத்துக்குள்ளான கப்பலில் குழந்தைகள், பெண்கள், முதியவர்களும் பயணித்துள்ளனர். இதனை அறிந்து இலங்கையை சேர்ந்த ஒருவர் இலங்கை கடற்படையை தொடர்பு கொண்டு நாங்கள் 306 பேர் நடுக்கடலில் ஆபத்தான நிலையில் உள்ளோம். நாங்கள் சென்ற கப்பல் கடலில் மூழ்கும் நிலையில் உள்ளது என தெரிவித்தார். இதனையடுத்து கொழும்புவில் உள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சார்பில் சிங்கப்பூர், வியட்நாம், மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படையை தொடர்பு கொண்டு நடுக்கடலில் சிக்கியவர்களை மீட்க இலங்கை அரசு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில் சிங்கப்பூர் கடற்படை அந்த கப்பலையும், கப்பலில் பயணித்த 306 பயணிகளையும் பத்திரமாக மீட்டுள்ளதாக இலங்கை கடற்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் 306 பேரையும் பத்திரமாக வியட்நாம் கொண்டு செல்ல உள்ளதாகவும் தெரிவித்தார். இன்று நள்ளிரவு 1 மணி அளவில் அந்த கப்பல் வியட்நாமை அடையும் என கூறப்படுகிறது. அதன் பிறகு தான் அந்த கப்பலில் பயணித்தவர்களின் விவரம் தெரிய வரும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# 11 ஆயிரம் ஊழியர்களை அதிரடியாக நீக்கியது, பேஸ்புக் நிறுவனம்




பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக் நிறுவனத்தில் இருந்து 11000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா இத்தகவலை அறிவித்துள்ளது.

வருவாய் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து செலவுகளைக் குறைக்கும் நடவடிக்கையாக 11000 ஊழியர்கள் நீக்கப்பட்டுள்ளனர். "மெட்டா நிறுவன வரலாற்றில் நாங்கள் செய்த மிகவும் கடினமான சில மாற்றங்கள் தொடர்பாக தகவலை இன்று பகிர்கிறேன். எங்கள் குழுவின் வலிமையை சுமார் 13 சதவீதம் குறைக்கவும், 11,000-க்கும் மேற்பட்ட எங்கள் திறமையான பணியாளர்களை விடுவிக்கவும் முடிவு செய்துள்ளேன்" என பேஸ்புக் நிறுவனர் மார்க் சக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட செலவினங்களைக் குறைப்பது மற்றும் முதல் காலாண்டு வரை ஆட்சேர்ப்பை நிறுத்தி வைப்பதன் மூலம் திறமையான நிறுவனமாக மாறுவதற்கு கூடுதல் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் கூறி உள்ளார்.

பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு 16 வார அடிப்படை ஊதியம் வழங்கப்படும் என்று பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நடிகை ஆகிறார் பாடகி ராஜலட்சுமி



"சார்லி சாப்ளின் 2" படத்தில் இடம்பெற்ற "என்ன மச்சான்", "புஷ்பா" படத்தில் இடம்பெற்ற "சாமி என் சாமி" உட்பட பல பாடல்களை பாடியிருப்பவர் நாட்டுப்புற பாடகி ராஜலட்சுமி செந்தில். இவர் "சைலன்ஸ்" என்ற படம் மூலம் நடிகையாக அறிமுகமாகிறார். தந்தை - மகள் பாசப் பின்னணியோடு பெண்களின் பாதுகாப்பு பற்றி விவாதிக்கும் கதையாக இந்தப் படம் உருவாகிறது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி கணபதி பாலமுருகன் இயக்குகிறார். இவர் கவுண்டமணி நடித்த, "எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது" என்ற படத்தை இயக்கியவர். நார்மல் ஃபிலிம் ஃபேக்டரி சார்பாக இளஞ்செழியன் தனது நண்பர்களுடன் இணைந்து தயாரிக்கிறார். ராதாரவி, விஜய் பாரத், மதுரை ரிஷி, குழந்தை நட்சத்திரம் அதிதி பாலமுருகன் உட்பட பலர் நடிக்கின்றனர்.



# கூட்டமைப்பு மறுசீரமைப்புக்கு தயாரா?



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென கூட்டமைப்பில் இருந்து குரல் எழும்பியுள்ளது. குறிப்பாக இந்தக் குரல் தமிழரசுக் கட்சியில் இருந்து எழுந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இதுவரை காலமும் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏணைய கட்சிகளே இந்தக் கோரிக்கையினை கடந்த காலங்களில் முன் வைத்தன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற சக்திகளும் இந்தக் கோரிக்கையினை தொடர்ச்சியாக முன்வைத்தன.

ஆனால் கூட்டமைப்பின் தலைமையும் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவதை தவிர்த்து வந்தனர். இறுதியில் இந்தக் கோரிக்கையை முன் வைத்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பல வெளியேறின அல்லது வெளியேற்றப்பட்டனர். அதைப்பற்றி எல்லாம் கணக்கில் எடுக்காத தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கூடாக தமிழரசுக் கட்சியின் அரசியலை முன்னெடுப்பதிலும் பலப்படுத்திக் கொள்வதிலும் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது.

- Big Brother பாணியில் தமிழரசுக் கட்சி

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விவகாரம்குறித்த எந்தவித நிகழ்ச்சி நிரலும் இன்றி தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுக்கும் அரசியலையே பிரதானமாகக் கொண்டு செயற்பட்டது. தமிழரசுக் கட்சி பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பிற்குள் Big Brother பாணியில் ஆட்சி நடத்தியது. இதன்மூலம் தமிழரசுக் கட்சி பெரிதாக ஒன்றையும் பெற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் கூட்டமைப்பை சிதைத்ததாகவும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது வைத்திருந்த நம்பிக்கையை தகர்ப்பதுமாகவே கூட்டமைப்பின் நகர்வுகள் அமைந்தன.

மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்கள் குறித்தோ தமிழர் விவகாரத் தீர்வு குறித்தோ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலம் குறித்தோ தென்னிலங்கையின் தமிழர்களுக்கு எதிரான போக்கை தடுத்து நிறுத்தும் நிலையிலோ சிங்கள இராஜதந்திரத்துக்கு ஈடு கொடுக்கும் நிலையிலோ கூட்டமைப்பின் செயற்பாடுகள் இருக்கவில்லை.

- தலையாட்டி பொம்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இதனால் தமிழர் தரப்புக்கு தாயகத்திலும் சாவதேசரீதியிலும் தொடர்ந்தும் தோல்விகளே கிடைத்தன. மொத்தத்தில் இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேசத்தினதும் "தலையாட்டி பொம்மையாக" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்தன.

அதேவேளையில் 2009 இல் போர் மௌனிக்கப்பட்டபின் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகரித்து இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்திற்கும் பிரகடனப்படுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மதிக்காது செயற்படவே கூட்டமைப்பின் "தமிழ்த் தேசியத்தில்" நம்பிக்கை இழந்து மக்களில் ஒரு பகுதியினர் கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்பட்டனர். இதனால் கூட்டமைப்பின் ஆசனங்களில் வீழ்ச்சி கண்டது.

- 2004 பொதுத் தேர்தலில் 20 ஆசனங்களுடன் 2 போனஸ் ஆசனத்துடன் 22 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.
- 2010 பொதுத் தேர்தலில் 13 ஆசனங்களுடன் 1 போனஸ் ஆசனத்துடன் 14 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.
- 2013 பொதுத் தேர்தலில் 13 ஆசனங்களுடன் 1 போனஸ் ஆசனத்துடன் 14 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.
- 2015 பொதுத் தேர்தலில் 14 ஆசனங்களுடன் 2 போனஸ் ஆசனங்களுடன் 16 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.
- 2020 பொதுத் தேர்தலில் 9 ஆசனங்களுடன் ஒரு போனஸ் ஆசனம் பெற்று 10 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

இனிவரும் காலங்களில் கூட்டமைப்பின் அரசியல் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

- இது மாத்திரமல்ல வடக்கு கிழக்கில் கூட்டமைப்பு இழந்த ஆசனங்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகளின் கைகளில் வீழ்ந்துள்ளன.

- வடக்கும் கிழக்கும் நிர்வாக ரீதியில் ஆட்சியாளர்களால் பிரிக்கப்பட்டபோதும் மக்கள் தமிழ்த் தேசிய உணர்வால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது மக்கள் தமிழ்த் தேசிய உணர்வுக்கப்பால் வடக்குக் கிழக்கென இரு துருவங்களாகிவிட்டனர். கிழக்கு தமிழ் மக்கள் தனி வழி பற்றி ஆழமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

- வடக்குக் கிழக்கில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் போராட்டத்துடன் கைகோர்த்துப் பயணித்தவர்கள். ஆனால் தற்போது "ஆற்றைக் கடக்கும்வரை அண்ணண் தம்பி ஆற்றைக் கடந்தபின் நீ யாரோ நான் யாரோ" என்ற கதையாக நடத்தப்படுவதாக குமுறிக் கொண்டிருக்கின்றனர். தற்போது "வடக்கு மலையக மக்கள்" என்ற ஒரு உருவாக்குவதில் முனைப்பாக உள்ளனர்.

- இதுவரை கிழக்கு கரையோர மாகாண சபைகுறித்த கருத்தியலில் இருந்த முஸ்லிம்தரப்பு தற்போது கிழக்கு மாகாண சபைகுறித்த கருத்தியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

- இதுவரை தமிழ்த் தேசியத்திற்கு எதிராக செயற்பட்ட தமிழர் தரப்பு இணக்க அரசியல் என்ற போர்வையில் அரசாங்கத்தின் அனுசரனையுடன் உள் நாட்டு வெளி நாட்டு வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்றனர். தற்போது இவர்களில் ஒரு பகுதியினரும் "தமிழ்த் தேசியம் பேசுவோரும்" தமிழ்ச் சமூகத்தை நாசப்படுத்தும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

- அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான வேலைத் திட்டங்களையும் ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இன்றைய நிலைமைக்கேற்ப ஒரு புது ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். இது 13வது திருத்தத்தை இல்லாமலாக்குவதற்கான முயற்சியென அரசியல் விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் ஆணையை மதிக்காது பயணித்தமையினாலும் கூட்டமைப்பிற்குள் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டமையினாலும் கள நிலவரம் திசைமாறிப்போகக் காரணமாகியது.

மொத்தத்தில் தமிழ்த் தேசியம் பரந்த வடக்கு கிழக்கு கருத்தியலில் இருந்து சுருங்கி யாழ் பெருந் தேசியவாதமாக உருமாறிவிட்டது. 2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கப் புறப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழ் மக்கள் பெற்றதெல்லாம் இழப்புக்களும் தோல்விகளும் தமிழ் மக்களிடையே முற்றிப்போன முரண்பாடுகளுமாகவே உள்ளன.

ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்குமாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2004 தேர்தலுடன் தேர்தல் திணைக்கள வெளியீடுகளில் Tamil National Alliance என்ற பெயர் அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழரசுக்கட்சி என்றே பிரசுரிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழரசுக் கட்சி விழுங்கியுள்ளதையே தேர்தல் வெளியீடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. வீட்டுச் சின்னமும் தேர்தல் விதி முறைப்படி கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தமையினால் தேர்தல் திணைக்களம் இந்த முடிவை எடுக்கக் காரணமாகின.

- தமிழ்த் தேசியத்தை "படு கொலையாக்கிய" வரலாராறு மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த 13 வருடகால வரலாறு தமிழ்த் தேசியத்தை "படு கொலையாக்கிய" வரலாராகவே உள்ளது.

தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கூடாக முன்னெடுத்த அரசியலால் தமிழரசுக் கட்சியும் வாழவில்லை கூட்டமைப்பையும் வாழவிடவில்லை என்ற நிலையே உருவாகியுள்ளது.

இந்த ஒரு பின்னணியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவதுகுறித்த கோரிக்கையை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா முன் வைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவதால் மாத்திரம் திசைமாறிக் கிடக்கின்ற தமிழர் அரசியலை நிமிர்த்திவிட முடியாது. கூட்டமைப்பின் ஒட்டு மொத்த அரசியலும் தமிழரசுக் கட்சியின் பிடியில் இருந்து விடுபட்டு சுயாதீனமான அமைப்பாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
2. கூட்டமைப்புக்கென யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.
3. கூட்டமைப்புக்கென பொதுச் சின்னம் உருவாக்கப்பட வேண்டும்.
4. சம பிரதிநிதித்துவம் கொண்ட அதி உயர் சபை உருவாக்கப்பட வேண்டும்.
5. நிதி விடயங்களைக் கையாள்வதற்கென ஒரு நிதிக் குழு உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் புலம் பெயர் தமிழர்கள் வாரி வழங்குகின்ற நிதிக்கு என்ன நடக்கின்றது, எவர் கைகளில் நிதி முடக்கப்படுகின்றது என்பன குறித்து ஆராயப்பட வேண்டும். கடந்த பல வருடங்களுக்கு முன் தமிழ் அரசியல்வாதி ஒருவரிடம் கனடாவில் வழங்கப்பட்ட நிதி எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்று கனடா வாழ் தமிழ் மகன் ஒருவர் கேள்வி எழுப்பியபோது அந்த அரசியல்வாதி வழங்கிய பதில் இது. "பிரபாகரனிடம் கொடுத்த பணத்துக்கு கணக்கு கேட்டீர்களா? என்னிடம்வந்து கணக்குக் கேட்கின்றீர்கள்" என்று திருப்பி கேள்வி கேட்டுள்ளதாக கனடாவில் பரபரப்பாகப் பேசப்பட்டது.
6. கூட்டமைப்பிற்கென தேர்தல் நியமனக் குழு அமைத்தல்.
7. தமிழர் விவகாரத்துக்கென தீர்வுப் பொதியை முன் வைத்தல்.
8. இலங்கை தரப்பையும் சர்வ தேசத்தையும் கையாளக் கூடிய குழுவை அமைத்தல்.
9. தமிழர் விவகாரத்துக்கென நிபுணத்துவ குழு {Think Tank} உருவாக்குதல்.
10. தாயகத்தையும் புலம்பெயர் தமிழர்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருதல்.
10. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதில் நடைமுறையில் சிக்கல்கள் இருந்த போதும் கூட்டமைப்பின் இலக்குகளில் ஒன்றாக நீண்ட கால நோக்கில் உள்வாங்கப்பட வேண்டும்.
11. தமிழ்ச் சமூகம் திட்டமிடப்பட்ட போதைப் பொருள் பாவனைக்குள் இழுத்துவிடப்பட்டு அழிந்து கொண்டிருக்கின்றது. தமிழ்ச் சமூகம் தான் கொண்டிருந்த சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பை இழந்தள்ளதன் விளைவே இது.
12. அணைத்துத் தரப்பினரும் இணைந்து கொள்ளும்வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீள் உருவாக்கம் அமைய வேண்டும். இதற்கு தமிழரசுக் கட்சி பச்சைக் கொடி காட்டுமா என்பது கேள்விக் குறியே. இருள் சூழ்ந்த குகைக்கள் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் முரண்பாடுகளை களைந்த ஓரணியில் பயணிக்க வேண்டிய இன்றைய கால கட்டத்தில் மக்கள் பல பிரிவுகளாக சிதறிப்போவது தென்னிலங்கை அரசியலின் நகர்வுகளுக்கு பச்சைக் கம்பளம் விரிப்பதாகவே அமையும். கூட்டமைப்பின் மறுசீரமைப்புக்கு தமிழரசுக் கட்சி தயாரில்லையெனில் மாற்றுத் தலைமை நோக்கி நகர்ந்தாக வேண்டும்.

- 1977 இல் தமிழ்த் தலைமைகளுக்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினர். இந்த ஆணையை தமிழ்த் தலைமைகள் தேர்தல் அறுவடையுடன் முடக்கிவிட்டனர்.

- இந்த மக்கள் ஆணையை தமிழ் இளைஞர்கள் கைகளில் எடுத்தனர். 2009 இல் அது மௌனிக்கப்பட்டது.

- 2009க்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினர். கூட்டமைப்பு தாம் பெற்ற ஆணையை மதிக்கத் தவறியதனால் தலைமைத்தவத்தில் பெரிய வெற்றிடம் தோன்றியுள்ளது.

- மக்களின் இன்னொரு ஆணை பெற தமிழ் மக்களுக்கான தலைமை மீள் உருவாக்கப்பட வேண்டும். மீள் உருவாக்கம் பெறும் தலைமை ரயில் தண்டவாளம் போன்று நாடாளுமன்ற அரசியல் மற்றும் நாடாளுமன்ற அரசியலுக்கப்பால் என இரு தண்டவாளத்தில் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்தில் அரசியல் தலைமைகளுக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தை நேசிப்போர் சிவில் சமூகத்தினர் பல்கலைக் கழக மாணவர்கள் என அணைத்து தரப்பினரும் கைகோர்த்துப் பயணிக்க முன் வரவேண்டும். இது தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொருவரது கடமையாகும். இல்லையேல் தமிழ்ச் சமூகம் இன்னொரு முள்ளிவாய்க்கால் ஊழியத்திற்குள் சிக்க வேண்டி வரும்.

Email : vathevaraj@gmail.com

# திருச்செந்தூரனின் 'உரிமை எங்கே?': மலையக எழுச்சியின் அலாரம்!

மு.நித்தியானந்தன்


மு.நித்தியானந்தன்


திருச்செந்தூரன்



கல்கி நடத்திய சிறுகதைப்போட்டியில் ,ரண்டாவது பரிசு பெற்ற திருச்செந்தூரனின் "உரிமை எங்கே?" (5.02.1961) என்ற சிறுகதை மலையக மக்களின் அடிப்படை உரிமைக்குரலை எழுத்திலே வார்த்த முதல் கதையாக வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தக்கதை மலையக மக்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதியின் சரித்திரத்திலே ஊன்றி நிற்கிறது. 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால், வாக்குரிமை இழந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு, பிரஜாவுரிமை வழங்கும் நோக்கில் 1949 ஆம் ஆண்டு இந்திய, பாகிஸ்தானிய குடியிருப்பாளர்களுக்கான (பிரஜாவுரிமை) சட்டத்தை இலங்கை அரசு அடுத்த ஆண்டிலேயே கொண்டுவந்தது. இச்சட்டத்தின் கீழ் மலையகத் தமிழர்கள் பிரஜாவுரிமை பெறுவது என்பது பெருங்கடினமாயிருந்தது.

ஆங்கிலத்தில் இருந்த இந்த விண்ணப்பப் பத்திரங்கள் எட்டு வித்தியாசமான வகைகளில் இருந்தன. சரியான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் உடனேயே நிராகரிக்கப்பட்டன. நன்கு படித்தவர்களே இந்த விண்ணப்பப் படிவங்களை நிரப்பக் கஷ்டப்பட்டிருப்பார்கள். அனைத்திற்கும் ஆதாரங்கள் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். 1949 ஆம் ஆண்டுச் சட்டத்தை எதிர்த்து இலங்கை - இந்திய காங்கிரஸ் போராட்டம் நடத்தியது. இந்தச் சட்டத்தை பகிஷ்கரித்து, யாரும் இதற்கு விண்ணப்பிக்கக்கூடாது என்று இலங்கை - இந்திய காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது.

பிரஜாவுரிமை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இலங்கை அரசு 1949 தொடக்கம் 1951 வரை இரண்டு ஆண்டுகால அவகாசம் கொடுத்திருந்தது. பகிஷ்கரிப்பை மேற்கொண்ட இலங்கை - இந்திய காங்கிரஸ் பத்து மாதங்களின் பின்னர் தனது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, மக்களை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரியது. மக்கள் லட்சக்கணக்கில் முண்டியடித்துக்கொண்டு திடீரென விண்ணப்பப்படிவங்களை கோரியபோது, விநியோகிக்க அரசிடம் அந்த அளவு படிவங்களும் இருந்திருக்கவில்லை. அவசரகதியில் பிழைகளோடு விண்ணப்படிவங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அரசு எளிதாக அவற்றை நிராகரிக்கக்கூடியதாகவிருந்தது. விண்ணப்பங்களை விசாரித்த விசாரணை அதிகாரிகள் கடூரமானவர்களாக இருந்தனர். மொத்தம் கிடைக்கப்பெற்ற 237,034 விண்ணப்பங்களில் 160,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பித்த 825,000 பேரில் 134,188 பேர் மட்டுமே பிரஜாவுரிமை பெற்றனர். விண்ணப்பித்தவர்களில் 16.2% க்கு மட்டுமே பிரஜாவுரிமை கிடைத்தது. 83 வீதமானோர் நிராகரிக்கப்படிருந்தனர்.

"காலை மூன்று மணி. பறங்கிமலைத் தோட்டம் ஏழாம் நம்பர் லயத்தில் உள்ள சுப்பையா நாயக்கரின் காம்பிராவில் கொழுந்து கணக்கப்பிள்ளையிடம் கைமாற்றாக வாங்கிய அலாரம் கணீர் என்று ஒலித்தது" என்று திருச்செந்தூரனின் "உரிமை எங்கே?" என்ற சிறுகதை ஆரம்பிக்கிறது.

இந்த அலார ஒலி மலையகச் சிறுகதையின் எழுச்சிக்கான அலார ஒலி.

மலையக உரிமையின் எழுச்சிக்கான அலார ஒலி.

சுப்பையா நாயக்கரை மட்டுமல்ல, மலையக மக்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பும் அலார ஒலி.

ஒரு சிறுகதைக்கான அற்புதமான ஆரம்பம் இது.

"...இன்னிக்கே கண்டியிலே போய்ச் சத்தியம் செஞ்சிப்புட்டா, நாமெல்லாரும் இந்த நாட்டிலே "பெரசை" ஆயிரலாமுடி. வரச் சொல்லி "கண்டுரோலர்" எழுதியிருக்காருன்னு நேத்துச் சொன்னேனே" என்று அரைத்தூக்கத்தில் இருந்த மீனாட்சியை எழுப்புகிறார் சுப்பையா நாயக்கர். பதினாறு மைல் தொலைவில் இருக்கும் கண்டிக்குப்போவதற்கு வீட்டாரை எழுப்பி, ரணகளப்படுத்தும் சுப்பையா நாயக்கரின் தாபத்தை அழகாக விபரித்துச் செல்கிறார் திருச்செந்தூரன்.

"சுப்பையா நாயக்கருக்கு அன்று நிலைகொள்ளவில்லை. ஆமாம், இருக்காதா என்ன? எத்தனை ஆண்டுகள்? அந்த ஒரு கடிதத்திற்காக அவர் தவியாய்த் தவித்தார். ஓராண்டா, ஈராண்டா? பத்தாண்டுகள் எப்படியோ ஓடி மறைந்து விட்டன. அவருடைய பாட்டன் இந்தியாவிலிருந்து வந்தது ஏதோ உண்மைதான். சுப்பையாவின் தந்தையோ கடலைப்பற்றி கேள்விப்படாமலே தேயிலைக்கு உரமானார். சுப்பையாவுக்குக் கடல் என்ன நிறம், எப்படி இருக்கும் என்று கண்டவர்கள் சொல்லக்கேள்விதானேயன்றிக் கண்டதேயில்லை. ஈழத்தின் மத்தியபகுதியில் இருக்கும் ஒரு தேயிலைத் தோட்டத்தில் உழைக்கும் ஒரு தொழிலாளிதான் நாயக்கர். சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் - பிரஜாவுரிமைச் சட்டம் வந்த புதிதில் தம்மையும், தம் குடும்பத்தையும் இலங்கைப் பிரசைகளாய்ச் சேர்த்துக்கொள்ளுமாறு மனு போட்டவர்களில் அவரும் ஒருவர். மனு போட்டதும் உரிமை கிடைத்து விட அவரென்ன லட்சாதிபதியா? எத்தனை விசாரணைகள், எவ்வளவு பணச் செலவு, அலைச்சல்? அப்பப்பா, அவர் தமது பிறப்புரிமையைப் பெறும்பொருட்டு பஸ்களுக்கும், தபால் அலுவலகத்துக்கும் கொடுத்த பணம் இன்று அவரிடம் இருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் தோட்டத்திற்காவது அவர் அதிபதியாக இருந்திருப்பார். பாவம், இத்தனை இன்னல்களுக்குப் பின்னர், ஒருநாள் அந்தக்கடிதம் வந்தது.

"உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் பிரசா உரிமை தரப்படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிஷனர் முன்னிலையில் சத்தியம் செய்து, பிரசா உரிமை சர்டிபிகெட்டைப் பெற்றுக்கொள்ளவும்." என்று தேதியும் குறிக்கப்பட்டிருந்த கடிதம் கிடைத்தால் சொல்ல வேண்டுமோ? என்று பிரசா உரிமைக்காக சுப்பையா நாயக்கர் பட்டபாட்டை திருச்செந்தூரன் நன்கு எழுதிச் செல்கிறார்.

"ஆண்டுகள் ஆறு. எங்கும் பிரசா உரிமைப் பேச்சிலேயே உருண்டோடின." என்கிறது கதை.

உண்மைதான். 1949 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி கோரப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவு எடுத்து முடிப்பதற்கு அரசிற்கு 13 ஆண்டுகள் எடுத்தன.

மூன்று முறை சுப்பையா நாயக்கர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.

அந்த விசாரணையில், "உன் பொம்பளையை நீ உண்மையாகத்தான் கல்யாணம் முடித்தாயா?" என்றெல்லாம் கேள்விகள் வீசப்பட்டன.

"என்னங்க இப்படி கேட்டுட்டீங்க? நம்ம மாரியம்மாவுக்குத் தெரியுங்க. ஆத்தா கோயில்லத்தான் நான் கட்டினேன். நம்ம தோட்டத்திலே எல்லோருக்கும் வெத்திலை பாக்கு வச்சேங்க!" என்று பதில் சொல்கிறார் சுப்பையா.

"ஓகோ அப்படியா! நீங்க ரெஜிஸ்டர் பண்ணலையா?" அரசு தரப்பு கேள்வி.

"அதெல்லாம் இப்ப வந்ததுதானுங்களே. அந்தக் காலத்துலே அதெல்லாம் ஏதுங்க?" என்று பதில் கூறுகிறார் சுப்பையா.

"சரியப்பா, உன்னுடைய முதல் பிள்ளையும், மூன்றாம் பிள்ளையும் இலங்கையில் பிறந்தாங்கன்னு புரூவ் பண்ணறே. இரண்டாவது பிள்ளைக்கு "புரூவ்" இல்லையே?" பெரியதோர் உண்மையைக்கண்டு பிடித்தார் உதவி விசாரணையாளர்.

"இது அநியாயமுங்க. எம் மவன் கந்தையா பொறந்த அன்னிக்கே தோட்டத்து டாக்டரய்யாகிட்டே சொன்னேனுங்களே" பரிதாபமாக க்கூறினார் நாயக்கர்.

"நமக்கு அதெல்லாம் தெரியாது. உனக்குப் பிரசா உரிமைதரத் தகுந்த புஷரூவ் இல்லை என்று ஒரே அடியாகக்கூறி, நாயக்கரை வெளியே செல்லுமாறு பணித்தார் உதவி கமிஷனர்.

பிறகு ஐந்நூறு ரூபாய் ஒழுங்கு பண்ணி, அய்யாவிடம் கொடுத்து சரி பண்ணி விடலாம் என்று அய்யாவின் கார்ச் சாரதியிடம் ஒரு மாதிரி காசைப் புரட்டிக்கொடுக்கிறார் சுப்பையா.

இப்போது தனக்கு வந்த கடிதத்துடன் கண்டியில் கமிஷனரின் அறைக்குள் உடம்பெல்லாம் நடுங்கிய நிலையில் போகிறார் சுப்பையா நாயக்கர். "நமஸ்காரம், நீ எந்தத் தோட்டம்?" -அதிகாரத்தோடு கேட்டார் கமிஷனர்.

"நான் பறங்கிமலைத் தோட்டங்கையா..." - பணிவோடு பதில் கூறினார் நாயக்கர்.

"ஓ...யெஸ் குட் ஓம் பேரு?"

"எம் பேரு சுப்பையா நாயக்கர். அவ பேரு மீனாட்சிங்க"

"இன்னொரு முறை திருப்பிச் சொல்லு ஓம் பேரு?"

"சுப்பையா நாயக்கர் தாங்க"

"அப்படியா இன்னிக்கு நாங்க கூப்பிட்டது பறங்கிமலை சுப்பையா எட் கங்காணிதானே? அவன் சம்சாரம் பேரு தெய்வானை"

"ஐயா எனக்குத் தாங்க வரச் சொல்லி கடுதாசி வந்துச்சு"

"சுப்பையா கோவிக்கவேணாம். இது நம்ப கிளாக்கர் செய்த குத்தம். ஒனக்குப் பிரசா உரிமை இல்லைன்னு அனுப்பிட்டான். அவங்க கடுதாசி ஒனக்கு வந்தது. கோபிச்சுக்க வேணாம். நீங்க போகலாம்" என்று அரைகுறைத் தமிழில் கூறிய கமிஷனர் கோபமாக மேசை மணியைத்தட்டிச் சேவகனை அழைத்தார்.

அலுவலகத்தினின்றும் தள்ளாடித் தள்ளாடி வெளியில் வந்த நாயக்கர் ஒரு மரத்தடியில் தம்மையும் மறந்து இருந்துவிட்டார்.

சுப்பையா நாயக்கரின் கனவுகள் சிதறி நொறுங்குவதை தத்ரூபமாகச் சித்திரிக்கிறார் திருச்செந்தூரன்.

தலதா மாளிகை நெருங்க நெருங்க நடுப்பகல் பூசையின் மணியோசை டாங்.. டாங்.. என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் "உரிமை எங்கே? உரிமை எங்கே?" என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பது போல இருந்தது. என்று கதைக்கு முத்தாய்ப்பு வைக்கிறார் திருச்செந்தூரன்.



# சர்வதேச சிலை கடத்தல் மன்னன் சுபாஷ் கபூர் ஜெர்மன் அரசிடம் ஒப்படைப்பு?

## இருநாட்டு உறவு சிக்கலை தீர்க்க இந்திய அரசு முடிவு



நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த சிலைகள், கலை பொக்கிஷங்களை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லக் கூடாது என மத்திய அரசு 1972ல் சட்டம் இயற்றியது. ஆனால், அதையும் மீறி இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து ஏராளமான பழமை வாய்ந்த சிலைகள், கலை பொக்கிஷங்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா உட்பட பல்வேறு வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டன.இதுகுறித்து தமிழக காவல் துறையின் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில்,பெரும்பாலான சிலைகள் கடத்தப்பட்டதற்கு மூளையாக செயல்பட்டது அமெரிக்க குடியுரிமை பெற்ற சுபாஷ் சந்திர கபூர்(73) என்பது தெரியவந்தது.

வெளிநாடுகள் மட்டுமின்றி, தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு சிலை கடத்தல் வழக்கிலும் இவருக்கு தொடர்பு இருப்பதும் உறுதி செய்யப்பட்டது. இது ஒருபுறம் இருக்க சுபாஷ் கபூரை சர்வதேச போலீஸாரும் தேடி வந்தனர். பிரபல கலைப்பொருட்கள் வியாபாரியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட சுபாஷ் கபூர், அமெரிக்காவில் கலைப்பொருள் விற்பனை மையத்தை நடத்தி வந்தார். கடத்தி கொண்டு வரப்படும் பெரும்பாலான சிலைகள் இங்கிருந்தே ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் 2011 அக்டோபரில் சர்வதேச இன்டர்போல் போலீஸார் உதவியுடன் ஜெர்மனியில், அந்நாட்டு போலீஸார் சுபாஷ் கபூரைக் கைது செய்தனர்.

பின்னர், அவரை தமிழக போலீஸார், தமிழகத்தில் நடைபெற்ற சிலை கடத்தல் வழக்கு தொடர்பாக இந்தியா கொண்டுவர கோரிக்கை விடுத்தனர்.இதையடுத்து 2012ல் சுபாஷ் கபூர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் காவல் நிலையத்தில் 2008ல் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாகவே சுபாஷ் கபூரை தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸார் கைது செய்திருந்தனர். ரூ.94 கோடி மதிப்புள்ள 19 பழமையான சிலைகளை அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்துக்கு கடத்தி விற்பனை செய்ததாக அவர் மீது வழக்கு பதிவானது.

அந்த வழக்கில் கும்பகோணம் சிறப்புநீதிமன்றம் சுபாஷ் கபூருக்கு கடந்த 1ம் தேதி, 10 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.7ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. ஏற்கெனவே சுபாஷ் கபூர் 10 ஆண்டுசிறை தண்டனையை முடித்து விட்டார். இருப்பினும், அவர் மீது மேலும் 4 சிலை கடத்தல் வழக்கு தொடர்பான குற்றச்சாட்டுகள் உள்ளன. எனவே, அதிலும் தண்டனைபெற்றுக் கொடுக்க போலீஸார் முனைப்பு காட்டி வருகின்றனர்.இது ஒருபுறமிருக்க, ஜெர்மனியில் கைது செய்யப்பட்ட சுபாஷ் கபூரை உடையார்பாளையம் வழக்கு முடிந்த உடன் திருப்பி ஒப்படைத்து விடுகிறோம் என தமிழக போலீஸார் உறுதியளித்திருந்தனர்.

ஆனால், அவர் ஜெர்மன் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை. தொடர்ந்து கால தாமதம் ஆவதால் குற்றவாளிகளை பரிமாறி கொள்வதற்காக பரஸ்பர ஒப்பந்தத்தை முடித்து கொள்வதாக ஜெர்மன் அரசு தெரிவித்துள்ளது. இதனால் இந்திய அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.இதையடுத்து சுபாஷ் கபூர் விவகாரம் தொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை, தமிழக தலைமைச் செயலருக்கு அண்மையில் கடிதம் எழுதியது. இதையடுத்து சுபாஷ் கபூரை மத்திய அரசு மூலம் ஜெர்மன் அரசிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சுபாஷ் கபூரின் எண்ணம்சுபாஷ் கபூர் 10 ஆண்டு சிறை தண்டனையை அனுபவித்துவிட்டார். இருப்பினும் அவர் மீது மேலும் சில வழக்குகள் உள்ளதாலும், நீதிமன்றம் விதித்த அபராதத்தை செலுத்தாததாலும் அவர் சிறையிலேயே உள்ளதாகக் கூறப்படுகிறது.மேலும், சுபாஷ் கபூர் கைது செய்யப்பட்ட பின்னர் 2012ல் நியூயார்க்கில் இருக்கும் சுபாஷின் வேர்ஹவுஸ்களை அமெரிக்க காவல்துறை சோதனை செய்து 100 மில்லியன் டாலர் மதிப்பிலான கலைப்பொருட்களை கைப்பற்றி இருந்தது. அவர்மீது சுமார் 32 வழக்குகள் வரை அங்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், சுபாஷ் கபூர் ஜெர்மனியிடம் ஒப்படைக்கப்பட்டாலும், பின்னர், அவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட அதிக வாய்ப்பு உள்ளது. இதனால், சுபாஷ் கபூர் இந்தியாவை விட்டுச் செல்ல மனமின்றி இருப்பதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கு பிற ஆசிரியர்களை போல் ஊதியம் வழங்காதது ஏன்? தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

தமிழகத்தில் பிற ஆசிரியர்களை போல் சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காதது குறித்து தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.தமிழ்நாடு சிறப்பு பள்ளிகள் கவுன்சில் அமைப்பின் செயலாளர் வெற்றிவேல் முருகன், உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில் "தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அறிவுசார் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக சிறப்பு பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

இப்பள்ளிகளில் சிறப்பு ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு ஊதியம் மிக மிக குறைவாகும். பிற ஆசிரியர்களை போல் சிறப்பு ஆசிரியர்களுக்கும் ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கக்கோரி தமிழக அரசுக்கு பல ஆண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதுவரை



நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, சிறப்பு ஆசிரியர்களுக்கு பிற ஆசிரியர்களை போல் ஊதியம் மற்றும் சலுகைகளை வழங்க உத்தரவிட வேண்டும்" இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்யநாராயண பிரசாத் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் கு.சாமிதுரை வாதிடுகையில், "தமிழகத்தில் 250 சிறப்பு பள்ளிகளும், அதில் 500 சிறப்பு ஆசிரியர்களும் பணிபுரிகின்றனர். தமிழகத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக அறிவுசார் குறைபாடு, மாற்றுத்திறனாளி குழந்தைகள் உள்ளனர்" என்று வாதத்தை முன்வைத்தார்.இதையடுத்து நீதிபதிகள், "சிறப்பு ஆசிரியர்களின் ஊதியம் குறித்து 2016ல் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவை அமல்படுத்தாதது ஏன்?

சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும். சிறப்பு பள்ளி ஆசிரியர்கள் நியமனத்துக்கான நடைமுறைகள் என்ன? சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கு பிற ஆசிரியர்களை போல் ஊதியம் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?. இது தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டு விசாரணையை நவ. 15க்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# ஈழத் தமிழர்களுக்கான கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வது ஐ.நா.வின் கடமை : ராமதாஸ்



ஈழத் தமிழர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டியது ஐ.நா.வின் கடமை என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து இன்று அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "நடுக்கடலில் கப்பல் விபத்தில் சிக்கி தத்தளித்துக் கொண்டிருந்த போது சிங்கப்பூர் அரசால் மீட்கப்பட்டு, வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 306 ஈழத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இது மனிதநேயமற்ற செயல்! போர் பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் வாழ்க்கை நரகமாகி விட்டதால் தான் ஈழத்தமிழர்கள் தங்களின் உயிரையும் பணயம் வைத்து தஞ்சம் தேடி கடல் பயணம் மேற்கொண்டனர். அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது நரகத்திலிருந்து தப்பியவர்களை மீண்டும் நரகத்தில் தள்ளும் செயலாகும்!

தஞ்சம் தேடி வெளியேறியவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாக அமைந்து விடும். அதனால் தான் தங்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்று வலியுறுத்தி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் போராட்டம் நடத்துகின்றனர்!

ஈழத் தமிழர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டியது ஐ.நா.வின் கடமை. அதை உணர்ந்து, ஏற்கனவே நான் கேட்டுக் கொண்டவாறு, 306 ஈழத்தமிழர்களுக்கும் அவர்கள் விரும்பும் நாட்டில் தஞ்சம் தஞ்சம் பெற்றுத் தர ஐ.நா. அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

# இவ்வார ராசிபலன்

**11-11-2022 வெள்ளி தொடக்கம் 17-11-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** மற்றவர் உதவி கிடைக்கும் வாரம். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். திருமண வாய்ப்புக் கூடி வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவிக் கிடைக்கும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். பிரச்சனைகள் அகலும். பிணிகள் அகலும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மைத் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். மனதில் உற்சாகம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். மனிதநேயம் மிகுதியாகும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். திடீர் லாபம் உண்டு. வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,P





**ரிஷபம்:** வருமானமும், வெகுமானமும் அதிகரிக்கும் வாரம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். கவனமுடன் செயல்பட வேண்டும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பொருளாதாரம் உயரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மிதுனம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும் வாரம். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனையால் குடும்ப மேன்மையடையும். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான செய்தி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். விளையாட்டுத் துறையில் லாபம் அதிகரிக்கும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். தொழில் போட்டி அதிகமாகும். புதுமைகள் நிறைந்த காலம். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்டு தொழில் லாபம் தரும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. பெண்களிடத்தில் கவனம் தேவை. அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரபல்ய ஆசை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவசித்தி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். திருப்பங்கள் நிறைந்த காலம். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். குதூகலமான எண்ணம் உருவாகும். வெற்றி வீடு தேடி வரும். செல்வ செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். பறவைகளுக்கு உணவு அளித்து பயன்பெறலாம். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்ள். தோற்ற பொலிவு கூடும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகரிக்கும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டங்கள் எளிதாகும். ஆடை, அணிகலன்கள் சேரும். சுபவிரயம் உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** மனமகிழ்ச்சி கிட்டும் வாரம். குடும்ப உறவு பலப்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். வாகனச்செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகை உற்சாகம் தரும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் அதிகரிக்கும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சுபச்செய்தி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். ஆடம்பர சுகங்கள் கூடும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் செய்வதால் வளம் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகி மறையும். ஆபரணப் பொருள் களவுப்போகும். தனவரவு அதிகரிக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I





**கன்னி:** நல்லவங்களோட வாழ்த்துக் கிடைக்கும் வாரம். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். தன வரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். மனைவியால் மதிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை கூடும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். திடீர் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பொருளாதாரத்தில் மேன்மையுண்டு. தொழிலில் அபிவிருத்தி உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். நவகிரஹம், அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொதுப்பிரச்சனைகள் வில்கும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். பாராட்டுக்கள் வந்து சேரும். மனதில் உற்சாகம் மேலோங்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உங்களின் தனித்தன்மைகள் வெளிப்படும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். தொழிலில் வேண்டாத நபர்கள் விலகுவர். வேலை வாய்ப்புக்கள் கூடும். எதிர்பார்ப்புக்கள் விலகும். மாணவர்கள் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. இனிய செய்தி வரும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். அலட்சியப் போக்கு மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்பு சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**துலாம்:** பணவரவுகளால் திருப்தி தரும் வாரம். ஆரோக்யம் சீராகும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் சற்று கவனம் தேவை. அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைபளு கூடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலில் போட்டி, பொறாமைகள் விலகும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. பிரார்த்தனையால் பலன் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும். கலையில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை விலகும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். வீண் வம்பு ஓடி மறையும். மறைமுக தொல்லைகள் நீங்கும். வழக்கு வெற்றி தரும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. மேலதிகாரியின் ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும். காதல் எண்ணம் உருவாகும். மற்றவர் ஆலோசனைத் தவிர்க்கவும். மன அமைதி கூடும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். தீய எண்ணங்கள் விலகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். நிதி நிலைமை சீராகும். உறவினரால் நன்மை உண்டு. பேச்சில் துணிவு தேவை. விசேஷ பலன்கள் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**விருச்சிகம்:** கவலைகள் அடியோடு விலகும் வாரம். விவசாயம் கை கொடுக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழிலமையும். கடன் உதவி கிடைக்கும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை நீங்கும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். வியாபார வளர்ச்சி உண்டு. சான்றோர்கள் வாழ்த்து கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். எதிரிகள் உதிரியாவார்கள். தெய்வப் பணியில் ஈடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்புத் தேடி வரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருள் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. எண்ணிய காரியம் கைகூடும். வியாபாரத்தில் எதிபாராத லாபம் கிட்டும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர்கள் தொல்லை நீங்கும். பணவரவு அதிகரிக்கும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய தொழில் முயற்சி வெற்றியைத் தரும். சகோதரியால் நன்மை உண்டாகும். போட்டிகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K

**(தொடர்ச்சி 23 பக்கம்)**

# இனிமையான புதிய பக்திப் பாடல்கள் இல்லாத குறையை "வாணிதாசன்" ஏழுதி இசைத்தட்டில் வெளியிட்டுள்ள "முத்துத் தேடல்" பாடல்கள் நீக்கியுள்ளன

கனடிய செய்திகள் Canadian News

## கனடா ஸ்காபுறோ நகரில் வெளியிடப்பெற்ற "முத்துத் தேடல்" பக்திப் பாடல்கள் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் புகழாரம்

தற்காலத்தில் நாம் பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த பக்திப் பாடல்களைத் தவிர தற்காலத்தில் இனிமையான புதிய பக்திப் பாடல்கள் வெளிவருவது அரிதாக உள்ளது. அவ்வாறு இல்லாத குறையை "வாணிதாசன்" ஏழுதி இசைத்தட்டில் வெளியிட்டுள்ள "முத்துத் தேடல்" பாடல்கள் நீக்கியுள்ளன. சிறந்த கவித்துவம் கொண்ட ஆறு பாடல்களைத் தந்த அவரை நாம் அனைவரும் எதிர்காலத்தில் ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று கனடா ஸ்காபுறோ நகரில் வெளியிடப்பெற்ற "முத்துத் தேடல்" பக்திப் பாடல்கள் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக





கலந்து கொண்டு உரையாற்றிய "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் புகழாரம் சூட்டினார்.

கவிஞர் மயிலையூர் கஜேந்திரன் நிகழ்ச்சித் தொகுப்பாளராக சிறப்பாக தன் பணியைச் செய்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம். மற்றும் மொன்றியால் நடன ஆசிரியை ஸ்ரீமதி தாரகா சற்குணபால ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர். பாடல்கள் பற்றிய ஆய்வுரையை "சைவப் புலவர்" திருமதி. உமா சூரியகுமார் அவர்கள் ஆற்றினார்.

அனைத்து உரையாளர்களும் தங்கள் பணியை சிறப்பாகச் செய்து இசைத்தட்டைப் படைத்த கவிஞர் வாணிதாசன் அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

சபையோர் மற்றும் வர்த்தக அன்பர்கள் நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இசைத் தட்டுப் பிரதிகளை திரு. வாணிதாசன் - வசீகரன் தம்பதியிடமிருந்து மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக "முத்துத் தேடல்" இசைத் தட்டிலிருந்த பாடல்கள் சிலவற்றுக்கு நடனங்களை அமைத்து மேடையில் மாணவிகள் வழங்கினார்கள்.

அற்புதா நர்த்தனாலய அதிபர் ஸ்ரீமதி அற்புதராணி கிருபைராஜ்அவர்கள் சிலம்பொலி நர்த்தனாலய அதிபர் ஸ்ரீமதி சாந்தி சிவரூபன் அவர்கள் ஆகியோரின் மாணவிகளே அற்புதமான நடனங்களை வழங்கினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

















## இவ்வார ராசிபலன்

(22 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மனநிறைவு ஏற்படும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு அதிகரிக்கும். குடும்ப வளம் பெருகும். வாகன அபிவிருத்தி உண்டு. நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்வியால் செலவு உண்டு. கடன் பிரச்சனை அகலும். வியாபாரத்தில் நிதானத்தோடு செயல்பட வேண்டும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். சகோதர உறவு பலப்படும். சாதனைகள் ஓங்கும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். குடும்ப மனநிறைவு உண்டு. புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். கர்ம வினைகள் அகலும். பழைய கடன் தீரும். எதிர்ப்புக்கள் விலகும். மன வேதனை குறையும். பொருளாதாரம் உயரும். முயற்சி பலன் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழிலில் மாற்றம் ஏற்படும். தாய் நலனில் அக்கறை தேவை. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதர வளர்ச்சியுண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். மங்களச் செய்தி வரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மன வேதனை குறையும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை மாறும். உறவினர்களால் பாதகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கருப்புசாமி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B





**மகரம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவுகள் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். உடன்பிறப்புக்கள் தொல்லை தருவர். வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் விலகும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். தீய எண்ணம் விலகும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வம்பு தும்புகள் ஒழியும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் நிதானம் தேவை. கலை ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் போட்டி மறையும். காதலால் மகிழ்ச்சியுண்டு. மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**கும்பம்:** தொழில் வளர்ச்சி பெருகும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். பிணிகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். பெண்களின் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் பெருகும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. பொன், பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சந்தோஷமான காலம். பணிவு அவசியம். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். கலைத்தொழிலில் நிலை உயரும். பெற்றோர் ஆதரவு அதிகரிக்கும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**மீனம்:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. குடும்பப் பாசம் அதிகரிக்கும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு பெறும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்பட்டு மறையும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். பதற்றம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். நிர்வாகத் திறன் கூடும். நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். இனிய எண்ணம் உதயமாகும். புதிய முயற்சி பலன் தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வியாபார விரயம் கூடும். சுபச்செய்தி வரும். பணிச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை திருப்தி தரும். நினைவாற்றல் பெருகும். கலையார்வம் கூடும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,2,1
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

# திருக்குறள் கூறும் நட்பு

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா
நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்
Jothy.thirukural@gmail.com



அகில மாந்தர் அனைவருக்கும் பொருந்தும் வகையிற் தூரநோக்குச் சிந்தனையோடு இனம், மதம், மொழி, சாதி அத்தனையையுங் கடந்த பொதுநெறியாகத் தெய்வப்புலவர் திருவள்ளுவராற் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நீதி தாழ்ந்து அநீதி தலைதூக்கிய காலப்பகுதியில் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக எழுந்த அறப் போதனை நூலிது. மேன்மை மிக்க இந்நூல் உலகினர் அனைவரதும் வணக்கத்திற்குரிய நூலாக விளங்குகிறது. அறம், பொருள், இன்பமென முப்பாலாக வகுக்கப்பட்ட திருவள்ளுவத்தின் பொருட்பாலிலிருந்து நட்பு என்ற தூய விடயத்தினை நோக்குகின்றது எனது கட்டுரை.

நட்பு என்பது மக்களிடையேயான பரஸ்பர அன்பின் வெளிப்பாடாகும். உண்மை நட்பு என்பது நாடு, இனம், மதம், சாதி, வசதி வாய்ப்புகள், பலன், பிரதிபலன்களை எதிர்பாராததாய், பொதுநல உணர்வுள்ளதாய் இருக்க வேண்டும் என்பதனைத் திருவள்ளுவம் வலியுறுத்துகிறது. உண்மையானதொரு நட்பு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றித் திருவள்ளுவர் மிகச் சிறப்பாகப் பல அதிகாரங்களிலும் கூறியுள்ளார். நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என்ற அதிகாரங்களுட்பட வேறும் அதிகாரங்களில் நட்பிற்கு அறம் உரைத்துள்ளார். அறவழி நட்பு மகிழ்வினைத் தந்து உயர்வுகளுக்கு இட்டுச் செல்லவல்லது. தீய நட்போ மரணம்வரை இழுத்துச் செல்லும் என்பதனை உலகிற்கு நன்கு விளங்க வைத்துள்ளார். உண்மை நட்பிற்கு ஒத்த மன உணர்வே மிகப் பிரதானமானது. இதனைப் பொய்யாமொழிப் புலவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.**
(குறள் 785)

பள்ளியில், பல்கலைக்கழகத்தில், வேலைத்தளங்களில், அயலில், இணையவழியிலென்று பல இடங்களிலும் அற்புதமான நண்பர்களைப் பார்க்கும் அதேநேரம் பல போலிமுகங்களையும் பார்க்கின்றோம். நட்பென்ற போர்வையிற் துரோகம் இழைப்போரையும் அவதானிக்க முடிகிறது. தற்போது தொழில்நுட்ப வளர்ச்சியாலும் நட்பின் தன்மை பெரிதும் மாறிவிட்டது. இத்தகைய நிலை மாறி நட்புக்குள்ளும் நாணயம் வேண்டும் என்கிறது திருக்குறள்.

நல்ல நட்பு மன அழுத்தத்தையும், மனச்சோர்வினையும் குறைக்கவல்லது. மேன்மையான நட்பு நோயெதிர்ப்பு சக்தியையும், நீண்ட ஆயுளையுந் தரவல்லதென ஆய்வுகளும் கூறுகின்றன. முக மலர்ச்சியை மட்டுங் காட்ட வல்லது உண்மை நட்பாகாது. முகமும், அகமும் இணைந்து மலர்வதே நல்ல நட்பிற்கு இலக்கணமாகும். அகத்தில் அழுக்குடன் போலி முகம் காட்டுவது நட்பிற்கு இழுக்காகும். இதனைத் திருவள்ளுவர் பெருந்தகை பின்வரும் குறளால் விளங்கவைத்துள்ளார்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.**
(குறள் 786)

சான்றோரின் நட்பு வளர்பிறை போன்றது. நாளும் வளர்ந்து வளர்ந்து முழுநிலவு போலாகத் தக்கது. அது தேய்ந்து போகாது. பேதையார் நட்போ தேயும் தன்மையது. நட்பின் இயல்பினை வளர்பிறையோடும், தேய்பிறையோடும் திருவள்ளுவம் ஒப்பிட்டுப் பார்க்கிறது. ஆகவே நட்பு என்பது அமாவாசையாக அன்றிப் பௌர்ணமியாக இருப்பதே வாழ்விற்கு ஒளியூட்ட வல்லதென்பது என்பது திருவள்ளுவர் கருத்து.

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.**
(குறள் 782)

இதே கருத்தை வலியுறுத்தும் நாலடியார் செய்யுளையும் இங்கே ஒப்புநோக்க முடியும்.

**"பெரியவர் கேண்மை, பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு"**
(நாலடியார் 125)

நாளாந்தம் நாம் பலருடன் பழகுகின்றோம். ஆனாற் சிலருடனான நட்பே நிலைக்கின்றது. தொடர்ந்து பழகப்பழக நல்ல பண்புள்ளவர்களின் நட்பானது எப்பொழுதுமே எங்களுக்கு இன்பமும், இனிமையும் சேர்க்க வல்லது. அது நாம் படிக்கப் படிக்க மேன்மேலும் இன்பந்தரும் அரிய நூலைப் போன்றது.

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.**
(குறள் 783)

இதனாற்தான் ஔவையார் மூதுரையில் நல்லோரின் நட்பைப் பெறுக என்று வலியுறுத்தியுள்ளார்.

**"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"**
(மூதுரை)

மரத்திற் பூக்கும் பூக்கள் உதிர்ந்து போகும்வரை கூம்புவதில்லை. அதுபோல நட்பும் கூம்பிப்போகாமல், என்றும் மலர்ச்சியாகவே விருப்போடு தொடர வேண்டும். அவ்வாறில்லாமல் நீர்நிலைகளிற் பூக்கும் பூக்கள் போல மலர்ந்து பின்பு கூம்புவதைப் போன்ற நட்ப்பினை யாருமே விரும்பமாட்டார்கள்.

**"கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்."**
(நாலடியார், 215)

நட்பு என்பதற்குச் சிறப்பு என்னவென்றால், இடரான காலங்களிற் கேட்காமலே வந்து உதவும் தன்மை என்கிறது திருவள்ளுவம். ஒருவரது மகிழ்வான காலத்தில் மட்டுமல்ல துன்ப காலத்திலும் துணைநிற்பதே மனிதநேயமாகும். நமக்கு முடியும் போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவி செய்து தாங்கும் நிலையே நல்ல நட்பிற்கு அழகு சேர்க்கும். இந்நிலையினைத் திருவள்ளுவர் எப்படிக்கூறுகின்றார்.?

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**
(குறள் 789)

எமது உடலிலிருந்து ஆடை நழுவும் போது கரங்கள் உடன்சென்று மானங் காப்பது போல, நண்பருக்குத் துன்பம் நேர்கையில் விரைந்து சென்று உதவுவதே உத்தம பண்பாகும். உதவி செய்வதில் நாம் விரைவு காட்டவேண்டும். உற்ற நேரத்திற் கேட்காமலே செய்யும் உதவிகள் உயர்வானவை. இதனைத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.**
(குறள் 788)

செழிப்பான காலத்திற் சேர்ந்திருப்பதும், இடரான காலத்தில் நழுவிச் செல்வதும் நட்பிற்கு மேன்மையன்று என்பதனை ஔவையும் தன் மூதுரையிற் கூறியுள்ளார். குளத்தில் உணவினையுண்டு,குளித்துக் குதூகலிக்க வந்த நீர்ப்பறவைகள் நீர்வற்றிப்போகையில் வேறு நீர்நிலைகளைத் தேடிப் பறந்துவிடும். ஆனாற் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற மலர்க்கொடிகள் அந்தக் குளத்திலேயே ஒட்டிக்கொண்டு காய்ந்து மடிகின்றன. இந்த மலர்ச்செடிகள் போன்ற நட்பினையே ஔவை உயர்வான நட்பிற்கு இலக்கணமாகக் கூறியுள்ளார்.

**"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்- அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு."**
(மூதுரை 17)

நட்பு என்று நம்பி ஏமாந்த கதைகள் உங்களிடம் இருக்கலாம். நட்பொன்று வெளிவேடமென்று தெரிகின்ற பொழுது மனம் வேதனை கொள்கிறது. நட்புத் துரோகமாக மாறும் போது மனம் துடித்துப் போகின்றது. தூய்மையற்ற நட்பால் எஞ்சுவது துயரங்களே. ஆராய்ந்து கொள்ளாத நட்பினாற் பெருந்துன்பமே. ஆதலால் நட்பினை ஆராய்ந்து செய்க என்கிறது இக்குறள்.

**ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.**
(குறள் 792)

உயிருக்குயிராகப் பழகுவதுபோல நடித்து வேடம் போடும் நட்பானது வளர்ந்து செல்வதைவிடத் தேய்ந்து போவதே சிறப்பு என்றார். இத்தகைய நட்பு பண்பற்றதும், கீழ்த்தரமானதுமாகும். அப்பேர்பட்ட நட்புப் பல அவலங்களை வாழ்விற் தந்துவிடவல்லதென்று இக்குறள்மூலம் எமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.**
(குறள் 811)

முகத்திற் போலிப் புன்னகையும், அகத்தில் அழுக்கும் நிறைந்த வஞ்சமனங் கொண்டோருக்கு நாம் அஞ்ச வேண்டுமென்றும், அவர்களால் நமக்கு எந்நேரமும் ஆபத்து வரலாமென்றும் எம்மைத் திருக்குறள் மேலும் எச்சரிக்கின்றது.

**முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.**
(குறள் 824)

மனப் பொருத்தம் இல்லாத நண்பர்களோடு இணைந்து வாழ்வது ஆபத்தானது. அது ஒரு குடிசைக்குள்ளே பாம்புடன் சேர்ந்து வாழ்வது போன்றதாகும் என்றார். பாம்பென்றாற் படையும் நடுங்கும். அப்படிப்பட்ட பாம்போடு, ஒத்துவரா நட்பினைத் திருவள்ளுவர் ஒப்பிட்டமை நம்மிடையே தீய நட்புக் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கே.

**உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.**
(குறள் 890)

**தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.**
(குறள்-828)

கூடாநட்பு என்ற அதிகாரத்தில் வரும் இந்தக் குறள்மூலம் திருவள்ளுவர் என்ன கூறியுள்ளார்.? பகைவர்கள் வணங்கித் தொழுதாலும் அவர்களின் கைகளுட் கொலைக்கருவி மறைந்திருக்கும். அவர்கள் அழுது சொரியும் கண்ணீரும் அத்தன்மையதே. போலித் தன்மை மிகுந்திருக்கும். ஆகையால் எவரிடமும் அவதானமாக இருங்கள், இல்லையேல் அவலப்படுவீர்களென்கிறார்.

தவறான வழிகளில் நெறிகடந்து செல்லும் நண்பரைக் கண்டித்து நல்வழிகாட்டுதல் என்பது உண்மையான ஒரு நட்பின் சிறப்புக் கடமையாகும். மற்றவர்களின் வாழ்வினைத் தன் வாழ்வு போலவே எண்ணிச் செயற்பட வேண்டுமென்ற அரிய கருத்தினையும் திருவள்ளுவம் சிறப்புறக் கூறுகின்றது.

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.**
(குறள் 784)

உண்மை நட்பு என்பது வாழ்வின் பலம். இறைவன் தரும் நல் வரம். முறையான நட்பு முகமூடி அற்றது. ஒரு தொடர்கதை போன்றது. புரிந்துணர்வின்றிப் பிரிந்தாலும் சேரவல்லது. நல்வழிப்படுத்தவல்லது. துன்பங்கண்டாற் துடிக்கும். வஞ்சனைகள் செய்யாது. உயர்வு நோக்கி வழி காட்டும். உயிருக்கு எப்போதும் ஆரோக்கியம் தரவல்லது. வைத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும்.!! அடக்குமுறை இல்லை. அகங்காரம் இல்லை. கிண்டல் இல்லை. கேலி இல்லை. சூழ்ச்சிகளேதுமில்லை. ஒற்றுமையும், மகிழ்வும், நன்மைகளுமே அதன் விளைச்சல்.! திருக்குறள் கூறும் நட்பின் பொருளுணர்ந்து நன்நட்பிற்கு இலக்கணமாய் வாழ்வோம்.

**வாழ்க தமிழ்.!
வாழ்க திருவள்ளுவம்.!!**

மலேசிய மடல்

# நாகரிக சமூகத்தின் அடையாளம் முடிதிருத்தும் தொழில்

## மலாயாவில் முதன்முதலில் முடிதிருத்தியவர்கள் தமிழர்கள்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.10:

நாடு, இனம், மொழி, கல்வி, தொழில், பொருள், புகழ், சமயம் உள்ளிட்ட அனைத்துக் கூறுகளையும் கடந்து ஒரு மனிதரை சட்டென அடையாளப் - படுத்துவது அவரின் முடி அலங்காரம்தான்.

ஓட்டமும் நடையுமான அன்றைய வாழ்க்கைப் பயணத்தில்கூட, தமிழர்கள் முடியை சிங்காரப்படுத்தி, தம் நாகரிக வாழ்வை வெளிப்படுத்தினர். பெண்களைப் போலவே ஆண்களும் முடியை வளர்த்தாலும் முடியை அலங்காரப்படுத்தி வாழ்வதில், உண்மையில் உலக மக்களுக்கே தமிழர்கள்-தான் முன்னோடி.

பண்டைத் தமிழருக்கு இணையான நாகரிக வாழ்வை கிரேக்க மக்களும், எகிப்தியர்களும் எட்டியிருந்தாலும்கூட, அரச மட்டத்தில் வாழ்ந்தவர்கள் அதற்கு அடையாளமாக தமிழ் மன்னர்களின் மணிமுடியைப் போன்ற மகுடம் அல்லது தலைப்பாகையை அணிந்து கொண்டாலும் பொதுமக்களில் ஆண்கள் அனைவரும் தலைவிரி கோலமாகத்தான் வாழ்ந்துள்ளனர்.

ஆனால் தமிழர்களில் அந்த நிலை கிடையாது; புலவர், சிற்பி, பொற்கொல்லர், வணிகர், படகோட்டி என அந்தந்த தொழிலுக்கு ஏற்றவாறு தமிழர்கள் தங்களின் நீள்முடியை அலங்காரம் செய்து வாழ்ந்தனர். விவசாயிகள் தலையில் மட்டும் மன்னர்தம் தலையில் மணிமகுடம் இருப்பதைப் போல முண்டாசுக்கட்டு எந்த நேரமும் குடிகொண்டிருக்கும்.

முடியை கத்திரித்து செம்மைப்படுத்திக் கொள்ளும் வழக்கம் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவானபொழுது, அது ஏறக்குறைய உலகெங்கும் ஒரே சமயத்தில் பிரதிபலித்தது. இதற்கு அடிப்படையாக அமைந்தது ஆங்கிலேய நாகரிகம்தான் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனாலும், இந்தத் தலைமுடி நாகரிகத்தில், ஆங்கிலேயர்களுக்கு முன்னோடி தமிழர்கள்கள்தான் காரணம், முடியை சுறுக்கிக் கொள்ளுதல் அல்லது மட்டமாக அல்லது சீராக வெட்டிக்கொள்வது பாரம்பரிய மருத்துவத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது.

தற்பொழுது பாரம்பரியத் தொழிலாக முடிதிருத்தும் தொழிலை செய்வோரின் முன்னோர்கள் அக்காலத்தில் வட்டார மருத்துவர்களாகவும் செவிலியராகவும் விளங்கி உள்ளனர். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், சித்த மருத்துவத்-திலும் சுகப்பிரசவம் பார்ப்பதிலும் தேர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். அதனால், இவர்களுக்கு மருத்துவர் - மருத்துவச்சி என்ற பெயர் நீண்ட காலம் தமிழ்ச் சமூகத்தில் நிலைபெற்று இருந்தது.

குறிப்பாக, இந்த மருத்துவர் குடும்பப் பெண்கள் கருவிகள் ஏதுமின்றி கைவைத்தியத்திலேயே எளிதாக பிரசவம் பார்ப்பது; மகப்பேற்றுக்குப் பின் தாயையும் சேயையும் பராமரித்தல் குழந்தை மருத்துவம் என்றெல்லாம் திறமையாக வாழ்ந்துள்ளனர்.

இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள், ஆண் நோயாளிகளுக்கு வைத்தியம்செய்யும் வேளையில் தேவை ஏற்பட்டால் தலைமுடியை வெட்டுவதற்கான கருவியையும் உடன் வைத்திருப்பார்கள். இப்படித்தான், முடிவெட்டும் தொழில் தொடக்கத்தில் உருவானது.

காலவோட்டத்தில், பாகவதர் முடி, அண்டர் கட், ஸ்டெப் கட்டிங்க், ஹிப்பி ஸ்டைல், சடைமுடி, நீண்ட முடி, மொஹாக், மொட்டைத் தலை என்றெல்லாம் அவரவரும் தத்தம் விருப்பத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப முடி அலங்காரம் செய்து கொள்கின்றனர்.

இன்றைய நாட்களில் முடிக்கு வண்ணம் பூசிக்கொள்ளும் புது வழக்கம் மலர்ந்துள்ளது.

மலேசியாவைப் பொறுத்தவரை முதன்முதலில் பல இன மனிதர்களுக்கு முடி அலங்காரம் செய்தவர்கள் தமிழர்கள்தான். சீன ஆண்கள், தங்களின் நீண்ட முடியை பெண்களைப் போல சடை பின்னி அலங்காரம் செய்யும் வழக்கம், அண்மைக் காலம்வரை நீடித்தது. சீன ஆண்களின் நீள்முடி கலாச்சாரத்திற்கு முடிவு கட்டியவர்கள் சிகை அலங்காரத் தொழில்செய் தமிழர்கள்தான்.

முடிதிருத்திக் கொள்ள வரும் வாடிக்கையாளர்கள் சிந்தனையை ஓரிடத்தில் நிலைநிறுத்தி அமைதியாக இருப்பதற்கு ஏதுவாக கவர்ச்சிப் படங்களை சுவற்றில் பதிய வைத்திருப்பார்கள். அதைப்போல, கவர்ச்சி இதழ்களையும் வைத்திருப்பார்கள். இதன் ஒரு கூறாக, செய்தித் தாள்களையும் வைத்து வாசிக்கும் பழக்கத்திற்கு ஊக்கமளிக்கும் விதமாக சிகை அலங்கார நிலைய உரிமையாளர்கள் காலந்தோறும் செயல்படுகின்றனர். இதை ஒரு சமூகக் கடப்பாடாகவே அவர்கள் கைக்கொண்டுள்ளனர்.

மலாயா விடுதலை அடைவதற்கு முன்பிருந்தே மாநில அளவிலும் மண்டல அளவிலும் செயல்பட்டு வந்த சிகை அலங்கார தொழில் புரிவோர், தொழி-லாளர் தட்டுப்பாட்டுச் சிக்கலை எதிர்கொண்டபோது, மத்தியக் கூட்டரசை நாடுவதற்காக தேசிய அமைப்பாக உருமாற வேண்டிய அவசியம் எழுந்தபோதுதான், மலேசிய இந்தியர் சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கம் உருவானது.

அப்படி உருவான இந்த சங்கத்தின் 21-ஆம் ஆண்டுக் கூட்டம் நவம்பர் 11-ஆம் நாள், சிலாங்கூர் பத்துமலை, Jalan Ipoh PT-7 (Pekan Lama Batu 7), SHENGA Conventional Hall என்னும் மண்டபத்தில் பகல் 12:00 மணி அளவில் நடைபெற உள்ளது.

டாக்டர் சுதந்திரன் தலைவராகவும் இராஜசேகரன் பொதுச் செயலாளராகவும் இருந்து வழிநடத்தும் மலேசிய இந்தியர் சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கத்திற்கு, இந்த அமைப்பின் மூத்தத் தலைவர் பண்டிதர் - டாக்டர் மதிராசன் ஆலோசகராக செயல்படுகிறார்.

மலேசிய இந்திய வர்த்தக தொழிற்சங்க சம்மேளத்தின் தலைவர் டத்தோ என். கோபால கிருஷ்ணன், மஇகா தேசிய உதவித் தலைவர்களில் ஒருவரான டத்தோ த. மோகன் ஆகியோரின் சிறப்பு வருகையுடன் நடைபெற இருக்கும் இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்காலம் கருதி நவம்பர் 20-ஆம் நாள் அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் சமர்ப்பிப்பதற்கான கோரிக்கை விண்ணப்பம் தயாரிக்கப்படும் என்று தெரிகிறது.







**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# மாவீரர் நாள்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

மாவீரர் என்போர் மரணத்தை வென்றோர்
காவிய நாயகர் கடமையைச் செய்தோர்
சாவினை நெஞ்சில் சரமாய்ச் சுமந்தே
ஆவியை எமக்கு அளித்துச் சென்றோர்.
இளமைக் காலத்தை ,னத்துக்காய்த் துறந்தீர்
அழகான வாழ்வை அர்ப்பணம் செய்தீர்.
களமாடி எமக்காய்க் களத்தில் வீழ்ந்தீர்
வளமான எதிர்காலம் விதையாய்த் தந்தீர்
தலைவனின் ஆணையைத் தலைமேல் சுமந்தாய்
விலையிலா உயிரை வீரமாய்த் துறந்தாய்
அலைபோல் வந்த அன்னியர் எதிர்த்து
மலைபோல் நின்று மறித்து அழித்தாய்.
சாதிக்காய்த் துடிக்காமல் சாதிக்கத் துடித்தாய்
சாதிப்ப தொன்றையே சபதமாய் ஏற்றாய்
ஆதிக்க அரக்கரை அடியோடு அழிக்க
பாதிப்பு மறந்து புலியாய்ப் பாய்ந்தீர்.
தாயகம் காக்கத் தானையாய்ச் சென்று
மாயன் செல்லில் மாண்டு வீழ்ந்து
தாயவள் பெருமையைத் தரணியிற் பொறித்து
தூய வாழ்வைத் தந்து சென்றீர்
விண்ணை நோக்கி விரைந்த போதும்
மண்ணில் நாங்கள் மறப்போமா? உம்மை
கண்ணில் கண்ணீர் கசிந்து வந்தாலும்
அண்டம் முழுவதும் அகல்விளக்கு ஏற்றுவோமே.!

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

கனடிய செய்திகள் Canadian News

# மொன்றியால் "வீணை மைந்தன்" திரு. கே.ரி சண்முகராஜாவின் பவள விழா எழுச்சியுடன் இடம்பெற்றது

கடந்த சனிக்கிழமை மாலை கனடா மொன்றியல் திரு. முருகன் கோவிலில் மதிப்பிற்குரிய "வீணை மைந்தன்" என்கிற ஐயா திரு. கே.ரி சண்முகராஜா அவர்களின் பவள விழா மிகுந்த ஏழுச்சியுடன் இடம்பெற்றது.

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று எத்தனையோ நிகழ்வுகளை நாம் பார்த்திருந்தாலும் இதுபோல ஒரு தரமான இலக்கிய நிகழ்வு மொன்றியலில் நடைபெறுவது மிகவும் பாராட்டுதற்குரியது.

பவள விழா நாயகன் மதிப்பிற்குரிய ஐயா வீணை மைந்தன் அவர்களை பற்றி சொல்ல வேண்டுமானால் எழுத்தாளர், பேச்சாளர், விமர்சகர், ஊடகவியலாளர், நாடக வியலாளர், எளிமையான அன்புக்குரியவர் இப்படி எத்தனையோ விடயங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வளவு பெரிய ஆளுமை குன்றிலிட்ட விளக்கு போல பிரகாசிக்காமல் குடத்திலிட்ட விளக்கு போல இத்தனை நாளும் இருந்தது அவருடைய தன்னடக்கத்தை என்றி வேறு எதுவும் பறைசாற்ற வில்லை.

கடந்த 40 வருடங்களாக தொடர்ந்து எழுத்து, பேச்சு, இலக்கிய நிகழ்வுகள், எழுத்தாளர்களை ஒன்றிணைப்பது போன்று தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது என்பது எவ்வளவு சவாலான விடயம் என்பது அதில் இருப்பவர்களுக்கு தெரியும், இத்தகைய ஒரு சவாலான விடயத்தை அன்றிலிருந்து இன்றுவரை கடந்த 40 ஆண்டுகளாக பாராட்டும் வகையில் தொடர்ந்து செய்து வருபவர் தான் வீணை மைந்தன் ஐயா.













சாதாரணமாக கூட்டத்தில் ஒரு ஓரத்தில் நின்று கொண்டு ஒரு பெரிய ஆளுமையோடு புகைப்படம் எடுத்துக்கொண்டாலே அதை எவ்வளவு தம்பட்டம் அடித்துக் கொள்ளும் எத்தனையோ மனிதர்களை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால் இலங்கை தொடங்கி இந்தியா, பாரிஸ், லண்டன், பிரான்ஸ், மலேசியா இன்று உலக வரைபடத்தில் உள்ள அத்தனை நாடுகளில் உள்ள அத்தனை பெரிய ஆளுமைகளின் வாழ்த்துக்களை பெற்ற இம் மாமனிதர் இவ்வளவு அடக்கத்தோடு இருப்பது நாம் அவரிடம் இருந்து சுவீகரித்துக் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான பண்பு.





நமது எல்லோரின் அன்புக்குரிய கனடா நாட்டின் பிரதமர் அவருடைய கைப்பட எழுதிய வாழ்த்து மடல் கூட இவருக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்திருக்கிறது. அது நம் சமூகத்திற்கு கிடைத்த பெருமை.

இந்திய இலக்கிய பகுதிகளில் பெருமையாக கொண்டாடப்படும் .பாரதிராஜாவை சந்தித்திருக்கிறார். சிவாஜி வீட்டில் உணவருந்தி இருக்கிறார்.





சிவாஜிக்கு இவர் எழுதிய வாழ்த்துப்பா சிவாஜியின் வீட்டில் சட்டமிடப்பட்டு மாட்டப்பட்டிருப்பது எத்தனை பேருக்கு தெரியும்.கலைஞர் கருணாநிதியின் வாழ்த்தை பெற்றவர்.

இத்தனை பெரிய ஆளுமையை கொண்டாட வேண்டும். அவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று இந்த "வீணை மைந்தன் 75" என வரலாற்றில் மிகப்பெரிய ஒரு பெருமையை சேர்த்திருக்கிறார்கள் இதனை ஏற்பாடு செய்திருந்த விழாக்குழுவினர்.

"தொலைந்துபோன வசந்தங்கள்" என்று முதல் பகுதியையும் "வாழ்த்தும் வணக்கமும்" என்ற இரண்டாம் பகுதியும் "கவியின் காதல்" என்று ஆறு நாடகங்களை கொண்ட மூன்றாவது பகுதியையும் கொண்ட முத்தமிழ் நூலை வெளியிட்டு புலப்பெயர் தேசத்தில் தமிழுக்கு முத்தாரம் சூட்டியுள்ளார்.

"கனடா கலாச்சார சங்கம்", கனடாவில் தமிழ் உணர்வுடன் முதன்முதலாக வெளியிடப்பட்ட "வீணைக்கொடி" என்ற இதழ், "கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்" போன்ற பல்வேறு ஆக்கமான அமைப்புகளையும், முயற்சிகளையும் தொடங்கி வைத்த பெருமை இவரையே சேரும்.

இவரைப் பற்றி இப்படி எண்ணற்ற பிரமிக்கத்தக்க விடயங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவருடைய 40 வருடகால பிரமிக்கத்தக்க இலக்கிய பணிகளை தெரிந்துகொள்ள இவருடைய "வீணை மைந்தன் 75" என்ற பவள விழா மலரை வாசியுங்கள்.

கலைஞனின் பார்வை எப்போதும் அசாத்தியமானது. அது கண்ணெதிரில் நடக்கும் நிகழ்வுகளை ஊடறுத்து உள்ளார்ந்த அர்த்தத்தை உணர்ந்து அதை தனது கலையின் மூலமாகவே வெளிப்படுத்துவதாக இருக்கும். அத்தகைய 75 வயது இளைஞரான வீணை மைந்தன் ஐயா அடுத்த தலைமுறைக்காக தன் புலம்பெயர்ந்த பல்வேறு நாடுகளில் பெற்ற தனது அனுபவங்களையும் நிச்சயமாக ஆழமாக பதிய வேண்டும் என்றும் இத்தருணத்தில் தாழ்மையோடு கேட்டுக் கொண்டு வாழ்க நின் புகழ்! வாழ்க தமிழ்மகனே! என வாழ்த்தி வணங்குவோம்!

இளவரசி இளங்கோவன்
மொன்றியல் , கனடா


யாழ். நகரில் Hotel விற்பனைக்குண்டு

யாழ். நகரில்
SKY LIGHT QUEST
Inn Hotel
விற்பனைக்குண்டு



3 Triple rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (attached bathroom )
3 Single rooms (attached bathroom )
3 Single rooms (outside bathroom)
2 Double rooms (with kitchen, hall and bathroom)

7 வருடங்கள், யாழ். நகரில் இருந்து 1Km
தூரத்தில் பலாலி வீதியில்,
இல. 1, 2nd Lane, Palaly Road, Jaffna வில்
போதிய வருமானத்துடன் நல்ல பராமரிப்புடனும் இயங்கிக்
கொண்டிருக்கும் Hotel
விற்பனைக்குண்டு.

Google இல் சென்று SKY LIGHT Quest Inn, Jaffna என்று பார்வை-
வயிடுவதன் மூலம் எல்லா
விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை 7,50,000$ (கனடிய டொலரில்)

மேலதிக விபரங்களிற்கு 94 77 059 6776

94 76 022 6746 இல் whatsapp ல் தொடர்பில்
கொள்ளலாம்.

# இந்திய துணைத் தூதுவருடன் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் விசேட சந்திப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும், இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரனுக்கும் இடையில் யாழ். துணைத் தூதுவராலயத்தில் வியாழக்கிழமை (10) மாலை விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை (8) நிறைவு பெற்ற "வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான 100 நாள் செயல்முனைவு" தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன் நூறு நாள் செயல் முனைவின் கொள்கைப் பிரகடனம் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெய பாஸ்கரனுக்கு வாசித்துக் காட்டப்பட்டது.

அத்துடன் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தேவைகள் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது டன் இந்திய துணைத் தூதருடன் இன்றைய சந்திப்பு ஆரோக்கியமாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதி நிதிகள் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா மற்றும் ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (10-11-2022)**

# குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு என தொடரப்பட்ட வழக்கு – ரவிகரன், சிவநேசன் உள்ளிட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதி

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறாக செயற்பட்டதாக தெரிவித்து பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆட் பிணையில் செல்ல வியாழக்கிழமை (10) நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை குறித்த வழக்கானது எதிர்வரும் 02.03.2023 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காக திகதியிடப்பட்டுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 12.06.2022 அன்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, "கபோக்" கல்லினாலான புத்தர் சிலை ஒன்றை நிர்மானிப்பதற்கு, அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூசை வழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்த பிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயகரீ தியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ் போராட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அந்த வகையில் மக்களாலும், மக்கள் பிரதி நிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நீதி மன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்பட விருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் குருந்துர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்கமுற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும், பொதுமக்களோடும் மக்கள் பிரதிநிதிகளாக இணைந்து ஜனநாயக வழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல் தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்தரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் தேரர்களால் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு போலீசார் அழைப்பாணை விடுத்திருந்தனர்.

போலீசாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைவாக கடந்த 02.09.2022 அன்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்கு மூலங்களையும் வழங்கியிருந்தனர்.

இவ்வாறு வாக்குமூலங்களை பெற்றதைத் தொடர்ந்து, போலீசார் இந்த விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்தனர்.

பௌத்த துறவிகளுக்கும், அவர்களுடன் வழிபாடுகளுக்காக வந்த குழுவினருக்கும் அச்சுறுத்தல் விடுத்தமை, அவமானம் ஏற்படுத்தும் வகையில் நடந்தமை, போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து B/688/22 என்னும் வழக்கிலக்கத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள், வியாழக்கிழமை (10) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளதும், பொலிசாரினதும் வாதங்களை செவிமடுத்த நீதிபதி, குற்றஞ் சாட்டப்பட்டவர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜூட் நிக்சன் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், குறித்த வழக்கினை எதிர்வரும் 02.03.2023 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காக திகதி யிட்டுள்ளார்.

மேலும் இந்த விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தொடர்பு பட்டிருப்பதாக போலீசார் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நினைவுறுத்தல் நாள்

*உலகப் போர்களில்*
*மடிந்த வீரர்களை*
*உணர்வு மேலிட*
*தொழுதிடும் நாள்*
*கனடாவில்*
*கார்த்திகை பதினொன்றில்*
*பதினொன்று பதினொன்றுக்கு*
*காலால் படையினர் சோககீதம்*
*விண்ணைத் தொட*
*காவியநாயகரை*
*நினைவு கூர்வர்*
*மாவீரர் நினைவிடத்தில்*
*மலர் வளையம்*
*மரியாதை*
*அஞ்சலி*
*இருபத்தொரு வேட்டுக்கள்*
*மனம் உருகி*
*மரியாதை அணிவகுப்பு*
*மறவர்குலத் தமிழர் நாமும்*
*மறக்காது செய்திடுவோம்.*

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Holiday Party
- Children's Party
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# மாலுமி இல்லாத கப்பலைப் போல மின்னல் பண்பலை வானொலி!


நக்கீரன்

**கோ**லாலம்பூர், நவ.05:

ஓர் ஊடக நடுவம் என்னும் நிலையைக் கடந்து மலேசிய இந்திய சமுதாயத்தின் நாடித் துடிப்பை பிரதிபலிக்கும் அளவுக்கு செயல்படும் மின்னல் பண்பலை வானொலி நிலையத்தின் அறிவிப்பாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தளபதி இல்லாத படைவீரர்களைப் போல செயல்படுகின்றனர்.

அண்மைக் காலம்வரை அதை வழிநடத்திய கிருஷ்ணமூர்த்தி, வர்த்தக - சந்தைப் பிரிவுக்கு மாற்றலாகி விட்டதாகத் தெரிகிறது. அவர் பதவி உயர்வில் அங்கு அமர்த்தப்பட்டுள்ளாரா அல்லது பணிமாற்றம் செய்யப்பட்டாரா என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் மின்னல் வானொலிக்கு அடுத்த நிருவாகியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் என்பது தெரியவில்லை. "கிரேட் 44" என்ற நிலையில் இருக்கும் ரேகாதான் இடைக்கால நிருவாகியாக இருப்பதாகவும் அதுவும் உறுதியாகத் தெரியவில்லை என்றும் போகிறபோக்கில் ஒருவர் சொன்னார்.

அதற்கு மேல் அவர் பேச விரும்பாமல், இணைப்பைத் துண்டித்துக் கொண்டார். பொதுவாக, மின்னல் பண்பலை வானொலியில் பணியாற்றுபவர்-களுடன் அண்மைக் காலமாக பேசமுடியவில்லை நன்கு அறிமுகம் ஆனவர்கள்கூட

இளமை புதுமை இனிமை

பின்னங்கால் பிடறியில் படும் அளவிற்கு தலைதெறிக்க ஓடி மறைகின்றனர்.

ஒரு நிருவாகக் கட்டமைப்பில் என்ன நடக்கிறது என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை இல்லைதான். ஆனால், மலேசிய அரசியல், பொருளாதார, சமூக, கல்வித் தளங்களில் இந்திய சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் ஒரு துடிப்பான உயிரோட்டமிக்க தகவல் நடுவமான மின்னல் பண்பலை வானொலியின் நிருவாகப் பிரிவிற்கு புதிய தலைவர் யார் என்பதை சமூகத்திற்குத் தெரிவிக்காமல் மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

மின்னல் பண்பலை வானொலியின் நிருவாகியர் பணிமாறுவதோ அல்லது பதவி உயர்வுடன் விலகுவதோ மிகவும் இயல்பானது; அதைப்போல புதியவர் அப்பொறுப்புக்கு வருவதும் அதிசயமல்ல் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளதுதான்.

ஆனால், இப்பொழுது இதைப்பற்றி சமூகத்திற்கு தெரிவிக்காமல் மறைத்து வருகின்றனர்.

தற்பொழுது மின்னல் வானொலிக்கு புதிய நிருவாகி யார்? அல்லது இடைக்கால நிருவாகி யார்? அல்லது தலைமைப் பொறுப்பில் எவரும் நியமிக்கப்படவில்லையா என்பது குறித்து ஒன்றும் தெரியவில்லை.

ஒருவேளை, ரேகா என்பவர் இடைக்கால நிருவாகியாக இருந்தால், அவரை வரவேற்று, அதுகுறித்து சமூகத்திற்கு தெரிவிக்கப்படும். தவிர, அவரின் அருமை பெருமைகளை அறிந்து அவருக்கு எத்தனைக் கொம்பு முளைத்திருக்கிறது என்பதும் சுட்டப்படும்.

ஆனால், அவரின் தொலைபேசி எண்ணைக் கொடுக்க அனைவரும் தொடைநடுங்குவது ஏன் என்றுதான் தெரியவில்லை.

ஒன்றுமட்டும் தெரிகிறது; அந்த வட்டாரத்தில் ஏதோ ஒன்று நடக்கிறது் அந்தவொன்று என்னவென்பதை சமுதாயமே அறிந்து கொள்ளட்டும்.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**

# மலேசியாவின் 10–ஆவது பிரதமரை அடையாளம் காணும் 15–ஆவது பொதுத் தேர்தல்






**கோ**லாலம்பூர், நவ.10:

குறைப்பிரசவ குழந்தையைப் போல மலேசியாவின் 14-ஆவது நாடாளுமன்றம் அதன் முழு தவணைக் காலத்தை நிறைவுசெய்வதற்கு முன்பே வல்லடியாக அரசியல் தன்னலவாதிகளால் களைக்கப்பட்டதன் விளைவாக, நாடு இப்பொழுது 15-ஆவது பொதுத் தேர்தலை எதிர்கொண்டுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவு மலேசியாவின் 10-ஆவது பிரதமரை நாட்டிற்கு அடையாளம் காட்டும்.

நவம்பர் 19-ஆம் நடைபெறவுள்ள மலேசியாவின் பொதுத் தேர்தல் பரப்புரைக்காக இரு வார அவகாசம் இருக்கும் வகையில் நவம்பர் 5-ஆம் நாளை வேட்பு மனுத்தாக்கல் தினமாக மலேசிய தேர்தல் ஆணையம் அறிவித்தது.

2022 மார்ச் 12-இல் மலேசியாவின் தென் கோடியில் சிங்கப்பூருக்கு அருகில் அமைந்துள்ள ஜோகூர் மாநில சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் அபார வெற்றி பெற்றதில் இருந்தே நாடாளுமன்றத்தைக் களைக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வந்த தேசிய முன்னணி, சுமார் 6 மாதங்களுக்குப் பின் தான் எண்ணியதை சாதித்தது் இஸ்லாம் சமய இறைத்தூதர் முகமது நபியின் பெயரன் இமாம் உசேனின் நினைவு நாளான அக்டோபர் 10-இல் கடந்த நாடாளுமன்றம் களைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் களைக்கப்படுவதற்கு முன்பு இருந்த அரசியல் நிலவரம், களைக்கப்பட்டதற்குப் பின் மெல்ல மாறியது; மலேசியாவின் 15-ஆவது தேர்தல் திருவிழா தொடங்கிய நவம்பர் 5-க்குப் பின், நாட்டின் அரசியல் களம் நாளுக்கு நாள் மாறி வருகிறது.

அரசியல் நிலைத்தன்மை, சீரான பொருளாதார வளர்ச்சி, பொருட்களின் விலைக் கட்டுப்பாடு, இளைஞர் சமுதாயத்திற்கான வேலை வாய்ப்பு ஆகிய முக்கிய அம்சங்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் வகையில் நாட்டு மக்கள் தங்களுக்கான நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கான 15-ஆவது பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் அன்றுதான் இடம்பெற்றது.

நாடு முழுவதும் இருள்சூழ் வானிலையில் இந்த வேட்பு மனுத்தாக்கல் நடைபெற்று முடிந்தாலும் இன்னும் பத்து நாட்களில் மக்களுக்கான ஒளிசூழ் எதிர்காலத்திற்கான அச்சாரமாக இது அமையும்.

இது பருவ மழைக்காலம் என்பது தெரிந்தும், நாட்டில் நிலவிய அரசியல் நெருக்கடியும் தலைவர்களின் தன்னலப் போக்கும் மக்களின்மீது பொதுத் தேர்தலைத் திணித்துள்ளது. 14-ஆவது நாடாளுமன்றத்தை சீரழித்த கட்சித்தாவிகளான அரசியல் தவளைகளின் பின்னங்கால்களை வரவிருக்கின்ற 15-ஆவது பொதுத் தேர்தல் ஒட்டவெட்டும் என்பது திண்ணம்.

2018 மே 9-ஆம் நாளில் நடைபெற்ற கடந்த பொதுத் தேர்தலில் யார் பிரதமராக வரவேண்டும் என்று மக்கள் வாக்களித்தார்களோ அவரை வரவிடாமல் மற்ற மூவர் பிரதமர் ஆவதற்கும் வரிசையாக கொள்ளைப்புற அரசுகள் அமைவதற்கும் காரணமான போக்கிரி அரசியல்தனத்திற்கும் இந்தத் தேர்தல் முடிவுரை எழுதக்கூடும்.

அதைவிட நம்பி வாக்களித்த மக்களுக்கு துணிந்து துரோகம் இழைக்கும் சுயநல மக்கள் பிரதிகளுக்கும் வாக்காளர்கள் சம்மட்டி அடி கொடுப்பார்கள் என்பதும் உறுதி!

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறும் அதேவேளை, நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றங்களுக்கும் சேர்த்து தேர்தல் நடைபெறுவது வழக்கம். வட்டார அரசியல் சூழலால், சில தேர்தல்களின்போது, ஒரு சில மாநிலங்கள் விடுபட்டதும் உண்டு.

ஆனால், இந்த முறை பொதுத் தேர்தலோடு பேராக், பகாங், பெர்லிஸ் ஆகிய மூன்று மாநிலங்களுக்கு மட்டும் தேர்தல் நடைபெற வேண்டிய அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி, நாட்டிற்கு பொருளாதார சுமையையும் அரசியல் நிலையற்றத் தன்மையையும் ஏற்படுத்திய சுயநல தலைவர்கள், அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல் பொழுது விடிந்தால் ஒரு பேச்சு, பொழுது சாய்ந்தால் இன்னொரு கருத்து என வஞ்சக அரசியலை பஞ்சமில்லாமல் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜோகூர் சட்டமன்றத் தேர்தலில் இருமுறை பிரதமர் துன் மகாதீரின் பெஜுவாங் கட்சி நிறுத்திய 42 வேட்பாளர்களும் வைப்புத் தொகையை இழந்தனர். இந்த லட்சணத்தில் தான் 3-ஆவது முறையாக பிரதமர் ஆகும்படி சிலர் விரும்புவதாக தானாகவே வெளிப்படுத்திக் கொள்ளும் மகாதீர், அவர் ஆற்ற வேண்டிய கடமை இன்னும் இருப்பதாக சொல்லிக் கொண்டு 97 வயதில் மீண்டும் போட்டி இடுகிறார்.

டத்தோஸ்ரீ அன்வாரின் ஆதரவால் 2-ஆவது முறை பிரதமரான மகாதீர், கடைசியில் அன்வாரை பிரதமர் ஆகாமல் தடுத்து தேசிய அரசியலை நாசம் செய்தது போதாது என்று எண்ணி, ஒருவேளை, இந்தத் தேர்தலில் அன்வார் பிரதமராகும் வாய்ப்பு நேர்ந்தால் அதை எப்படி தடுப்பது என்பதற்கான குயுக்தியைத்தான், தான் இன்னும் செய்ய வேண்டிய பணி இருப்பதாக அவர் சொல்லி வருகிறார் போலும்.

மலேசிய அரசியல், வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டும் என்றால், இந்தத் தேர்தலில் யார் யாரை மண்ணைக் கௌவ வைக்க வேண்டும் என்பதில் வாக்காளப் பெருமக்கள் விழிப்பாக இருக்கின்றனர்.

நாட்டின் அரசியல் நிலைத்தன்மைக்கு துணைபுரியும் வகையில், மலேசிய நாடாளுமன்றத்தின் 222 இடங்களுக்கு, யார் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதை மனதில் கொண்டு அந்தந்தத் தொகுதி மக்கள் வாக்களிக்கும் நவம்பர் 19-நாள் பின்னிரவில் நாட்டின் அடுத்த பிரதமர் யார் என்பது தெரியவரும்.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**



# அன்பின் தொனி - 670

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**3. செத்தவனுக்கான சடங்கு** - Rites for the dead

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள், செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக. - **உபாகமம் 14: 1**

அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள். - **1 ராஜாக்கள் 18: 28**

செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துகளை உங்கள்மேல் குத்திக் கொள்ளாமலும் இருப்பீர்களாக, நான் கர்த்தர். - **லேவியராகமம் 19: 28**

அவர்கள் தங்கள் தலையை மொட்டையடிக்காமலும். தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப் போடாமலும், தங்கள் தேகத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்களாக. - **லேவியராகமம் 21: 5**

**4. விபரிக்கக்கூடாத விபரீதங்கள் (குலைச்சலான நடத்தை)** - Unspeakable Immoralities

மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள், பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்.
- **யாத்திராகமம் 32: 6**

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள், ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்து கொண் டார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள், அதனால் இஸ்ரவேலர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.
- **எண்ணாகமம் 25: 1-3**

பாபிலோன் மனுஷர் சுக்கோத் பெனோத்தையும், கூத்தின் மனுஷர் நேர்காலையும், ஆமாத்தின் மனுஷர் அசிமாவையும், ஆவியர் நிபேகாசையும் தர்தாக்கையும் உண்டாக்கினார்கள், செப்பர்வியர் செப்பர்வாயிமின் தேவர்களாகிய அத்ரமலேக்குக்கும் அன்னமலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயந்ததுமன்றி, மேடைகளிலுள்ள கோவில்களில் தங்களுக்காக ஆராதனை செய்கிறதற்கு, தங்களுக்குள் ஈனமானவர்களை ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தினார்கள். அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டுவந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள். இந்நாள்வரைக்கும் அவர்கள் தங்கள் முந்தின முறைகளின்படியே செய்து வருகிறார்கள், அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதுமில்லை, தங்கள் சுயதிட்டங்கள் முறைமைகளின்படியாகிலும், கர்த்தர் இஸ்ரவேல் என்று பேரிட்ட யாக்கோபின் புத்திரருக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் ஒத்தபடியாகிலும் செய்கிறதுமில்லை. - **2 ராஜாக்கள் 17: 30-34**

என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள், அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள், வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று, அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள். அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு, மேடுகளிலே கர்வாலிமரங்களின் கீழும், புன்னைமரங்களின் கீழும், அரசமரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று, தூபங்காட்டுகிறார்கள், இதினிமித்தம் உங்கள் குமாரத்திகள் வேசித்தனமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரமும் செய்கிறார்கள். உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறதினிமித்தமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறதினி மித்தமும், நான் அவர்களைத் தண்டியாமலிருப்பேனோ? அவர்கள் விலகி வேசிகளோடே கூடப்போய்த் தாசிகளோடே பலியிடுகிறார்கள், உணர்வில்லாத ஜனங்கள் அதினால் சிக்குண்டு விழுவார்கள்.
- **ஓசியா 4: 12-14**

மேலும்: இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்களுடைய ஆக்கினையைத் திருப்பமாட்டேன், அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப் போட்டார்களே. அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணைவாரி இறைத்து, சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள், என் பரிசுத்த நாமத்தைக் குலைச்சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் சகல பீடங்களருகிலும் அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களின்மேல் படுத்துக்கொண்டு, தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடிக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். - **ஆமோஸ் 2: 6-8**

ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள். அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரே நாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள், அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள், அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட் சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள், அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடி வுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. - **1 கொரிந்தியர் 10: 7-11**

**தொடரும்...**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1022



## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் திருகோணமலை

" உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே"

உரிய வயதையடைந்ததும் முத்துக்குமாரசுவாமிகோயில் பரிபாலனப்பொறுப்பைத் திரு. இராஜவரோதயம் அவர்கள் ஏற்றுத் திறம்பட நிர்வகித்தார். தமது சொத்துக்களில் பெரும்பகுதியைக் கோவிலுக்கு அளித்ததோடு, கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றத் தீர்மானித்தார். இவ்வேளையில் !950 ஆம் ஆண்டு கோணேசப் பெருமானுடைய பெருங்கருணையினால், நிலத்திலிருந்து வெளிப்பட்ட கோணேசர் கோயில் திருவுருவங்களுக்கு மீண்டும் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் நடத்திய பின்னர், முத்துக்குமரனின் திருப்பணிகளை முடித்து கும்பாபிஷேகத்தை நடத்தத் தீர்மானித்தார். !962 ஆம் ஆண்டு கோணேசப் பெருமானுக்குக் கோயிலெடுத்துக் கும்பாபிஷேகம் செய்வித்த திரு. இராஜவரோதயம் அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஆனிமாயத் இயற்கை எய்தினார்.

இவரின் மறைவுக்குப் பின் இவரது மூத்த மகனான திரு. ஸ்ரீதரன் அவர்கள் முத்துக்குமாரசுவாமி கோயில் ஆலய தர்மகர்த்தா பொறுப்பை ஏற்றார். ஆயினும் இவர் இளையவராக இருந்த காரணத்தினால், திரு. இராஜவரோதயம் அவர்களுடைய சகோதரி புவனேஸ்வரியின் கணவர் திரு. சி. சிவானந்தம் அவர்கள் ஆலய முகாமையாளராகப் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் கோயிலில் பல திருப்பணி வேலைகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

பரந்த வெளிவீதி, உள்வீதிகளோடு, கருவறையில் லிங்கத்துடன் வெள்ளி மயிலும், தங்கவேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. மகாமண்டபத்தில் பிள்ளையாரும், வள்ளி தெய்வானை சமேதராக அருள்மிகு முத்துக்குமாரசுவாமியும், தண்டாயுதபாணியும் எழுந்தருளி விக்கிரகங்களாகக் காணப்படுகின்றன. வசந்த மண்டபத்திற்கு அருகில் வைரவருக்குத் தனி ஆலயம் இருந்தது. திரு. சி. சிவானந்தம் அவர்கள் ஆலய தர்மகர்த்தாவாக இருந்தவேளையில் உள்வீதியில் பிள்ளையார், பாலமுருகன், ஆகியோரோடு சண்டேசுவரருக்குத் தனிக்கோயில் அமைத்ததோடு வெளியே நாகதம்பிரானுக்குத் தனிக்கோயிலும் அமைத்தார். அத்தோடு உள்வீதி மண்டபம், வாகனசாலை ஆகியவற்றையும் அமைத்து 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதி அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலின் மூன்றாவது கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்தார். பின்னர் நவக்கிரகங்களுக்குத் தனிக்கோயில் அமைத்து முடித்ததோடு சுவாமி உலாவரும் கட்டுத்தேரைச் சித்திரத் தேராக்கும் பணியில் இருந்தவேளை, திரு. சி. சிவானந்தம் அவர்கள் இயற்கை எய்தினார். இவர் ஆரம்பித்த சித்திரத்தேரை உருவாக்கும் பணி நிறைவு பெற்று 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆந் திகதி வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டது. திருகோணமலையிலுள்ள ஆலயங்களிலே காணப்படும் தேர்களுள் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் சித்திரத்தேர் அதி உயரமானதாகக் காணப்படுகின்றது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் 1995 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய கும்பாபி'கேம் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக நடைபெறாது தடைப்பட்டது. எனினும ஆலயத்திருப்பணிகள் மீண்டும் ஆரம்பிக்கபட்டது. பழுதுபட்டிருந்த கட்டிட வேலைகள் நிறைவேற்றப்பட்டு, கூரைகள் முழுமையாக மாற்றப்பட்டு, சுற்று மண்டபம் புதிய சித்திரத் தூண்களுடன் கட்டப்பட்டது. அத்தோடு தரிசன மண்டபமும், வசந்த மண்டபமும் திருத்தப்பட்டு, ஆலய முன்றல் புதிதாகப் பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டு, நினைவாலயமும் புதுப்பிக்கப்பட்டது. இவற்றோடு ஆலய சுற்றுப்பிரகார ஸ்தூபிகள் யாவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு நான்காவது மகா கும்பாபிஷேகம் 2002 ஆம் ஆண்டு, யூன் மாதம் 27 ஆந் திகதி மிகச் சிறப்பாக நிறைவேறியது. அத்தோடு அருள்மிகு முத்துக்குமாரசுவாமிகோயிலில் சயன அறை அமைக்கப்பட்டது. இதனால் அதிகாலை திருப்பள்ளி எழுச்சியும், முடிவில் அர்த்தஜாமப் பூசையுடன் சேர்த்து ஐந்துகாலப் பூசையும் நடைபெறுகின்றது.

இவ்வாறான கும்பாபிஷேகங்கள் பெரும் பணச் செலவில் ஏன் நடைபெறவேண்டும் என எண்ணத் தோன்றும். சாதரண மனிதர்கள் வாழும் இல்லங்களை அடிக்கடி திருத்தி வண்ணம்பூசி அழகுறச் செய்வது மனித இயற்கை. அவ்வாறே பிரபஞ்சத்தை ஆளும் இறைவன் எழுந்தருளும் இடத்தையும் சிதிலமின்றி வைத்துக் கொள்வது அவசியம். இதன் அடிப்படையிலே ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யும் நிலையை முன்னோர்கள் வகுத்து ஆலயத்தைச் சிதிலமெதுவுமின்றிப் பேணிப் பாதுகாத்துள்ளனர். பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என ஆகமங்களிலே கூறப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டாலன்றி, ஆகமவிதிப்படி பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபி'கேம் நிகழ்த்துவது ஆலய வழக்கமாகக் காணப்படுகின்றது.

மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள் புரியும் இடமே ஆலயம் எனப்படும். இவ்வாறான ஆலயங்கள் காலப்போக்கில் பழுதடைந்தோ, சிதிலமடைந்தோ காணப்படும். ஆலயங்களின் ராஜகோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், கருவறை, பிரகாரங்கள் போன்றவை பழுதுபார்க்கப்பட்டு, அவை புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறும். இச்சந்தர்ப்பத்திலே நடைபெறும் கிரியைகள், யாகங்களின் மூலம் ஆலயங்களிலே மேன்மேலும் தெய்வீக ஆற்றல் அதிகரித்து அருள் வழங்கும் இடங்களாகக் கோயில்கள் விளங்கும். இக்காரணத்தினாலேயே பல்வேறு கிரியைகளை உள்ளடக்கிய கும்பாபிஷேகம் ஆலயங்களிலே நடைபெறுகின்றது.

*வளரும்...*



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 21ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா



## சிறார்களுக்கான போட்டிகள்

## இடம்: சன்னிதி முருகன் ஆலயம்

1085 Bellamy Road, Unit 7-8, Scarborough, Ontario

காலம்: நவம்பர் 19 சனிக்கிழமை (19-11-2022) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

குறிப்பு: பேச்சுப்போட்டியும், திருமுறைமனனப்போட்டியும் ஞாயிற்றுக்கிழமை (13-11-2022) மாலை 3:00 மணிக்கு நடைபெறும்

**தலைவர்: ஈ. மகேந்திரநாதன் (பேரவைத் தலைவர்)**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| இறை வணக்கம் | : | சிவா இந்திரகுமார் (பேரவையின் பொருளாளர்) |
| தேசிய கீதம் | : | |
| தலைமையுரை | : | ஈ. மகேந்திரநாதன் |
| வரவேற்புரை | : | ச. ஶ்ரீமுருகன் (உபதலைவர் இந்து சமயப் பேரவை)) |
| ஆசியுரை | : | பொ. புவனேந்திரன் ஐயர் (ஆலய ஸ்தாபகர்) |
| வாழ்த்துரைகள் | : | செ. சோமசுந்தரம் ( ஆசிரியர் - பேரவைக் காப்பாளர்)<br>ம. செல்வகுமார் ( பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்) |
| சிறப்புரைகள் | : | சிவகுருநாதன் தனசக்தி (பேரவை உறுப்பினர்)<br>பேசும் தலைப்பு - திருமுறையின் மகத்துவம்<br><br>கந்தசாமி தவச்செல்வம்<br>பேசும் தலைப்பு - அப்பர் சுவமிகள் |
| சொற்பொழிவுகள் | : | வைத்தியகலாநிதி இ. லம்போதரன்<br>பேசும் தலைப்பு - தேவாரம் ஏதுக்கடி<br><br>ஆசிரியை கோதை அமுதன்<br>பேசும் தலைப்பு - திருமுறை காட்டும் வாழ்க்கை நெறி<br><br>மீரா இராசையா<br>பேசும் தலைப்பு - ஞானசம்பந்தரின் திருக்கடைக் காப்பு |
| பண்ணிசை | : | ஜனா தயபரன் |
| நடனம் | : | |
| நன்றியுரை | : | சிவா இந்திரகுமார் |
| இறை வணக்கம் | : | திருமதி சண்முகம் இரெத்தினம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240, 416-278-7445**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உதயம் 1388 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 11, 2022

# Autobiography of Dr. Velupillai Elagupillai, a Scientist in Canada

# இலங்கைத் தமிழ் அணு விஞ்ஞானி கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளையின் சுயசரித நூல் கனடாவில் வெளியிடப்பெறவுள்ளது



வட இலங்கையில் ஆவரங்கால் கிராமத்தில் பிறந்தவரும் அங்கு கல்வி கற்று பின்னர் கனடாவில் புலமைப் பரிசு திட்டத்தில் உயர் கல்வியைப் பெற வந்து தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அணு விஞ்ஞானியுமான கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை அவர்களின் சுயசரித நூல் கனடாவில் வெளியிடப்பெறவுள்ளது என்ற நற்செய்தியை இந்த முகநூல்ப் பக்கத்தில் பதிவிடுவதில் அனைவருக்கும் பெருமையே.
(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

## ‘உணர்வூட்டும் உயிரீகம்’ என்னும் மாவீரர்களின் கதைகளை கம்பீரமாகச் சொல்லும் வரிகள் கொண்ட பாடல் இசைத் தட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை 12ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறுகின்றது




## மொன்றியால் “வீணை மைந்தன்” திரு கே.ரி சண்முகராஜாவின் பவள விழா எழுச்சியுடன் இடம்பெற்றது




கடந்த சனிக்கிழமை மாலை கனடா மொன்றியல் திரு முருகன் கோவிலில் மதிப்பிற்குரிய “வீணை மைந்தன்” என்கிற ஐயா திரு கே.ரி சண்முகராஜா அவர்களின் பவள விழா மிகுந்த ஏழுச்சியுடன் இடம்பெற்றது .
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று எத்தனையோ நிகழ்வுகளை நாம் பார்த்திருந்தாலும் இதுபோல ஒரு தரமான இலக்கிய நிகழ்வு மொன்றியலில் நடைபெறுவதுமிகவும்பாராட்டுதற்குரியது. பவள விழா நாயகன் மதிப்பிற்குரிய ஐயா வீணை மைந்தன் அவர்களை பற்றி சொல்ல வேண்டுமானால் எழுத்தாளர், பேச்சாளர், விமர்சகர், ஊடகவியலாளர், நாடக வியலாளர், எளிமையான அன்புக்குரியவர் இப்படி எத்தனையோ விடயங்களை சொல்லிக் கொண்டே போகலாம். (தொடர்ச்சி 26ம் பக்கத்தில்)

## வியட்னாமில் உள்ள இலங்கையர்கள் அனைவரையும் நாட்டுக்கு விமானமூலம் அழைத்துச் செல்ல இலங்கை வெளிவிவகார அமைச்சு முயலுகின்றதா?



சில நாட்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் பயணிகளுடன் தத்தளித்த கப்பலில் இருந்து பயணிகள் பலர் மீட்கப்பட்டிருந்தனர். குறித்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் 76 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. கனடாவிற்குச் நோக்கிச் சென்று

## இசைஞானி இளையராஜாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் திண்டுக்கல் பல்கலைக் கழகத்தில் பிரதமர் மோடி வழங்கவுள்ளார்



இசைஞானி இளையராஜாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளார் பாரதப் பிரதமர் மோடி.
. இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு பிரதமர் மோடி தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்க உள்ளது, திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக் கழகம். மேற்படி பல்கலைகழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி, தமிழக ஆளுனர் ஆர்என் ரவி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர். எப்போதுமே இளையராஜா சந்திக்காத நிலையில், இந்த பட்டமளிப்பு விழாவில் நிகழ்ச்சியில் முதல்முறையாக சந்திக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

MaRadha HOTEL
புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
COLOMBO • SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136